திருக்கோயில்

ஜூலை 1977 ரூ. 1

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
56 5 - 7 - 1977
EGMORE, MADRAS-8.

பாரதப் பிரதமர் மாட்சிமிகு மொரார்ஜி தேசாய் அவர்கள், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வருகைதந்தபொழுது, நமது அறநிலைய ஆணையாளர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்கள், மாலையணிவித்து வரவேற்றல். (17.5.77).

பாரதப் பிரதமர் மாட்சிமிகு மொரார்ஜி தேசாய் அவர்கள், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வருகைதந்து, கோயிற் பிராகாரங்களைப் பார்வையிடுதல். (17.5.77).

115

முகப்பு :

இராசராசேச்சுரம் என்னும்
தஞ்சைப் பெரிய கோயில்

திருக்கோயில்

மாலை : 19 பிங்கள ஆண்டு—ஆடித் திங்கள் ஜூலை—1977 மணி : 10

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

''திருக்கோயில்'' திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள் :

''ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034''

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 12/- உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1-/ வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் சந்தாதாரர் ஆகலாம்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவுசெய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9.60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 15/-ல் இருந்து ரூ. 20/ ஆக ஜனவரி 77 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

சதுரகிரித் தலமாட்சிமை
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,

திவ்விய தேசங்கள் 108
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

திவ்வியப் பிரபந்தச் செழும் பொருட்டிரள்
—திரு பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

ஆழ்வார்கள் காட்டிய அருள்நெறி
—திருமலை நல்லான் இராமகிருஷ்ண ஐயங்கார்

ஆடவல்லான்
—திருமுருக கிருபானந்தவாரியார்

அம்பிகையின் அழகுவெள்ளம்
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

திருமூழிக்களத்து விளக்கு
—டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ.,பிஎச்.டி.

அத்துவித சொரூபம்
—சீலத்திரு. சோமசுந்தர நாயகர்

திருநந்திதேவர்
—திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

திருத்தணிகைத் தலவிளக்கம்
—ஆசிரியர்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

" என் கடன் பணி செய்து கிடப்பதே "

சதுரகிரித் தல மாட்சிமை

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.,

ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

158630

தலங்கள் :

நம் தமிழ்நாடு, புண்ணியத் தலங்கள் பலப்பல நிறைந்த சிறப்புடையது. இப்புண்ணியத் தலங்கள், காடு, மலை, ஆறு, கடற்கரை முதலிய இயற்கையழகு மிக்க பல பகுதிகளிலும் சிறப்புற அமைந்து திகழக் காண்கின்றோம். திருமறைக்காடு, திருவாலங்காடு, தலையாலங்காடு என்னும் தலங்கள், காட்டுநிலப் பகுதிகளைச் சேர்ந்தவை. பழநிமலை, மருதமலை, குற்றாலமலை, திருவண்ணாமலை, திருக்காளத்தி மலை முதலியவை, மலைப்பகுதியைச் சேர்ந்தவை. சோழ நாட்டில் காவிரியாற்றின் தென்கரை வடகரை ஆகிய இரண்டிலும் ஏராளமான கோயில்கள் உள்ளன. அவைகளைப் போன்றவைகளெல்லாம், ஆற்றுப் பகுதியைச் சேர்ந்தனவாகும். இராமேசுவரம், கன்னியாகுமரி, திருச்செந்தூர், வேதாரண்யம், திருக்கடல்மல்லை, திருவொற்றியூர், திருமயிலை முதலியன கடற்கரையைச் சேர்ந்த புனிதத் தலங்களாகும்.

சதுரகிரி :

இத்தகைய பலவகைத் தலங்களில் சதுரகிரி என்பது மலைப்பகுதியைச் சேர்ந்த தலங்கள் பலவற்றில் ஒன்றாகும். ''அதிசயம் அநேகம் உற்ற பழநி'' என்று அருணகிரிநாதர் பாடுவது போல, சதுரகிரி என்னும் இத்தலமும் அதிசயம் அநேகம் உள்ள அருட்பெருந்தலமாகும். சேலம் மாவட்டத்தில், நாமகிரிக்கு அருகேயுள்ள கொல்லிமலையின் சார்பிலும் ''சதுரகிரி'' என்று ஒரு மலை உண்டு. அதன்கண் இருக்கும் 'அறைப்பள்ளி' என்னும் கோயிலிலுள்ள ஈசுவரர்மீது பாடப் பெற்றதே 'அறப்பளீசுவரர் சதகம்' என்னும் நூலாகும். இங்கே குறிப்பிடும் சதுரகிரி, அந்தச் சதுரகிரியினின்று வேறுபட்டது. இத்தலம் மதுரை மாவட்டத்தில் வத்திராயிருப்பு என்னும் இடத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இதற்கு வில்லிபுத்தூர் வழியாகவும், விருதுநகர் வழியாகவும், போகவர வசதிகள் உள்ளன. மலையடிவாரத்திற்கு இரண்டு கல் தொலைவு வரை உந்தூர்திகள் செல்லலாம்.

இயற்கையழகு :

இத்தலத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும், ஒவ்வொரு பக்கத்திற்கும் நான்கு மலைகள் அல்லது கிரிகள் வீதம், பதினாறு கிரிகள் சதுரமாகச் சூழ்ந்துள்ளன. அதனால் இத்தலத்திற்குச் சதுரகிரி எனப் பெயர் அமைந்தது. இத்தலம் மிகச் சிறந்த இயற்கைக் காட்சியழகும், தெய்விகப் புனித இயல்பும் பக்தர்களின் உள்ளத்தைக் கவர்ந்து பரவசப்படுத்தும் தன்மையும் அமைந்து, எல்லையில்லாச் சிறப்புடையதாக இலங்குகின்றது.

சித்தர்கள் :

இயற்கைக் காட்சியழகும், இறையருட் பொலிவும், நிறைந்து சிறந்து விளங்கும் இச்சதுரகிரித் தலத்தில், சித்தர்கள் என்னும் சிறந்த அருளாளர்கள் ஆங்காங்கே தவம் புரிந்து வருவதாக நம்பப்படுகின்றது. அதனால் பற்பல அற்புதக் காட்சிகளும் செயல்களும், இங்கு அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. சித்தர்களின் சிறப்பும் பெருமையும், இத்தகையன என்று நம்மால் அளவிட்டுக் கூறமுடியாதவை. அடியார்களிலும் அருளாளர்களிலும், சித்தர்கள் மிகவும் சிறப்பு வாய்ந்து திகழ்பவர்கள் ஆவர். மாணிக்கவாசகர், தொண்டர்கள் பக்தர்கள் யோகிகள் சித்தர்கள் என்று, இறையருட் பெற்ற சான்றோர்களை வகைப்படுத்தியும் வரிசைப்படுத்தியும் கூறியுள்ளார். தொண்டர்கள் பக்தர்கள் யோகிகள் என்னும் மூவரிலும், மிகப் பெரிதும் மேலானவர்கள் சித்தர்களே என்பது, மாணிக்கவாசகரின் கருத்தாகத் தெரிகின்றது. இறையருளை முழுவதாகச் சித்திக்கப் பெற்றவர்களே, சித்தர்கள் எனலாம்.

> தொண்டர்கள் தூசிசெல்லீர்!
> பத்தர்காள் சூழப்போகீர்!
> ஒண்திறல் யோகிகளே
> பேரணி உந்தீர்கள்!
> திண்திறல் சித்தர்காள்
> கடைக்கூழை செல்மின்கள்!
> அண்டர்நாடு ஆள்வோம்நாம்
> அல்லற்படை வாராமே!

எனவரும் திருவாசகப் பாடலில், மணிவாசகப் பெருமான், சித்தர்களை இறுதிநிலையில் வைத்துச் சிறப்பித்துப் பாடியிருக்கக் காண்கின்றோம். மேலும் சித்தர்களின் பெருமையை வியந்து புகழ்ந்து, தாயுமான சுவாமிகளும் ''வித்தகச் சித்தர்கணம்'' என்ற தலைப்பில் பத்துப் பாடல்கள் பாடியிருக்கின்றார். இத்தகைய பெருமை வாய்ந்த கோரக்கர், இராமதேவர், காலாங்கி முனிவர், சட்டை முனிவர், யூகி முனிவர், அகத்தியர், போகர், புசுண்டர், சுந்தரானந்தர், அழகானந்தர், பிரம்மமுனி, தன்வந்திரி கொங்கணர், முதலிய புகழ்மிக்க சித்தர்கள் பலர், சதுரகிரி மலையிலும், அதன் சாரலிலும் சூழலிலும் மிகுதியாக இருந்து தவம் புரிந்து வாழ்ந்து வருவதாக நம்பப்படுகின்றது.

''ஞானிகளாய் உள்ளார்கள் நான்மறையை
முழுதுணர்ந்து, ஐம்புலன்கள் செற்று,
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியும் முதுகுன்றமே''

என்று திருஞானசம்பந்தர் திருமுதுகுன்றம் என்னும் தலம் பற்றிப் பாடுவதுபோல, சதுரகிரி என்னும் இத்தலமும், அதன்சுற்றுச் சூழல்களும் மிகமிக அழகும் அற்புதமும் அருட்பொலிவும் வாய்ந்ததாக விளங்கி வருகின்றன. இதனை நாம் நம் சொற்களால் புனைந்து கூறி வருணித்து அளவிட்டுரைத்தல் இயலாது! அவரவரும் தாங்களே யாத்திரையாக நேரில் சென்று அநுபவித்தே, உணர்ந்து கொள்ள முடியும். ''உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே'' என்பது தொல்காப்பியம்.

சதுரகிரி யாத்திரை :

இயற்கையழகும், இறையருட் பொலிவும் மிக்க சதுரகிரி மலைக்குப் பக்தர்கள் யாத்திரை சென்று தரிசித்து மகிழ்தல் இன்றியமையாத தாகும். சதுரகிரி மலையைச் சுற்றிக் கயிலாய கிரி, சந்திரகிரி, விஷ்ணுகிரி, மேருகிரி, மகேந்திர கிரி, சஞ்சீவிகிரி, இந்திரகிரி, பிரம்மகிரி, சக்தி கிரி, சிவகிரி, குபேரகிரி, உதயகிரி முதலிய பதினறு சிறு சிறு மலைகள் சூழ்ந்து படர்ந்துள்ளன. மற்றும் தரணிப்பாறை, உதிரைக்குத்திப் பாறை, படிவெட்டிப்பாறை, பசுமிதிப்பாறை, வழுக்கைப் பாறை, பேய்ச்சிப்பாறை, கரும்பாறை, வெள்ளைப்பாறை, கல்யானைப் பாறை என்பன பலவும் அங்கே காணப்படுகின்றன. கவுண்டினிய ஆறு, சங்கணஆறு, காட்டாறு என்னும் ஆறுகள் அங்கங்கே ஓடுவதுடன், அத்தியூற்று, தைலக் கிணறு, துலுக்கன்மொட்டையூரணி, எமபுரம் கானல் என்பவை இங்கு அமைந்துள்ளன.

இம்மட்டோ! கலிங்கநாதர்குகை, கோரக்கர்குகை, சட்டைமுனிகுகை, சுந்தரானந்தர் குகை, தவசுக்குகை, உதயகிரிச் சித்தர்குகை, தத்துவஞான சித்தர்குகை, எனப்படும் பல குகைகளையும் இங்குக் காணலாம். மேலும் அங்கே சித்தர்கள் பெயரால் ஆச்சிரமங்கள் பல அமைந்திருக்கின்றன. அத்திரிமகிரிஷி, யூகி முனிவர், அழகானந்தர், பிரம்மமுனி, தன்வந்திரி, கொங்கணவர், பிரிஞ்சகர், ஆகாயகமனர், மேகசஞ்சாரர், காளமாமுனிவர், யாக்கோபு முனிவர், பிருங்கி முனிவர் ஆகியோரின் ஆச்சிரமங்கள் ஆகிய பலவும், நேரில் கண்டு களிக்கத்தக்கன.

இவற்றிற்கெல்லாம் மேலாக, சதுரகிரி மலைத்தலத்தில் பல இடங்களில் பற்பல சிறு கோயில்களும் உள்ளன. கருப்பண சுவாமி கோயில், சுந்தரலிங்கர்கோயில், மகாலிங்கர் கோயில், சந்தனமகாலிங்கர் கோயில், வெள்ளைப் பிள்ளையார்கோயில், கன்னிமார்கோயில், பண்டாரப்பன் கோயில் என்னும் கோயில்களைச் சதுரகிரி யாத்திரையின்போது பக்தர்கள் பெரிதும் தரிசித்து மகிழலாம்.

விழாக்கள் :

சதுரகிரி என்னும் இந்தத்தலம், ஓங்கி யுயர்ந்த எழில்மிக்க மலைகளுக்கிடையில், பச்சைப் பசேரென்று, அடர்ந்து படர்ந்த அழகிய காடுகளுக்கிடையில், யானை முதலிய வன விலங்குகள் நிறைந்த சிறந்த பகுதியாகத் திகழ்கின்றது. ''செல்லல் உற அரிய சிவன் சீபர்ப்பத மலை'' என்று, சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஸ்ரீசைலம் என்னும் புகழ்மிக்க சிவத்தலத்தினைக் குறிப்பிடுவதுபோல, இச்சதுரகிரி மலையும் நம்மனோர் எளிதில் செல்வதற்கு அரிய தொன்றாக உள்ளது. எனினும், காடுகளும் மலைகளும் கலந்து செறிந்து, இருளும் நிழலும் தண்மையும் ஒண்மையும் பசுமையும் அமைதியும் நிறைந்து, காண்போர் உள்ளங்களைக் களிதுளும்பச் செய்யும் கடவுட் பெருங் காட்சியும் கவினும் மிகுந்து விளங்குகின்றது, இந்தச் சதுரகிரி என்னும் எழில்மிக்க இனிய தலம்!

''நாணனே தோன்றும் குன்றில்
நண்ணுவோம் என்ன, நாணன்
காணநீ போதின் நல்ல
காட்சியே காணும்! இந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி
மலைமிசை எழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர்
இருப்பர்கும் பிடலாம் என்றான்''

''ஆவதென்? இதனைக் கண்டிங்கு
அணைதொறும் என்மேற் பாரம்
போவதொன் றுளது போலும்;
ஆசையும் பொங்கி மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர்
விருப்புற விரையா நிற்கும்;
தேவரங் கிருப்ப தெங்கே?
போக என்றார் திண்ணனார் தாம்''

எனவரும் இனிய பெரியபுராணப் பாடல்களை நினைப்பிக்கும் நிலையில், ஒருவகையில் திருக்காளத்தி மலையைப் போன்று திகழும் இச்சதுரகிரி மலைத் தலத்தின்கண், நல்லபல இயற்கைத் தெய்விகக் காட்சிகள் அமைந்திருப்பதுடன், சுந்தரமகாலிங்க சுவாமி என்னும் பெயரில், சித்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, சிவபெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கின்றார். அதனால் இங்கு ஆடி அமாவாசை, புரட்டாசி நவராத்திரி, மார்கழித் திருவாதிரை, ஆகிய விழாக்களின்போது லட்சக்கணக்கில் பக்தர்கள் கூட்டம் யாத்திரையாக வந்து தரிசித்து மகிழ்ந்து செல்லுகின்றனர். அங்ஙனம் வந்து தரிசித்துச் செல்லும் பக்தர்கள் பலருக்கும் பலவகையான நலங்கள் பெருகுகின்றன. அவர்கள் நினைத்த செயல்கள் யாவும் நிறைவேறுகின்றன. அவர்களின் வாழ்க்கையில் பற்பல நல்ல அற்புத, விளைவுகளும், அருள் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

கோயிலும் திருப்பணியும் :

மலைகளின் நடுவே காடுகளுக்கு இடையே, யானை முதலிய வனவிலங்குகள் நிறைந்த நிலையில், எளிதாகச் செல்வதற்கு இயலாமல் இருப்பதனால், ஒரு சில தீவிர பக்தர்கள் கூட்டம் மட்டுமே, இங்கு அவ்வப்போது சென்று வழிபட்டு வருகின்றனர். இத்தலத்தின் சிறப்பையும், தெய்விகத் தன்மையையும் மக்கள் எல்லோருமே உணர்ந்து கொள்ளவும், இங்கு அவ்வப்

போது யாத்திரை சென்று தரிசித்து அவரவர் தாம்தாம் விரும்பும் நலங்களையெல்லாம் பெறவும், வேண்டும். இங்கே யானைகள் மிகுதியாக இருப்பதனுல், அவைகள் மோதியும் முட்டியும் கோயில்கள் சிதைந்து விழுந்து போகின்றன. ஆதலின், இப்போது இங்குக் கோயில் எதுவும் பெரிய அளவில் சிறப்பான முறையில் அமைந் திருக்கவில்லை. எனினும் இங்கு மிக விரைவில், சிறந்த முறையில், பெரிய அளவில், கோயில் ஒன்று அமைக்கப் பக்தர்கள் பலர் பெரிதும் முயன்று வருகின்றனர். அவர்களின் முயற்சிகளும் திட்டங்களும், விரைவில், அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமியின் திருவருளால் நிறைவேறுவதற்கு உள்ளது. அதற்கு நமது அறநிலையத்துறையும் மிக்க ஆக்கமும் ஊக்கமும் அளித்துச் செயலாற்றி வருகின்றது. தற்போது இத்தலம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயில் நிர்வாகத்தினரின் மேற்பார்வையில் இருந்து வருகின்றது. சாப்ட்டூர் ஜமீன்தாரர் அவர்கள், இத்தலத்தின் வளர்ச்சிக்கும், திருக்கோயில் அமைப்பிற்கும் பெரிதும் முயன்று பணியாற்றி வருகின்றூர்.

வேண்டுகோள் :

ஒரு தலத்திற்கு மூர்த்தி-தலம்-தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புகளும் அமைந்திருத்தல் வேண்டும் எனப் பெரியோர்கள் கூறுவர். அம்முறையில், சதுரகிரியில் மூர்த்தி-தலம்-தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புகளும் குறைவற நிறைந்துள்ளன. இத்தலத்தைப் பக்தர்கள் யாவரும் யாத்திரையாகச் சென்று தரிசித்து மகிழ்வதுடன், இங்கு அமைக்கப்பெற இருக்கும் அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி திருக்கோயில் திருப்பணிக்கும், எல்லா வகைகளிலும் இயன்ற வரையில் உதவிகள் பல செய்து, இம்மை, மறுமை நலங்களையெல்லாம் எய்தி இன்புறுவார்களாக!

திருவாய் மொழி

யாவையும் எவரும் தானுய், அவரவர் சமயந் தோறும்
தோய்விலன் ; புலன் ஐந்துக்கும் சொலப்படான் ; உணர்வின் மூர்த்தி;
ஆவிசேர் உயிரின் உள்ளால் ஆதும்ஓர் பற்று இலாத
பாவனை அதனைக் கூடில், அவனையும் கூடலாமே!

நண்ணுதார் முறுவலிப்ப, நல்உற்ருர் கரைந்து ஏங்க,
எண் ஆராத் துயர்விளைக்கும் இவைஎன்ன உலகியற்கை ?
கண்ணுளா! கடல்கடைந்தாய்! உனகழற்கே வரும்பரிசு,
தண்ணுவாது அடியேனைப் பணிகண்டாய்! சாமாறே.

கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவி
கண்ட இன்பம், தெரிவுஅரிய அளவுஇலாச் சிற்றின்பம்!
ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப,
கண்ட சதிர் கண்டொழிந்தேன் ; அடைந்தேன் உன் திருவடியே!

—"நம்மாழ்வார்"

திவ்விய தேசங்கள் 108

[திரு ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை :

நமது இந்தியப் பாரததேசம் உலகிலேயே மிகவும் ஒப்புயர்வற்ற சிறப்புடையது. பிற தேசங்களை நோக்க, நமது இந்தியப் பாரதநாடு மிகவும் புண்ணிய பூமியாகும். தொன்று தொட்டுப் பெரியவர்கள் பலரும் இதனை உணர்ந்து வற்புறுத்தியிருக்கின்றார்கள். *வினைப் பயன்களை நுகரவும், இறையருளைப் பெறவும், பெருந்தகைமை கொடைவண்மை தூய்மை, அமைதி உள்ளொளி ஆன்மிகம் முதலிய உயரிய குண நலங்களைப் பெறவும், இப்புண்ணிய பூமியிற் பிறப்பது பெருந்துணை புரிகின்றது. எனவே, தேவர்களும் இப்புண்ணிய பூமியில் வந்து பிறக்க விரும்புகின்றனர் என்கிறார் மணிவாசகர். இங்ஙனம் விண்ணுலகத்துத் தேவர்களும் மண்ணுலகிற் போந்து வழிபட்டுள்ள தலங்கள் எண்ணில்லாத பல, நம் பாரததேசத்திலும், தமிழ்நாட்டிலும் உள்ளன.

அத் தெய்வத் திருத்தலங்களின் பெருமையை அறிந்து கொள்ளவும், அங்கெல்லாம் சென்று கண்டு இறைவனைத் தரிசித்து வழிபட்டு உய்யவும், நாம் முயலுதல் வேண்டும். தெய்வத் திருத்தலங்களின் சிறப்பும், தல வழிபாட்டின் மேன்மையும், நாம் பெரிதும் உணர்ந்து போற்றுதற்குரியன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் தலயாத்திரை செய்து, தலங்கள்தோறும் சென்று, இறைவனைப் பாடிப்பரவி வழிபட்டு மகிழ்ந்திருக்கின்றனர். அத்தகைய அருளாளர்களும் ஞானிகளும், தலயாத்திரையையும் தல வழிபாட்டையும் இன்றியமையாப் பெருஞ் சிறப்பியற் கடமையாகக் கருதிக் கடைப்பிடித்திருக்கின்றனர் என்றால், நம்மனோர்க்கெல்லாம் தலவழிபாடு எவ்வளவு முதன்மை வாய்ந்தது என்பதனைச் சொல்ல வேண்டுவதில்லை.

தலயாத்திரை :

தலயாத்திரையும் வழிபாடும் மேற்கொள்ளுவதனால், நாம் எய்தும் நலங்களுக்கு அளவேயில்லை. துன்பமும் துயரமும் நிறைந்த இவ்வுலகில், நம்முடைய குறுகிய வாழ்நாளில் நாம் அடையக்கூடிய ஏதோ ஒரு சிறு இன்பங்களில் உண்மையானதும், உயர்ந்ததும் ஒப்புயர்வற்றதும் தலயாத்திரைக்ளால் பெறும் இன்பமே எனலாம். தலயாத்திரையால் நாம் நம் கவலைகளை மறக்கின்றோம்; நம் மாசுகள் அகன்று ஓரளவேனும் புனிதம் அடைகின்றோம். காணாத இடங்களையும் காட்சிகளையும் கண்டு களிக்கின்றோம். கேளாத செய்திகள் பலவும் கேட்டுணர்ந்து கிளர்ச்சியும் வளர்ச்சியும் பெறுகின்றோம்.

நாட்டின் பல பகுதிகளில் உள்ள பல மக்களைக் கண்டு பழகி, நாட்டு வளப்பங்களை அறிந்து கொள்கின்றோம். தலவழிபாட்டால் நம் உள்ளமும் உணர்வும், புத்துணர்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றன. நம் உள்ளம் விரிவடைகின்றது. உணர்வு பண்படுகின்றது. இறையருளும் பக்தியும் படிமுறையே நம்மிடம் வளர்ந்து ஓங்குகின்றன. நாம் நம் முன்னோர்களுடைய அருமை பெருமைகளையும், அழகிய வரலாறுகளையும், அரும்பெரும் செயல்களையும் கண்டும் உணர்ந்தும் களிப்புறுகின்றோம்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் போன்ற சான்றோர்கள்பாடிய சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று தரிசிக்குங்கால், நமக்கும் அவர்களின் அருளாற்றல் ஓரளவு பதிகின்றது. காலமும் இடமும் வேறுபட்டுக் கடந்திருப்பினும், நாம் அவர்களோடு மானதத் தொடர்பு கொள்ளுகின்றோம். அவர்களை நாம் நேரே காண இயலாவிட்டாலும், அவர்களின் தொடர்பு பெற்ற தலங்களையும், கோயில்களையும் காணுகின்றபோது, ஒருவகையில் அவர்களை நேரே காண்பது போன்ற உணர்ச்சியும், மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுகின்றன.

''மனிதன் ஒருவன் எய்துதற்காம்
வாழ்வின் இன்பம் பலவற்றுள்
புனித நமது பாரதத்திற்
பொலியும் திவ்ய தேசங்கள்
எனும்நற் றலங்கள் கண்டுதொழும்
இன்பிற் சிறந்த தொன்றில்லை ;
நனிநன் றுயர்ந்த அப்பேற்றை
நலமே அடைய முயன்றுய்வோம்!''

---

* "To-day I stand here and say, with the conviction of truth, that this is the Punya Bhumi, the land of Karma. If there is any land on earth that can lay claim to be the blessed Punya Bhumi, to be the land to which all souls on this earth must come to account for Karma, the land to which every soul that is wending its way Godward must come to attain its last home, the land where humanity has attained its highest towards gentleness towards purity, towards calmness above all the land of introspection and of spirituality, its abode is INDIA."

—Swami Vivekananda.

''பொங்குநற் பக்தி வெள்ளப்
புணரியில் திளைத்து மூழ்கி
நன்குயர் ஆழ்வார்கள்தாம்,
நலமிகப் பணிந்தி றைஞ்சி
மங்களா சாச னம்செய்
வைணவத் தலங்கள் யாவும்,
இங்குநாம் கண்டு போற்றல்
இனியநற் கடமை யாகும்.''

—ந. ரா. மு.

திவ்விய தேச யாத்திரை செய்தலின் சிறப்பைத் திருமங்கையாழ்வார் ''பதியே பரவித் தொழும் தொண்டர் தமக்குக் கதியே'' என்பதனல் இனிது விளக்குகின்றார். ''கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை என்று மண்டினர் உய்யலல்லால் மற்றையார்க்கு உய்ய லாமே'' என்பதனல் திவ்விய தேசங்களில் ஈடுபடாதவர்களுக்கு உய்யும் விரகு இல்லை என்றும் அவ்வாழ்வார் அருளிச் செய்கின்றார்.

ஆதலின் பொய்கையாழ்வார் முதலாகத் திருமங்கையாழ்வார் முடிவாக உள்ள ஆழ்வார்கள் பதின்மரும், பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்கொடியான ஆண்டாளும் பாடிய திவ்வியப் பிரபந்தங்களில், மங்களாசாசனம் செய்யப் பெற்றுள்ள நூற்றெட்டுத் திவ்விய தேசங்கள் பற்றிய சில குறிப்புகள், இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

சோழநாட்டுத் திருப்பதிகள், 40.

1. ஸ்ரீரங்கம்—2. உறையூர்—திருச்சிக்கு அருகில் உள்ளன.

3. தஞ்சை மாமணிக்கோயில்-(நீலமேகப் பெருமாள்); தஞ்சாவூருக்கு வடக்கே தஞ்சையாளி (நரசிம்மர்), மணிக்குன்றப்பெருமாள் (இராமர்) என்னும் இரண்டு சந்நிதிகளும் இங்கு உள்ளன.

4. அன்பில்-வடிவழகியநம்பி. லால்குடி ஸ்டேஷனில் இருந்து ஐந்துகல். திருச்சியில் இருந்து பஸ் உண்டு.

5. கரம்பனூர் (உத்தமர்கோயில்)-திருச்சிகோட்டை நிலையத்தில் இருந்து வடக்கே 5 கல்.

6. திருவெள்ளறை - புண்டரீகாக்ஷன். திருச்சி-துறையூர் பஸ்மார்க்கத்தில் உள்ளது.

7. புள்ளம்பூதங்குடி-வல்வில் இராமன். சுவாமிமலை-கும்பகோணத்தில் இருந்து பஸ் உண்டு. இதற்கு அருகில் தொண்டரடிப் பொடியாழ்வார் அவதரித்த மண்டங்குடி உள்ளது.

8. திருப்பேர்நகர் (கோயிலடி)-அப்பக் குடத்தான். லால்குடியில் இருந்து ஆறுகல்.

9. ஆதனூர்-ஆண்டு அளக்கும் ஐயன். சுவாமிமலையில் இருந்து 2 கல்.

10. திருவழுந்தூர் (தேரழுந்தூர்)-ஆமருவியப்பன். மாயூரம்-கும்பகோணம் இருப்புப் பாதையில், குத்தாலம் நிலையத்திற்கு அடுத்தது.

11. சிறுபுலியூர்-அருமாகடல். கொல்லுமாங்குடி நிலையத்தில் இருந்த ஒரு கல்.

12. திருச்சேறை-சாரநாதன். கும்பகோணத்தில் இருந்து தென்கிழக்கில் ஏழு கல்.

13. தலைச்சங்கநாண்மதியம்-நாண்மதியப் பெருமாள், வியோமஜோதி. தரங்கம்பாடி இருப்புப்பாதையில், ஆக்கூர் நிலையத்தில் இருந்து இரண்டு கல்.

14. திருக்குடந்தை-சாரங்கபாணிப்பெருமாள், ஆராவமுது. கும்பகோணம்.

15. கண்டியூர்-அரசாபம் தீர்த்த பெருமாள். தஞ்சை-திருவையாறு செல்லும் பாதையில் ஆறுவது கல்.

16. திருவிண்ணகர்-ஒப்பிலியப்பன். கும்பகோணத்தில் இருந்து நான்கு கல்.

17. திருக்கண்ணபுரம் — சௌரிராஜப் பெருமாள். நன்னிலம் நிலையத்தில் இருந்து, நாகூர் போகும்பாதையில் நான்காவது கல்.

18. திருவாலி (திருநகரி)-வயலாலி மணவாளன். சீகாழி நிலையத்தில் இருந்து தென்கிழக்கே ஆறுகல்.

19. திருநாகை-நாகப்பட்டினம். சௌந்தரராஜப்பெருமாள். நாகூர் என்னும் இசுலாமியத் தலமும், வேளாங்கண்ணி என்னும் கிறித்தவத் தலமும் இதற்கு அருகில் உள்ளன.

20. திருநறையூர்-கும்பகோணம் அருகில் உள்ளது. பஸ்வசதி உண்டு.

21. நந்திபுர விண்ணகரம்(நாதன்கோயில்)-விண்ணகரப் பெருமாள். ஜகந்நாதர். கும்பகோணத்தில் இருந்து தென்மேற்கே மூன்றுகல்.

22. இந்தளூர்-பரிமளரங்கன். மாயூரம் நிலையத்தில் இருந்து கிழக்கே மூன்றுகல்.

23. திருச்சித்திரகூடம் (சிதம்பரம்)-கோவிந்தராஜப் பெருமாள். நடராஜர்கோயிலின் உள்ளே இருப்பது.

24. காழிச் சீராமவிண்ணகரம் (சீர்காழி)-தாடாளன், திரிவிக்கிரமமூர்த்தி. சீர்காழி நகரில் உள்ளது.

25. கூடலூர் (ஆடுதுறைப் பெருமாள் கோயில்)-வையம் காத்தபெருமாள். ஐயம் பேட்டை நிலையத்தில் இருந்து வடக்கே நான்கு கல்.

26. திருக்கண்ணங்குடி - சியாமளமேனிப் பெருமாள். கீழ்வேளூர் (கீவளூர்) நிலையத்திற்குக் கிழக்கே இரண்டு கல்.

27. திருக்கண்ணமங்கை - பக்தவத்சலப் பெருமாள். திருவாரூர்க்கு வடமேற்கில் நான்கு கல்.

28. கவித்தலம்-கஜேந்திரவரதர். பாபநாசம் நிலையத்தில் இருந்து வடக்கே இரண்டு கல்.

29. திருவெள்ளியங்குடி — கோலவில் இராமன். திருவிடைமருதூர்க்கு வடக்கே ஐந்துகல்.

30. மணிமாடக்கோயில்-நந்தா விளக்குப் பெருமாள், நர நாராயணர், தை அமாவாசையில் 11 கருடசேவை. சீர்காழிக்குக் கிழக்கே ஐந்துகல்.

31. வைகுந்த விண்ணகரம் - வைகுந்த நாதன். சீர்காழிக்குத் தெற்கே ஒரு கல்.

32. அரிமேய விண்ணகரம் - குடம்ஆடு கூத்தர். சீர்காழிக்குக் கிழக்கே ஐந்து கல்.

33. திருத்தேவனார்தொகை - தெய்வ நாயகப் பெருமாள். சீர்காழிக்குத் தென் கிழக்கே நான்கு கல்.

34. வண்புருடோத்தமம்-புருடோத்தமர். சீர்காழிக்குத் தென்கிழக்கே ஐந்து கல்.

35. செம்பொன்செய்கோயில் - பேரருளாளர். சீர்காழிக்குக் கிழக்கே ஐந்து கல்.

36. திருத்தெற்றி அம்பலம்-செங்கண் மால். சீர்காழிக்குக் கிழக்கே ஐந்துகல்.

37. திருமணிக்கூடம்-மணிக்கூட நாயகன் சீர்காழிக்குக் கிழக்கே ஐந்து கல்.

38. காவளம்பாடி - கோபாலகிருஷ்ணன். சீர்காழிக்குக் கிழக்கில் ஏழுகல்.

39. திருவெள்ளக்குளம் - கண்ணன் நாராயணன். சீர்காழிக்குத் தென்கிழக்கே ஏழு கல்.

40. பார்த்தன்பள்ளி-தாமரையாள் கேள்வன். சீர்காழிக்குத் தென்கிழக்கே ஏழுகல்.

பாண்டிநாட்டுத் திருப்பதிகள், 18.

41. திருமால்இருஞ்சோலை — அழகர், கள்ளழகர். மதுரைக்குப் பன்னிரண்டு கல். நூபுரகங்கை விசேடம்.

42. திருக்கோட்டியூர் - உலகமெல்லணையான், சௌம்ய நாராயணன்.

43. திருமெய்யம்-சத்தியகிரிநாதன். சத்தியமூர்த்தி. திருச்சிக்குத் தெற்கே 45 கல். புதுக்கோட்டை மாவட்டம்.

44. திருப்புல்லாணி (தர்ப்பசயனம்)-கல்யாண ஜகந்நாதர், தெய்வச்சிலையார். இராமநாதபுரத்திற்குத் தெற்கே ஆறுகல். திருப்புல்லணை எனவும் வழங்கும்.

45. திருத்தண்கால் - தண்கால்அப்பன். சிவகாசிக்கு இரண்டு கல்.

46. திருமோகூர்-காளமேகப் பெருமாள். மதுரைக்குக் கிழக்கே ஏழு கல்.

47. திருக்கூடல் (தென்மதுரை)-கூடல் அழகர். மதுரையில் உள்ளது. பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு, இக்கோயிலிலேயே பாடப்பெற்றது.

48. ஸ்ரீவில்லிபுத்தூர் - வடபத்ரசயனர், ரங்கமன்னர். பெரியாழ்வார், ஆண்டாள் அவதரித்த தலம். மதுரைக்கு அருகில் உள்ளது.

49. திருக்குருகூர் (ஆழ்வார்திருநகரி)-ஆதிநாதப்பெருமாள். பொலிந்து நின்றபிரான். நம்மாழ்வார் அவதாரத் தலம். ஆழ்வார் திருநகரி நிலையத்தில் இருந்து ஒரு கல்.

50. தொலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி)-தேவபிரான். அரவிந்த லோசனன். ஆழ்வார் திருநகரிக்குக் கிழக்கே இரண்டுகல்.

51. சிரீவரமங்கலம் (வானமாமலை, நாங்குநேரி)-வானமாமலைப் பெருமாள். தோதாத்திரிநாதன். திருநெல்வேலி-நாகர்கோயில் பாதையில் பதினெட்டாவது கல்.

52. திருப்புளிங்குடி - காய்சினவேந்தன். ஸ்ரீவைகுண்டம் நிலையத்தில் இருந்து இரண்டு கல்.

53. திருப்பேரை - மகரநெடுங்குழைக் காதர். ஆழ்வார் திருநகரிக்குத் தென்கிழக்கே மூன்றுகல்.

54. ஸ்ரீவைகுண்டம் — கள்ளப்பிரான். திருச்செந்தூர்க்கு அருகில் உள்ள ஓர் இருப்புப் பாதை நிலையம்.

55. வரகுணமங்கை — விஜயாசனர். ஸ்ரீவைகுண்டத்திற்குக் கிழக்கே ஒன்றரை கல்.

56. திருக்குளந்தை (பெருங்குளம்)-மாயக்கூத்தன். ஸ்ரீவைகுண்டத்திற்கு வடகிழக்கே ஏழு கல்.

57. திருக்குறுங்குடி - வைஷ்ணவநம்பி. சேரமாதேவிக்குத் தெற்கே பதினறுகல்.

58. திருக்கோளூர்-வைத்தமாநிதி. மதுரகவியாழ்வார் அவதாரத்தலம். ஆழ்வார் திருநகரியில் இருந்து ஒரு கல்.

மலைநாட்டுத் திருப்பதிகள், 13.

59. திருவனந்தபுரம் — அனந்தபத்ம

நாபன். நிலையத்தில் இருந்து ஒரு கல் தொலை வில் கோயில் உள்ளது.

60. திருவண்பரிசாரம்-திருக்குறளப்பன், திருவாழ்மார்பன். நாகர்கோயிலுக்கு வடக்கே இரண்டு கல்.

61. திருக்காட்கரை-காட்கரை அப்பன். எர்ணுகுளம் நிலையத்தில் இருந்து ஏழு கல்.

62. திருமூழிக்களம் - திருமூழிக்களத் தான். அப்பன் சூக்தி நாதப்பெருமாள். கரிக் குட்டி நிலையத்தில் இருந்து மூன்று கல்.

63. திருப்புலியூர் (குட்டநாடு)-மாயப் பிரான். திருச்செங்குன்றூரில் இருந்து மேற்கே நான்கு கல்.

64. திருச்செங்குன்றூர் - இமையவர் அப்பன். கோட்டாரக்கரையில் இருந்து கோட் டயம் போகும் பாதையில் முப்பதாவது கல்.

65. திருநாவாய் - நாவாய்முகுந்தன். நாராயணன். திருநாவாய் நிலையத்திற்கு அருகில் உள்ளது.

66. திருவல்லவாழ் - கோலப்பிரான். கண்டாகர்ணன் அருள்பெற்ற இடம். கோட் டாரக்கரையில் இருந்து முப்பத்தாறு கல்.

67. திருவண்வண்டூர்-பாம்பணை அப்பன், கமலநாதன். திருச்செங்குன்றூரில் இருந்து கோட்டயம் போகும் பாதையில் மழுக்கூரில் இறங்கி, இரண்டு கல் செல்லுதல் வேண்டும்.

68. திருவாட்டாறு-ஆதிகேசவப்பெருமாள். நாகர்கோயிலில் இருந்து திருவனந்தபுரம் போகும் பாதையில் 24-ஆவது கல்.

69. திருவித்துவக்கோடு - உய்யவந்த பெருமாள், அபயப் பிரதப்பெருமாள். பட் டாம்பி நிலையத்தில் இருந்து ஒருகல்.

70. திருக்கடித்தானம் - அமிர்தநாரா யணன். அற்புத நாராயணன். திருவல்ல வாழுக்கு வடக்கே மூன்றுகல்.

71. திருவாறன்விளை-திருக்குறள் அப்பன், சேஷாசனர். திருச்செங்குன்றூரில் இருந்து கிழக்கே ஏழுகல்.

நடுநாட்டுத் திருப்பதிகள்-2.

72. திருவகீந்திரபுரம் - தெய்வநாயகன். வேதாந்த தேசிகர் இளமையில் வாழ்ந்திருந்து, அயக்கிரீவர் அருள்பெற்றதலம். அவர் திரு மாளிகையும், திருக்கிணறும் இன்றும் உள்ளன. திருப்பாதிரிப்புலியூர் (புதியகடலூர்) நிலையத் தில் இருந்து மேற்கே மூன்றுகல் தொலைவில் உள்ள திவ்வியதேசம்.

73. திருக்கோவலூர்-திரிவிக்கிரமர். முத லாழ்வார்கள் மூவரும் ஒன்று சேர்ந்து ஞான விளக்கேற்றி, வைணவம் வளர்த்த தலம். விழுப் புரம்-காட்பாடி இருப்புப்பாதையில் உள்ள ஒரு நிலையம்.

தொண்டைநாட்டுத் திருப்பதிகள்-22.

74. திருக்கச்சி-(காஞ்சிபுரம், அத்தியூர்)- வரதராஜப்பெருமாள், பேரருளாளன், பெருந் தேவித்தாயார். திருக்கச்சிநம்பிகள், எம்பெரு மானர், கூரத்தாழ்வார் முதலிய வைணவப் பெரும் சான்றோர்கள் வாழ்ந்த திவ்வியதேசம்.

75. அட்டபுயகரம் (காஞ்சிபுரம்)-ஆதி கேசவப்பெருமாள்.

76. திருத்தண்கா (தூப்புல், காஞ்சிபுரம்) விளக்கொளிப்பெருமாள், தீபப்பிரகாசர், சுவாமிவேதாந்த தேசிகர் அவதாரத் தலம்.

77. வேளுக்கை (காஞ்சிபுரம்) - அழகிய சிங்கர், முகுந்த நாயகன்.

78. பாடகம் (பாண்டவதூதர் சந்நிதி, காஞ்சிபுரம்)-பாண்டவதூதப் பெருமாள், ருக் மிணி சத்தியபாமை.

79. திருநீரகம் (காஞ்சிபுரம்)-செகதீசப் பெருமாள். அக்ரூரர் அருள்பெற்ற திவ்விய தேசம். உலகளந்தபெருமாள்கோயிலில் உள் ளது.

80. நிலாத்திங்கள் துண்டம்-காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர்கோயில் முதல் பிராகாரத்தில் வடகிழக்கு மூலையில் உள்ள சந்நிதி.

81. ஊரகம்-காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயில். திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் பட்டராக இருந்து பணி யாற்றிய திவ்வியதேசம். திருவிக்கிரமர் உரகம் என்னும் ஆதிசேடனுக்கு அருள்புரிந்த தலம்.

82. திருவெஃகா (காஞ்சிபுரம்)-சொன்ன வண்ணம் செய்த பெருமாள், யதோக்தகாரி, பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், கணி கண்ணர் ஆகியவர்களுக்கு அருள்புரிந்த தலம். பொய்கையாழ்வார் இத்திவ்விய தேசத்தி லுள்ள புஷ்கரணியிலேயே அவதாரம் செய் தார்.

83. திருக்காரகம் (காஞ்சிபுரம்)-கருணா கரப்பெருமாள். உலகளந்த பெருமாள் கோயி லில் உள்ளது.

84. திருக்கார்வானம் (காஞ்சிபுரம்)- கள்வர்பெருமாள், நவநீதசோரன், காஞ்சிபுரம் உலகளந்தபெருமாள் கோயிலில் உள்ளது.

85. திருக்கள்வனூர் (காஞ்சிபுரம்)-ஆதி வராகப்பெருமாள். இது காஞ்சிபுரம் காமாட்சி யம்மைகோயிலில் உள்ளது.

86. திருப்பவளவண்ணம் (காஞ்சிபுரம்)- பவளவண்ணப் பெருமாள். பார்வதிக்குப் பிரத்தியட்சம்.

87. பரமேச்சுவர விண்ணகரம் (காஞ்சிபுரம்)-பரமேசுவரவர்ம பல்லவன் (கி.பி. 705-710) கட்டியகோயில். வரலாற்றுச் சிற்பங்கள் நிறைந்த சிறப்புடையது. வைகுண்டப்பெருமாள் கோயில் என வழங்குகின்றது.

88. திருப்புட்குழி-விஜயராகவப் பெருமாள். ஜடாயுவுக்குப் பிரத்தியட்சம். காஞ்சிபுரத்திற்குத் தென்மேற்கில் 7 கல் தொலைவில் உள்ளது.

89. திருநின்றவூர்-பக்தவத்சலர், பக்தர் ஆவிப்பெருமாள். சென்னை - அரக்கோணம் இருப்புப்பாதையில் தின்னனூர் நிலையத்திற்குத் தெற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது.

90. திருவெவ்வுள் (திருவள்ளூர்)-வீரராகவப் பெருமாள், கனகவல்லித் தாயார். சென்னை-அரக்கோணம் இருப்புப்பாதையில் 26 கல் தொலைவில் உள்ளது.

91-திருநீர்மலை-நீலமுகில் வண்ணர், அரங்கநாதர். சென்னை-பல்லாவரத்திலிருந்து மூன்று கல் தொலைவில் உள்ளது.

92. திருவிடவெந்தை - நித்தியகல்யாணப் பெருமாள். சென்னை மாமல்லபுரம் பாதையில் 25-வது கல்லிலுள்ள திவ்வியதேசம்.

93. திருக்கடல்மல்லை (மகாபலிபுரம்)-தலசயனப் பெருமாள், ஞானப் பிரான். பூதத்தாழ்வாரின் அவதாரத்தலம். சென்னையிலிருந்து கடலோரமாகச் செல்லும் பேருந்துப் பாதையில் தெற்கே 30 மைல் தொலைவில் உள்ளது. பல்லவச் சிற்பங்கள் சிறப்பாகக் காணத்தக்கவை.

94. திருவல்லிக்கேணி - சென்னையிலுள்ள பார்த்தசாரதிப் பெருமாள் கோயில். இக்கோயிலில் மந்நாதர் என்னும் அரங்கநாதர், தெள்ளியசிங்கர் என்னும் நரசிம்மர், பரத இலக்குவ சத்ருக்ன சீதாப்பிராட்டியுடன் உள்ள இராமபிரான், கஜேந்திரவரதர் சந்நிதிகள் கண்டு களிக்கத்தக்கவை.

95. திருக்கடிகை (சோளசிங்கபுரம், சோளிங்கபுரம், கடிகாசலம்)-யோக நரசிம்மர், தக்கான், அக்காரக்கனிப்பெருமாள், பக்த உசிதசுவாமி. அரக்கோணம்-காட்பாடி இருப்புப்பாதையில் சோளிங்கபுரம் நிலையத்திலிருந்து எட்டுக் கல்.

வடநாட்டுத் திருப்பதிகள்-11.

96. திருவேங்கடம் (திருமலை, திருப்பதி)-ஸ்ரீநிவாசப் பெருமாள், ஏழுமலையான், அலர்மேல்மங்கைத் தாயார்.

97. சிங்கவேள்குன்றம் (அகோபிலம்)-ஆந்திரப் பிரதேசத்தில் நந்தியால் நிலையத்திலிருந்து 37 கல் தொலைவில் உள்ளது. இங்கு ஒன்பது நரசிம்மர்கள் எழுந்தருளியுள்ளனர். சுவாமி பிரகலாத வரதர், தாயார் இலட்சுமி நாச்சியார்.

98. திருஅயோத்தி-இராமபிரான் அவதாரத் தலம். முக்திதரும் நகர். ஏழில் முதலாவது. சக்கரவர்த்தித் திருமகன், இரகுநாயகன், சீதைப்பிராட்டி. கல்கத்தா 'டேராடூன்' இருப்புப்பாதையில் உள்ள ஒரு நிலையம்.

99. நைமிசாரண்யம்-தேவராசன். வட இந்திய இருப்புப் பாதையில் பலாமு-சிதாப்பூரிலுள்ள ஒரு நிலையம்.

100. சாளக்கிராமம் - மூர்த்திப்பெருமாள். நேபாள தேசத்தில் அம்லக்கஞ்ச் நிலையத்திலிருந்து 110 மைல்.

101. பதரிகாச்சிரமம் - பதரிநாராயணர். அரித்துவாரத்திலிருந்து 173 மைல்.

102. திருக்கண்டங்கடிநகர் (தேவப்பிரயாகை)-நீலமேகப்பெருமாள், புருடோத்தமன். அரித்துவாரத்திலிருந்து பதரிகாசிரமத்திற்குச் செல்லும் வழியில் 58-ஆவது கல்லில் உள்ளது.

103. திருப்பிரிதி (நந்தப் பிரயாகை)-பரமபுருடன், பரிமளவல்லிநாச்சியார். அரித்துவாரத்திலிருந்து 155-ஆவது கல்.

104. துவாரகை (துவரை)-கல்யாணநாராயணர். பம்பாயிலிருந்து ஜாம் நகர் செல்லும் வழியிலுள்ளது.

105. வடமதுரை (கோவர்த்தனம்)-கோவர்த்தநேசன், சத்தியபாமை. மத்திய இருப்புப்பாதையில் மதுரா சந்திப்பிலிருந்து இரண்டு கல்.

106. திருஆய்ப்பாடி (கோகுலம்)-நவமோகன கிருஷ்ணர். ருக்மிணிப்பிராட்டி, சத்தியபாமை நாச்சியார். மத்திய இருப்புப்பாதையில் மதுரா சந்திப்பிலிருந்து இறங்கிச் செல்ல வேண்டும்.

107. திருப்பாற்கடல்.

108. வைகுந்தம் (பரமபதம்).

திவ்வியப் பிரபந்தச் செழும் பொருட்டிரள்

"மகாவித்வான்"
"பத்மவிபூஷண்"
திரு. பி. ப. அண்ணங்கராசாரிய
சுவாமிகள், காஞ்சிபுரம்.

—[முற்றொடர்ச்சி]

11. அண்டமும் நிலனும் அடியொன்றினால் கொண்டவன் :

நாச்சியார் திருமொழியில் (4—9) "கொண்ட கோலக் குறளுருவாய்ச் சென்று, பண்டு மாவலிதன் பெருவேள்வியில், அண்டமும் நிலனும் அடி ஒன்றினால், கொண்டவன் வரில் கூடிடு கூடலே" என்கிற பாசுரத்தில், விண்ணுலகையும் மண்ணுலகையும் ஓரடியினால் அளந்து கொண்டதாக அருளிச் செய்துள்ளது பொருந்துமோ? (திருநெடுந் தாண்டகத்தில் 5) "ஒண்மிதியிற் புனலுருவி ஒருகால் நிற்ப, ஒரு காலும் காமசீரவுணனுள்ளத் தெண்மதியுங் கடந்து அண்டமீது போகி..." "இத்யாதிப் படியே ஓரடியால் மண்ணுலகையும், மற்றோரடியால் விண்ணுலகையும் தனக்காக்கிக் கொண்டிருக்க, 'அண்டமும் நிலனும் அடி ஒன்றினால் கொண்டவன்' என்றது எங்ஙனே? என்னில் ; ஒன்றினால் என்றது—ஒவ்வொன்றினால் என்றபடி.

12. அண்ணற்கு அண்ணானோர் மகன் :

பெரியாழ்வார் திருமொழியில் (2—9—1) கோபிகள் யசோதைப் பிராட்டியை விளித்துக் கூறுகையில் கண்ணனை, "அண்ணற்கண்ணானோர் மகன்" என்கிறார்கள். (அண்ணல்—கண்ணான்) என்றும், (அண்ணற்கு—அண்ணான்) என்றும் இருபடியாக வகுப்பது முறையே. சுவாமித்வ சூசகமான திருக்கண்களை உடையவன் என்றும், அண்ணனான பலராமனுடைய சுவபாவத்தோடு இணங்காத சுவபாவமுடையவன் என்றும் பொருள் காண்க. பெரிய திருமொழியில் (10—7—4) "மைந்நம்புவேற்கண் நல்லாள் முன்னம் பெற்ற வளைவண்ண நன்மாமேனி, தன்னம்பி நம்பியுமிங்கு வளர்ந்தது அவனிவை செய்தறியான் . . .இந்நம்பி நம்பியா! ஆய்ச்சியர்க்கு உய்வில்லை" என்றது காண்க.

13. அணிகோட்டியர்கோன் :

"பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று, ஈண்டிய சங்க மெடுத் தூத, வேண்டிய வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்தான்" (திருப்பல்லாண்டு தனியன்) என்று, போற்றப்பட்ட பெரியாழ்வாரால் ஆட்படுத்திக் கொள்ளப்பட்ட வல்லப தேவனென்னும் பாண்டி நாட்டரசனுக்குப் புரோகிதராக வாழ்ந்தவர் செல்வநம்பி என்பவர். திருக்கோட்டியூரில் அவதரித்தவர். அவரிடத்தில் பெரியாழ்வார் மிகுந்த மதிப்புடையவர். அவரைப் பெரியாழ்வார் திருப்பல்லாண்டிலும் தமது திருமொழிப் பிரபந்தத்திலும் மிக மிகக் கொண்டாடியுள்ளார். "அல்வழக் கொன்றும் இல்லா அணி கோட்டியர்கோன், அபிமான துங்கன் செல்வனைப் போல" என்றது திருப்பல்லாண்டில். "நளிர்ந்த சீலன் நயாசலன் அபிமானதுங்கனை நாடொறும், தெளிந்த செல்வனைச் சேவகங்கொண்ட செங்கண்மால் திருக்கோட்டியூர்" என்றது பெரியாழ்வார் திருமொழியில் (4—4—8). மேலே 'அபிமானதுங்கன்' என்ற பெயரிலும் (இலக்கம் 19) விளக்கங் காண்க.

14. அத்தியூரர் கழலிணைக் கீழ்ப்பூண்ட அன்பாளன் :

இராமாநுச நூற்றந்தாதியில் (31 பா.) "தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப்பூண்ட அன்பாளன் இராமாநுசன்" என்பது, எம்பெருமானாரைப் போற்றும் பாசுரம். கச்சித் தேவப் பெருமான் திருவடிகளில் எம்பெருமானார் பரமபக்தி வாய்ந்தவர் என்கிறது இதில். பூதத்தாழ்வார் தமது திருவந்தாதியில் "உலகேத்தும்

ஆழியான் அத்தியூரான்'' என்றும் ''அத்தியூரான் புள்ளையூர்வான்'' என்றும் பாடினர் தேவப்பெருமாளை. அத்திகிரிநாதர் என்னும் பொருளில் (அத்தியூரான்) எனப்பட்டது. எம்பெருமானார் தேவப்பெருமாள் சந்நிதியில் பல ஆண்டுகள் வாழ்ந்து தொண்டு பூண்டு அமுதம் உண்டவர் ஆகையாலும், யாதவப் பிரகாசரோடு கங்கா யாத்திரை சென்றபோது மீண்டு வர நேர்ந்த காலத்துத் தேவப்பெருமாளே வில்லியாய் வழித்துணையாய் இருந்து ஓரிரவில் புண்ணிய கோடி விமானச் சாயையில் கொணர்ந்து சேர்த்தபடியாலும், யக்ஞ மூர்த்தி என்கிற அத்வைதி வித்துவானோடு வாதாட நேர்ந்த காலத்தில் விடையிறுக்கப் புரியாதபோது தேவப் பெருமாளே உதவி புரிந்து வெற்றி பெறுவித்தபடியாலும், அவரது கழலிணைக் கீழ் அன்பு பூண்டிருந்தது பிராப்தமே என்க.

15. அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் :

குலசேகரப் பெருமாள் தமது திருமொழியில் (10—2) ''தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள் அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த'' என்று அருளிச் செய்கிறார். தில்லைத் திருச்சித்திர கூடத்தில் மூவாயிரம் பிராமணர்கள் வாழ்ந்து வந்ததாக ஒரு பிரசித்தியுள்ளது. ''நாங்கை நாலாயிரம், தில்லை மூவாயிரம்'' என்றொரு பழமொழியும் உள்ளது. திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில் தில்லைத் திருச் சித்திரகூடப் பதிகத்தில் ''மூவாயிர நான்மறையாளர் நாளும் முறையால் வணங்க'' என்று அருளிச் செய்திருப்பது காண்க. மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாற்றுப் பதியைப் பாடுமிடத்து (திருவாய்மொழி 8—4—6) ''மனக் கொள்சீர் மூவாயிரவர் . . வாழ்'' என்று அருளிச் செய்கையாலே அத்தலத்திலும் மூவாயிரம் வேதியர்கள் வாழ்ந்ததாக அறியலாகிறது.

16. அந்தணாளன் பிள்ளை :

பெரிய திருமொழியில் (6—5—7) ''அந்தணாளன் பிள்ளையை அந்நான்று அளித்தானூர்'' என்று அருளிச் செய்கிறார். அந்தணாளன் பிள்ளை என்பதற்குப் பிராம்மணனுடைய புத்திரன் என்பது பொருள். எந்தப் பிராம்மணன் என்று கேள்வி வரும். ஆழ்வார் தாமே விளக்கியுள்ளார். ''முந்து நூலும் முப்புரி நூலும் முன்னீந்த அந்தணாளன்'' என்று. எம்பெருமான் கண்ணனாக அவதரித்திருந்த காலத்தில் அவந்திகா நகரத்தில் தனக்கு உபாத்தியாயராக இருந்த சாந்தீபினி முனிவனுடைய குமாரனை ''மாதவத்தோன் புத்திரன் போய் மறிகடல்வாய் மாண்டானை ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்த'' வரலாறு இங்கே உணரத் தக்கது.

17. அந்தமிழின் இன்பப்பா :

பெருமாள் திருமொழியில் நான்காவது பாசுரத்தில் அழகிய மணவாளன் தன்னையே ''அந்தமிழின் இன்பப்பா'' என்கிறார். 'மாவினை வாய் பிளந்து உகந்த மாலை'' என்றும், ''வேலை வண்ணனை'' என்றும். . . சொல்லி வந்தது போல, ''அந்தமிழின் இன்பப்பாவினை'' என்றும், ''அவ்வடமொழியை'' என்றும் எம்பெருமான் தன்னையே நிர்த்தேசிக்கிறபடி. தமிழ்ப்பா ஆகிற திருவாய்மொழியும், வடமொழியில் அமைந்த சுருதி இதிகாச புராணங்களும் எவ்வளவு போக்கியங்களோ அவ்வளவு போக்கியன் அழகிய மணவாளன் என்று காட்டினபடி. திருமங்கையாழ்வாரும் இதை அடியொற்றியே திருநெடுந்தாண்டகத்தில் (பா.4) ''செந்திறந்த தமிழோசை வடசொல்லாகி'' என்று எம்பெருமானையே தமிழோசையாகவும் வடசொல்லாகவும் பேசியருளினர்.

18. அந்தரி :

நாச்சியார் திருமொழியில் கனாப் பதிகத்தில் ''அந்தரி சூட்டக் கனாக் கண்டேன்'' (பா. 3) என வருகிறது. அந்தரி என்று துர்க்கைக்குப் பெயர். இவள் கண்ணபிரானுக்கு உடன்பிறந்தாள் ஆதலால் ஆண்டாளுக்கு நாத்தனாரானாள். அந்தரத்திலே (ஆகாயத்திலே) அந்தர்த் தானமாய்ப் போனமையாலே, இவளுக்கு அந்தரி என்று பெயராயிற்று என்க. பெரியாழ்வார் திருமொழியில் ''மக்கள் அறுவரைக் கல்லிடை மோத இழந்தவள் தன் வயிற்றில் சிக்கென வந்து பிறந்து நின்றாய்'' என்றபடியே, மக்கள் அறுவர் மாண்டுபோன பின்பு ஏழாவதான கருவின் பரிணமம் இதுவென்க.

19. அபிமானதுங்கன் :

கீழே ''அணிகோட்டியர்கோன்'' என்ற இடத்துச் செல்வநம்பியின் பெருமை காணத் தக்கது. பெரியாழ்வார் செல்வநம்பியைக் குறிப்பிட்டுள்ள இடங்கள் இரண்டே. இரண்டிடத்திலும் அபிமான துங்கன் என்னும் அடைமொழியை விடாமல் பிரயோகித்து இருக்கையாலே, இஃது இவர்க்கு விருதாகக் கிடைத்த திருநாமம் என்று பெரியோர் கூறுவர். அபிமான துங்கன் என்பது வடசொல் தொடர். அபிமானம் என்கிற வடசொல்லுக்கு ''கர்வோ

காரம்'' என்கிற பொருளும் உண்டு. ''அபிமான பங்கமாய் வந்து'' என்கிற திருப்பாவைப் பாசுரத்தில் அப்பொருள் காணத்தக்கது. அன்பு வைத்தல் என்னும் பொருளிலும் அபிமானம் என்று வழங்கும். ஸ்ரீவசனபூஷணத்தில் ''சுவாபிமானத்தாலே ஈச்வராபிமானத்தைக் குலைத்துக் கொண்ட இவனுக்கு ஆசார்யாபிமானம் ஒழியக் கதியில்லை என்று பிள்ளை பலகாலும் அருளிச்செய்ய . . .'' என்கிற சூர்ணையில் இரண்டு அர்த்தத்தையும் காட்டும்படியாக, அபிமான சப்தம் பிரயோகிக்கப்பட்டு உள்ளது. செல்வநம்பிக்கு விருதாக வழங்கும் அபிமானதுங்கன் என்னும் சொல்லுக்கு ஈச்வராபிமானத்தாலும் ஆசார்யாபிமானத்தாலும் மேம்பட்டவர் என்பதே பொருள்.

20. அமலன் ஆதிபிரான் :

திருப்பாணாழ்வார் வாய் திறக்கத் தொடங்கும்போதே அமலன், விமலன், நிமலன், நின்மலன் என்று அழகிய மணவாளனுடைய பரிசுத்தியை அடுத்தடுத்துப் பேசுகிறார். (எதற்காகவென்னில்), மகா நீசனான நான் உள்ளே புகுவதனால் அரங்கனுடைய பரிசுத்திக்கு ஒரு குறையும் இல்லை என்றுணர்த்துதற்கு.

21. அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே :

திருப்பாணாழ்வார் பணித்த அமலனாதிபிரானின் நிகமனப் பாசுரமிது. இதில் மற்றொன்றினைக் காணா என்பதற்கு—அரங்கனைத் தவிர வேறொரு அர்ச்சாமூர்த்தியை என்று பொருளன்று. பரமபதநாதனையும் என் கண்கள் காணக் கருதமாட்டா என்பது பொருள். பரமபதத்தின் பேர் சொல்லுகையும் அசக்யமானபடி—திருவாய் மொழியில் (7—10—10) ''சிந்தை மற்றொன்றின் திறத்த தல்லாத் தன்மை'' என்றவிடத்தும் இப்படியே.

22. அரக்கர் அசுரர் பிறந்தீருள்ளீரேல் :

திருவாய்மொழியில் (5—2—5) 'செய்கின்றதென் கண்ணுக்கொன்றே' என்கிற பாட்டில் 'அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல் உய்யும்வகையில்லை தொண்டீர்' என்று வெருட்டுகிறார். 'பொலிக பொலிக பொலிக' என்று தொடங்குவதாம் இப்பதிகம். ''அடிமை புக்காரையும் ஆட்செய்வாரையுங் காண லோகத்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்களைக் கண்டு காப்பிட்டு'' என்கிற ஆசார்ய இருதய திவ்விய சூக்திப்படியே, விலட்சண ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மங்களாசாசனம் செய்யும் இப்பதிகத்தில் அரக்கர்களையும் அசுரர்களையும் நினைக்கக் காரணம் என்ன என்னில், ஆஸ்திகர்களிடையே நாஸ்திகர்களும், ஆஸ்திகநாஸ்திகர்களும் ஜனிக்கப் போகிறார்கள் என்பதை ஆழ்வார் உட்கண்ணாலே கண்டு பேசுகிறபடி.

23. அரசர் தங்குரிசில் :

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (5—8—9) ''துளங்கு நீண்முடி அரசர் தங் குரிசில்'' என்கிற பாசுரத்தில் ஒரு சிறந்த இதிகாசம் அருளிச் செய்கிறார். சோழ நாட்டு அரசனுடைய குமாரனும், தொண்டை நாட்டு அரசனுமான தொண்டைமான் சக்கரவர்த்தி, திருவேங்கடமலையில் எம்பெருமானை அடுத்து மிகுந்த பக்தியுடனே சிந்தித்து வந்தித்து வாழ்த்தி வழிபாடு செய்ய, திருவுள்ளம் உகந்த அத் திருவேங்கடமுடையான் மெய்த் தொண்டனான அவ்வரசனை நண்பனாகக்கொண்டு, அவன் வரும்பொழுதெல்லாம் தனது அர்ச்சாவதார வரம்பைக் கடந்து, அவனுடன் பேசுபவனாயினன் என்றும்; அவ்வரசனுக்குத் திருவெட்டெழுத்து மகாமந்திரத்தையும் அதன் அருமையான பொருள்களையும் மற்றும் பல இதங்களையும் உபதேசித்து அருளினதும் அன்றி, அவனுக்குப் பகை வெல்லுதற்பொருட்டுத் தனது சங்கு சக்கரங்களையும் கொடுத்தருளினன் என்றும்; அவ்வரசன் அந்தப் பெருமானுக்குக் கோபுரம் மண்டபம் திருமதில் முதலிய திருப்பணிகள் செய்து வந்தனன் என்றும் அறிக.

24. அரசு களைகட்ட அருந்தவத்தோன் :

பெரியாழ்வார் திருமொழியில் (3—10—1) திருவடி பிராட்டிக்கு அடையாளம் சொல்லும் பதிகத்தில் முதற் பாட்டு, பரசுராமபங்கத்தைத் தெரிவிக்கும். 'அரசுகளை கட்ட அருந்தவத்தோன்' என்றது பரசுராமாழ்வானை. அவன் பங்கப்பட்ட வரலாற்றை ''என்வில் வலிகண்டு போவென்று எதிர் வந்தான் தன் வில்லினோடு தவத்தையெதிர் வாங்கி முன்வில் வலித்து'' என்னும் பாசுரத்தில் ஆழ்வார் தாமே அருளிச் செய்தார். ''அரசு களைகட்ட'' என்ற இடத்தில் காணும் இதிகாசம் மேலே ககர வரிசையில் ''கோக்குல மன்னரை மூவெழுகால்'' பாசுரத்தின் விவரணத்தில் காண்க.

(—தொடரும்)

ஆழ்வார்கள் காட்டிய அருள்நெறி

திருமலை நல்லான் இராமகிருஷ்ண ஐயங்கார்

அறிவுத்திறன் வாய்ந்த முனிவர்கள் ருஷிகள் எனப்படுகின்றனர். ''ருஷி'' என்னும் சொல்லிற்குத் தேசத்தாலும் காலத்தாலும் அப்பாற்பட்டவற்றையும் அறிபவன் என்பது பொருள். அத்தகைய அறிவு, தவம்புரிந்து உயர்ந்த மாமுனிவர்களுக்கு, அவர்தம் தவத்திற்கு ஏற்ப அமையும். தம்தம் தவத்திற்கு ஏற்ப அறிவுத்திறன் வாய்ந்த அம்முனிவர் இறையுணர்வு சிறிதுமில்லாத நம்போன்ற வரைவிட மிகச் சீரியராவர். தவத்தால் இறையருள் பெற்று உயர்ந்த முனிவரினும் ஆழ்வார்கள் மிகச் சீரியராவர். ஏனெனில் தவத்திற்கேற்ப வந்த இறையருள் அளவுபட்டதாதலின், அவ்வருளின் விளைவாய் அமைந்த அறிவும் அளவுபட்டதேயாம். ஆழ்வார்களது அறிவோ, தவத்தாலன்றி இயல்பாகப் பெருக்கெடுத்தோடும் அளவிலாத இறையருளின் விளைவாயமைதலின் அளவற்றதாம். இறைவன் மயர்வற மதிநலத்தைத் தானாகவே அருளினன் என்பர். நம்மிடையே பிறந்து நம்மோடு துன்பச் சூழலில் உழன்றவர்களானாலும், கரைகட்டாக் காவிரிபோற் பெருகும் இறை அருளுக்கு இலக்காகி முழுதுணர் நீர்மையினரே ஆழ்வார்கள் என்றதாயிற்று.

வேதமும் திவ்வியப்பிரபந்தமும் :

அளவுபட்ட அறிவினரான முனிவர்கள் இயற்றிய நூல்களும், அவற்றுக்கு முதல் நூலாய் அமைந்த வேதமும், வடமொழியில் அமைந்தவையாதலின், உணர்தற்கு அரியன வாயின. ஆழ்வார்கள் அருளிய நூல்களோ தேனினும் இனிய தென்மொழியாலமைந்து உணர்தற்கு எளியனவாயின. ஆதலின்முனிவர் நூல்களினும், ஆழ்வார்கள் நூல்கள் ஏற்றம் பெற்றன. வடமொழி வேதம் ஆழ்வார்கள் வாயிலாகத் தமிழில் வந்து அருமை நீங்கி, எளியனவாய் ஏற்றம் பெற்றன என்று சொல்லப்படுகின்றது. ஆசார்ய இருதயகாரர், வேதத்தை மண்குடமென்றும், தமிழ் மறைகளைப் பொற்குடம் என்றும் கூறியிருப்பது, குறிக்கொள்ளத்தக்கது. சிவப்பிரகாச சுவாமிகளும் இவ்வாறே கூறியிருப்பதும் நினைத்தற்கு உரியது. ஆக, வேதமும், ஆழ்வார்கள் அருளிய திவ்வியப் பிரபந்தங்களும், மொழி வடிவில் வேறுபட்டனவேயன்றிக் கருத்தினில் ஒருமைப் பட்டனவே என்றதாயிற்று. அத்தகைய திவ்வியப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் காட்டிய அருள்நெறியை இனி ஆராய்வோம்.

பிரதாநப் பிரதிதந்திரம் :

''அறிவுப்பொருள்கள் அறிவற்ற பொருள்கள் அனைத்தையும் தன் வடிவமாகக் கொண்ட ப்ரஹமம் ஒன்றே உண்மைப் பொருள்'' என்பது, வேதத்திற் கண்ட முடிபு. உலகம் அனைத்தும் இறைவனது வடிவமென்பது 'ஆத்மா சரீரம்' 'ப்ருதிவீ சரீரம்' என்று வேதத்திற் போலத் திவ்வியப் பிரபந்தத்திலும் 'உடன் மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்துளன்' என்று கூறப்பட்டுள்ளது. வைதிகர்களான ஆழ்வார்களும் போதாயநர் போன்ற முனிவர்களும் இறைவனை ஆன்மாவாகவும், உலகினை அவனது உடலாகவும் கொள்கின்றனர். பிறர் இக்கொள்கையை ஏற்கவில்லை. ஆகையால் இக்கொள்கை ''ப்ரதாநப்பிரதி தந்திரம்'' என்று போற்றப்படுகின்றது. தன் மதத்திற்கே உரிய முக்கியமான கொள்கை ''ப்ரதாநப்ரதி தந்த்ரம்'' எனப்படும். இக்கொள்கை முரண்பாடின்றி வேதவாக்கியங்களை ஒருங்கே இணைப்பது, இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயப்பது; உலகியலுக்கு ஒத்தது.

பரந்நியாஸம் :

இறைவனுக்கு உலகம் உடலாகவே அதனைக் காப்பது அவனுக்கு இயல்பாயமைந்த கடமையாயிற்று. உயிர் உடலைக் காப்பது இயல்பேயன்றோ? தானும் இறைவனது ஒருடல் என்று கருதித்தன்னைக் காப்பது அவன் கடமையே என்று, தன்னை இறைவன்பால் ஒப்படைத்தல் வேண்டும்; இதுவே பரந்நியாஸம் எனப்படும். என்னை நானே காத்துக் கொள்வேன் என்னும் செருக்கு நீங்கி, இறைவனது உடலான இவ்வான்மா என்ற துணிபுடன் தன்னைக் காப்பதற்கு யாதொரு முயற்சியும் மேற்கொள்ளாது ஒய்ந்து நிற்றலே, பரந்யாஸம் என்று விளக்கம் கண்டு கொள்வது. இந்த பரந்நியாஸமே உய்வதற்குத் தீதில்லாத நன்னெறியாகும். ''நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து இறை சேர்மின் உயிர்க்கு அதனேர் நிறையில்லே'' என்று நம்மாழ்வார், யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களை அடியோடு ஒழித்து, இறை

வனே அடைவதே சீரியவழி என்கிருர். இறைவன் நம்மைக் காப்பதற்குத் தடையாயிருப்பன, நான் என்னைக் காத்துக் கொள்வேன் என்னும் அகங்காரமும், அதனுல் வரும் மமகாரமுமே. அவை நீங்கினதும் உய்வு பெறுதல் உறுதி. இதனையே ''யான் எனதென்னும் செருக்கறுப்பான், வானேர்க்கு உயர்ந்த உலகம் புகும்'' என்று திருவள்ளுவரும் கூறுகின்ருர்.

நன்மை தீமைகள் :

இனி, இறைவனது உடலாகத் தன்னைப் பார்ப்பவன், உயிருக்கு உடல் ஒத்து நடந்து தீங்கிழைக்காமல் இருப்பதுபோல, உலகுக்கெல்லாம் ஒருயிரான எம்பெருமானுக்கு ஒத்துத் தீங்கிழைக்காமலிருத்தல், இன்றியமையாததாகிவிடுகின்றது. உயிரான இறைவனுக்கு ஒத்து நல்லமுறையில் நடத்தல், ''ஆநுகூல்ய சங்கற்பம்'' என்றும், தீங்கிழைக்காமலிருத்தல் ''ப்ராதிகூல்யவர்ஜநம்'' என்றும் சொல்லப்படும். அநுகூலமாயிருப்பதற்கு மனத்தில் சங்கற்பம் செய்து கொண்டாலே போதும். பிரதிகூலமாயிருப்பதைத் தவிர்ப்பதற்கு மனத்தில் சங்கற்பம் செய்து கொண்டால் மாத்திரம் போதாது. தவிர்த்தொழித்தேயாக வேண்டும். இக்கருத்து ''சங்கற்பம்'' ''வர்ஜநம்'' (தவிர்த்தல்) என்னும் சொல்லமைப்பிலே தோற்றுதல் காண்க. நன்மை இன்று விளையாவிடினும், அதில் நாட்டமிருந்தால், நாளை விளைதல்கூடும். தீமை இன்றே தொலைந்தாக வேண்டுவதொன்றன்றே?

ஆநுகூல்யஸங்கற்பமாவது: என்னைப்போல ஆன்மவர்க்கமனைத்தும் இறைவனுடைய உடலாயிருத்தலின், தனக்குப்போலப் பிற உயிர்களுக்கும் துன்பம் இழைக்காது இறைவன் திறத்திற்போல நல்லவனுய் நடந்து மகிழ்விக்கக் கருதுதலாகும். பிராதிகூல்யவர்ஜநமாவது: இங்ஙனமே இறைவன் திறத்திற்போல எல்லா உயிர்களிடத்திலும் தீங்கு இழைப்பதைத் தவிர்ந்திருப்பதாகும். எவ்வுயிருக்குத் தீங்கிழைப்பினும் அது இறைவனது வடிவமாதலின், இறைவனுக்கு இழைக்கும் அபசாரமாகிவிடுகிறது என்பதை நாம் மறந்து விடலாகாது.

இரக்கம் :

பிறர்படும் துன்பத்தைக் கண்டு இரங்குகை வைஷ்ணவதர்மம். ''மன்னன் எப்படி மன்னுயிர்அப்படி'' என்றபடி, வழிபடும் கடவுள்போல அவனை அண்டினேரும் இரக்கப்படுபவர்களாயிருத்தல் வேண்டும். ''ஈசுவரன் உகக்கைக்கு வேண்டுவது, பிறர் துயரங் கண்டு ஐயோ! என்று இரங்குகை'' என்பர் நம்பிள்ளை. பிறர் துன்புறுவதைக் கண்டு நண்ணுதாராய் முறுவலிப்பது அதாவது மகிழ்வது, இறைவனது சீற்றத்தைக் கிளப்பிவிடும். அங்கே அவன் அருள் மழை பொழியான். சரமழையே பொழிவான். இதனை நம்மாழ்வார் இங்ஙனம் அருளிச் செய்கின்ருர்.

ஆவா என்னு துலகத்தை
அலைக்கும் அசுரர் வாணுள்மேல்
தீவாய் வாளி மழைபொழிந்த
சிலையா திருமா மகள்கேள்வா!
தேவா! சுரர்கள் முனிக்கணங்கள்
விரும்புந் திருவேங் கடத்தானே!
பூவார் கழல்கள் அருவினையேன்
பொருந்து மாறு உணராயே.

இரக்கமின்றி அசுரர்கள் உலகத்தை அலைக்கிருர்கள், அவர்களை ஒழித்து உலகத்தை நீ காக்கின்ருய்! திருவேங்கடத்தானே! அதுபோல நீ என்னை அலைக்கும் அருவினைகளையும் ஒழித்து, உன் திருவடிகளில் என்னைப் பொருந்துமாறு செய்தருளவேணும் என்பது இந்தப் பாசுரத்தின் கருத்து.

இயல்பாகவே அல்லலுற்றுள்ள உலகத்தைக் கண்டு இரக்கப்படவேண்டியிருக்க, மேலும் அலைக்கிருர்களே அசுரர்கள் என்கிற பேரிரக்கம் தோன்றுகிறது. ''ஆவா என்னுது'' என்ற சொற்ருெடரிலே. இரங்காமை அவர்களது இயல்பு என்பது தோன்ற ''அசுரர்'' என்கிருர். உலகின்மீதுள்ள இரக்கத்தால் அவ்வசுரரை வென்று புகர்படைத்தமை தோற்றத் ''தேவா'' என்று விளித்தார். தேவன்-புகர் படைத்தவன். தேவப் பிறப்பு, அசுரப்பிறப்பு என்று இரு பிறவிகள் கீதையிற் கூறப்பட்டுள்ளன. இறைவனை விரும்பும் நற்பண்புடையோர் தேவர்கள். உலகத்தை அலைத்து இறைவன் சீற்றத்துக்கு இலக்காவோர் அசுரர்கள் என்று, அப்பிறவிப் பிரிவுகள், இப்பாசுரத்திலும் உய்த்துணர வைக்கப்பட்டிருப்பதைக் காண்க.

ஆக, இரக்கமின்றி, அசுரர் உலகத்தை அலைப்பதால், அவர்கள்மீது இறைவனுக்குச் சீற்றம் மிக்கெழுந்து வாளி (அம்பு) மழை பொழிந்ததாக நம்மாழ்வார் குறித்திருப்பது கவனிக்கத்தக்கது.

பகைவர்க்கு இரங்கல் :

பகைவரிடத்தும் இரக்கம் காட்டப்பட வேண்டும். பகைவரும் தீயஎண்ணம் நீங்கித் திருந்தலாகாதா என்று நினைவதே, நேரிய நெறியாகும். பொல்லா அரக்கனுகிய இராவணனும் திருந்தி தன்னைச் சார்ந்து உய்வுறலாகாதா என்று விரும்புகிறுன் இறைவன். விபீடணன் வந்தது, இராவணனே வந்ததாயிருக்கக் கூடாதா என்று அவன் ஆசைப்படுகிருன். கொடுங்கொலைக்குள்ளாகாது, இராமபிரானேடு நட்புக்கொண்டு உய்வு பெறு என்கிருள், இராவணனை நோக்கிச் சீதாப்பிராட்டி. தன் மீது தீராப் பகைகொண்ட தன் தந்தையின் பிழைகளைப் பொறுத்தருளி, அவனை உய்விக்குமாறு இறைவனிடம் வேண்டுகிருன் பிரகலாதன், தன்னை வெளியேற்றிய இராவணனை நோக்கி, வீடுபற்றி எரியும்போது பார்த்துக் கொண்டிருக்க முடியாததுபோல், நீ அழிவுறுவதைப் பார்த்து என்னுல் சகிக்கமுடியவில்லையே என்கிருன் விபீடணன். பகை நேர்ந்தாலும் இதம் சொல்லுகை தவிரேன் என்று உபதேசிக்கிருர்

நம்மாழ்வார். ''சொன்னல் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினே'' என்னும் அவரது குரல் இன்னும் நம் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இனி அசுரர்கள் இறைவனுற் கொல்லப் படுவது தகுமா? அவர்கள் திறத்தும் இரக்கம் காட்ட வேண்டாவோ எனிற் கூறுதும். சீர் திருந்தாது எதிர்த்த அசுரரைக் கொல்வதும் இறைவனது இரக்கத்தின் செயலே என்று நாம் உணர்தல் வேண்டும். திருந்தாத அவ்வசுரர் மேலுமிருந்தால், மேன்மேலும் தீமைகள் புரிந்து கெட்டழிவார் அன்றோ? அங்ஙன் அழியாது உடலை அழித்து அசுரரைக் காக்கின்றனன் இறைவன் என்க. கெடலாகாது என்னும் நல்ல கருத்துடன் செய்யப்படுதலின், கொலையும் நல்ல செயலாகிவிடுகிறதென்றுணர்க. வைத்தியன் செய்யும் அறுவை மருத்துவம் போன்றது இதுவும் என்க.

தான்வருந்தியும் பிறருக்கு உதவுதல் :

இறைவன் தன்னிலைமை மாறிப் பன்றியாய் இவ்வுலகை இடந்தெடுத்து உதவினன். அதுபோல, அவனை அண்டினேரும் தம் நிலைமை மாறியாயினும், பிறர்க்கு உதவ முற்படுவர். இது நல்லோரது இயல்பாகும். இதனை நம் மாழ்வாரிடத்திலே நாம் காணலாம். உலகியலுக்கு மாறுபட்டு மாறன் எனும் பேர்பூண்ட நம்மாழ்வார், நெடியானே என்று கிடக்கும் நெஞ்சமும், குறளாகிய வஞ்சனே என்னும் வாசகமும், ஆயர் தாயவனே என்று தடவும் கைகளும் உடையவராய், கரணங்கள் அனைத்தும் கண்ணன்பால் ஈடுபட்டு அந்நிலையில் நிலை நிற்பவர். ''உயிர்மாய்தல் கண்டாற்றேன்'' என்று அவர் அந்நிலைமை மாறி, உலகிற்கண் வைத்து உபதேசத்தால் திருத்தி உதவிட முற்படுவதைப் பார்க்கிறோம். ''வீவிலின்பம்மிக எல்லை நிகழ்ந்தனன்மேவியே'' என்றபடி, இறைவனை மேவிப் பேரின்பமுறும் தமது நிலைமை மாறி, உபதேசத்தால் உலகை நல்வழிப்படுத்த முயலும் நம்மாழ்வாருடைய இரக்கத்தை என்னென்பது!

மாறன் அடிபணிந்துய்ந்த இராமாநுசரும், திருக்கோட்டியூர் நம்பியிடம் கேட்டறிந்த ரகசிய அர்த்தத்தை, அவரது ஆணையை மீறித் தமக்கு நரகம் நேருவதையும் பொருட்படுத்தாமல், மிக்க கிருபையால் பிறர்க்கு உபதேசித்து உய்வித்தருளிய வரலாறும் இங்கு அறியத் தக்கது. நரகத்தில் வீழ்தலும், பிறர் துன்பம் துடைத்த மகிழ்ச்சியிற் பெருவாழ்வாகத் தோற்றுகிறது, அந்த நல்லாசிரியர்க்கு! பிறர் படவேண்டிய நரகவேதனையை அவர்களுக்காகத் தாம் ஏற்பது பேரின்பமாகிவிடுகிறது.

பாகவதபுராணத்தில்வரும் ரந்திதேவனை, இந்த இடத்தில் நாம் நினைக்காமல் இருக்க முடியாது. அவர் 48 நாட்கள் குடும்பத்தோடு பட்டினி கிடந்தார். தற்செயலாகக் கிடைத்த உணவை உட்கொள்ளும் தறுவாயில், வந்த விருந்தினருக்கு அவ்வுணவளித்து மீந்ததை நாய்களோடு வந்து இரந்தவனுக்கு மகிழ்ச்சியோடு வழங்கிவிட்டான் அவன். அந்த ரந்தி தேவனுக்கு நாய்களும், அவற்றோடு வந்தவனும் இறைவன் வடிவமாகத் தோன்றியதால் நாய்களையும், அவற்றோடு வந்தவனையும் அவன் வணங்கினனும். பிறகு ஒருவர்மட்டும் குடிக்கு மளவில் நீர் எஞ்சியதாம். அதைக் குடிக்கும் போது புலையனொருவன் வந்து நீர்கேட்க, விடாயுடன் வருந்தத்தக்க நிலைமையினை நோக்கி இரங்கிக் கூறுகிறன் ரந்திதேவன்.

ஓர் ஏழைக்காக உயிரை விடுவதால், இன்னல்களெல்லாம் தொலைந்து அஷ்ட சித்திகள் வாய்ந்த பிரமன் முதலியோர் பதவியும், ஏன் முக்தியுமே எனக்கு வேண்டுவதில்லை. உலகிலுள்ளார் அனைவருடையவும் நெஞ்சிலுள்ள துன்பத்தை நானே ஏற்று, அவர்களைத் துன்பமற்றவர்களாக்கிப் பார்ப்பதே எனக்கு வேண்டுவது.

சமூகத் தொண்டு, பேரின்பம் :

இறைவன் எல்லா உயிரினங்களுக்கும் இதத்தையே நாடுபவன். ஆதல்பற்றி அவனை 'அனைத்துயிர்க்கும் நலம்புரிபவன்' என்று போற்றுகிறோம். அவனை அண்டின தொண்டர்களும், அவனைப்போல எல்லா உயிரினங்களுக்கும் இதத்தையே நாடுவதுதான் முறை. ஒவ்வொரு பொருளும் இறைவன் வடிவமாகத் தோற்றுவதால், ஏற்றத்தாழ்வுகள் தொண்டர்களுக்குத் தோற்றுவதில்லை. எந்த ஒரு பொருளுக்கு நன்மை புரியினும், அது இறைவனுக்குப் புரியும் பணியாகிவிடுகிறது. விண்ணகத்திற் புரியும் திருப்பணி இறைவனுக்கு வேண்டப்படுவது ஒன்றன்று. முக்தியடைந்தவன் அடியானுவதற்காக, அதனை அவன் அங்கே ஏற்கிறன். உயிரினங்கள் வடிவில் இங்குள்ள நிலையிலோ, திருப்பணிகள் இறைவனுக்கு வேண்டப்படுவன ஆகின்றன. ஆகவே முக்திநிலையிற் புரியும் திருப்பணியினும் சீரியது, உயிரினங்களுக்கு இங்கே உதவுவது. இதனையே தனக்குப் புரியும் பெருந் திருப்பணியாகக் கொண்டு இறைவன் பேருவகை எய்துகிறன். பேரருள் பெருகுகிறது. தன்னைப்போல் அடியார்களையும் பேரின்புறச் செய்கிறன். ''தம்மையே ஒக்க அருள் செய்வர்'' என்றர் திருமங்கைமன்னன். இங்கு உயிரினங்களுக்கு உதவிபுரிகின்றவர்களைத் தன்னைப்போல் இறைவன் உயர்த்திவிடுகிறன் என்கிற தத்துவத்தைக் கவிதை நயத்தோடு கலந்து உணர்த்துகிறர் நம்மாழ்வார்.

''மேகங்களோ உரையீர்
திருமால் திருமேனியொக்கும்
யோகங்கள்உங் களுக்கெவ்வாறு
பெற்றீர் உயிரளிப்பான்
மாகங்க ளெல்லாம் திரிந்து
நன்னீர்கள் சுமந்துங்கள்
ஆகங்கள் நோவ வருத்தும்
தவமாமருள் பெற்றதே

—திருவிருத்தம்

இது ''தலைவி போலிகண்டுரைத்தல்'' என்னும் அகத்துறையில் அமைந்த பாசுரம்.

''கரும்பெரும் மேகங்கள் காணில் கண்ணன் என்றேறப் பறக்கும்'' என்றபடி கண்ணன் என்னும் கருந்தெய்வத்துக்குக் கரும்பெரும் மேகங்கள் போலியன்ருே? மேகங்கள் கண்ணன் போன்று கறுத்திருப்பது, உயிர்களைக் காப்பதற்காக நல்ல நீரைச் சுமந்துகொண்டு, ஆங்காங்கே திரிந்து வருந்தியதால் உகந்த இறைவன் அருளின் பயன் போலுமென்று தற்குறிப்பேற்றத்தாற் பேசுகிருர். உயிர்களுக்கு உதவுவதற்காக வருந்துவது பெருந்தவமாக இறைவனுக்குத் தோற்றுவதும், அதனுல் உவந்து இறைவன் அருள்புரிந்து அன்னுரைத் தன்னைப் போலாக்குவதும் இப்பாசுரத்தில் தோற்றுவது காண்க.

இங்கே ''மால் திருமேனி'' என்னுது ''திருமால் திருமேனி'' என்று கூறியது கூர்ந்து நோக்கத்தக்கது. பிரிவுத் துன்பத்தால் வெளுத்த என்மேனி போன்றதன்று மால்மேனி. திருமகளோடு என்றும் கூடியுள்ளமைபற்றி நிறம் மாருமல் இருப்பது திருமால் திருமேனி என்பது கருத்து. என்னைப் போற் பிரிவாற்ருமையில்லாதவன் என்று இறைவன்மீது குறை கூறினபடி. உயிரளிப்பான் எந்நின்றயோநியுமாய்ப் பிறப்பவன் இறைவன்; உயிரளிப்பான் மாகங்கள் (பெரிய ஆகாசங்கள்) எல்லாம் திரிவன மேகங்கள் என்று செயலொற்றுமை, அளிக்கும் திருமாலுக்கும், அளிக்கும் மேகங்களுக்கும் காணத்தக்கது.

ஆன்ம வர்க்கங்களை உய்விப்பதற்காக, இறைவனுடைய சீலம் முதலிய குணங்களைச் சுமந்து உடல் வருத்தம் பாராது எங்கும் திரிந்து உயிர்களை அளிப்பவர்கள், இறையருளால் முக்தி அடைந்தவர் போன்று இறைவனுக்குச் சமமானவராய் இவ்வுலகிலேயே இனிது வாழ்கிருர்கள் என்பது இப்பாசுரத்தின் உள்ளுறை பொருளாம். ''தீதில் நன்னெறிகாட்டி எங்கும் திரிந்து அரங்கனெம்மானுக்கே காதல் செய்யும் தொண்டர்'' என்றபடி நன்னெறிகாட்டி உய்விப்பதற்காகவே, ஓரிடத்தில் தங்காது உலகெங்கும் திரியும் மெய்யடியார்களை மேகங்களாகக் கூறுகிருர் நம்மாழ்வார்.

இங்ஙனம் உலகெங்கும் இறைவன் பேரோதித் திரிந்து தூய்மைப்படுத்தத் தொண்டர்களை உருவாக்குகிருர் பூதத்தாழ்வார்.

பண்டிப் பெரும்பதியை யாக்கிப் பழிபாவம்
கொண்டிங்கு வாழ்வாரைக் கூருதே—எண்டிசையும்
பேர்த்தகர நான்குடையான் பேரோதிப் பேதைகாள்!
தீர்த்தகர ராமின் திரிந்து.

பழிபாவம் கொண்டவர்களைப் பேசிப் பொழுதைப் பாழ்படுத்திக் கொண்டிராமல் உலகளந்தவன் திருநாமங்களைச் சங்கீர்த்தனம் செய்துகொண்டு எங்கும் திரிந்து உலகத்தைத் தூய்மைப்படுத்துங்களென்கிருர் பூதத்தாழ்வார்.

உலகளந்தான் சம்பந்தத்தால் தூய்மை பெருத உலகம், பேரோதித்திரிவார் பாதம் பட்டுத் தூய்மை பெறுவதாகப் பூதத்தாழ்வார் கருதுகிருர். அவனிலும் அவனடியார் சீரியரன்ருே? ''நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்கள் உழக்கிய, பாத தூளிபடுவதாலிவ்வுலகம் பாக்கியம் பெற்றதே'' என்று பெரியாழ்வார் அருளிச் செய்திருப்பது அறியத்தக்கது.

பொதுவுடைமை :

பூதத்தாழ்வார் ''பண்டிப் பெரும் பதியை ஆக்கிப் பழிபாவம் கொண்டிங்கு வாழ்வார்'' என்றது குறிக்கொள்ளத்தக்கது. பண்டி என்பது வயிறு. அதனைப் பெரிய நகரம் போற் பெரிதாக்கி, அதாவது எவ்வளவு சரக்கு வரினும் பெரிய நகரத்துக்குப் போதாதது போல, வந்ததெல்லாம் தன் வயிற்றிற்கே போதாது என்று கருதிச் சொத்துக்களைச் சேர்த்துக் குவிப்பது, பழிபாவத்துக்குக் காரணமாகும் என்கிருர் அவர். இதனுல் சொத்துக்களை ஒரே இடத்திற் குவித்துக் கொள்வது, தீய செயலென்பது போதரும். சொத்துக்கள் ஒரே இடத்திற் குவிவதால், பிறர் பலர் பட்டினி கிடக்க நேருகிறது. பட்டினியால் உழல்பவர் வடிவில் உள்ள இறைவனுக்குப், பொருளை ஒரே இடத்திற் குவிப்பவர்கள் தீங்கிழைத்தவர்களாகிருர்கள். அதுவே பாபம் எனப்படுகிறது. பழி பாவத்துக்கு, அஞ்சி, நேர்மையோடு பொருள் ஈட்டி மற்றவர்களுக்கும் பகிர்ந்து அளித்து அநுபவிப்பதே, வாழ்க்கைக்கு வளம்தரும் என்கிருர் குறளாசிரியர். ''பழியஞ்சிப் பாத்தூணுடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றுமில்'' என்பது குறள். எவர் எவருக்குப் பகிர்ந்ளிக்கவேண்டும் என்பதும் அக்குறளாசிரியராலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ''தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்று, ஐம்புலத்தா றோம்பல் தலை'' என்று பிதிருக்கள், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் இவர்களோடு, தனக்குமாக ஐந்து பிரிவுகளாகப் பகுத்து உண்ணவேண்டும் என்கிருர்.

பாகவதத்தில், ''தன் வயிற்றுக்கு வேண்டுமளவுக்குமேல், சேர்ப்பவன் திருடன்; அவன் தண்டனைக்கு உரியவன்'' என்று சொல்லப்பட்டுள்ளது. திருமங்கை மன்னர் தீயவர்களிடமிருந்து சொத்துக்களைப் பறித்து நல்லவர்கட்குப் பகிர்ந்தளித்து இறைவனது பேரருளுக்கு இலக்கானது இங்கே நினைக்கத்தகும். ஆக, எல்லோருக்குமாக இறைவன் படைத்த பொதுஉடைமையைத் தனக்கே உடைமையாக ஆக்குவது பெரும் பாவம் என்றதாயிற்று.

முடிவுரை :

அளவற்ற அறிவுவாய்ந்த ஆழ்வார்கள், தமிழ்வேதமாகிய திவ்வியப் பிரபந்தத்தில் காட்டியபடி, உலகனைத்தும் இறைவனது உடல் எனும் கொள்கையைப் பற்றி, உடலான என்னைக் காப்பது, உன் கடமையென்று பொறுப்பை இறைவன்பால் ஒப்படைத்து, இறைவன் உடலாம் உயிரனைத்துக்கும் நன்மை புரிந்து, தீமை விலக்கி, பிறர்படும் துன்பத்துக்கு இரங்கி, பகைவர்மாட்டும் இரக்கம் காட்டி, வருந்தியும் பிறருக்கு உதவிச், சமூகத் தொண்டையே பேரின்பமாகக் கொண்டு, பொதுவுடைமையைத் தன்னுடைமையாக்கிப், பழிபாவத்துக்கு ஆளாகாது, அருள் நெறியில் நடந்து இறைவன் பேரருளுக்கு இலக்காகி இன்புறுவோமாக'.

**

ஆடவல்லான்

'அருண்மொழியரசு' திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

முன்னுரை :

இறைவன் எங்கும் நிறைந்தவன் ; எல்லாம் அறிகின்றவன்; கருணை நிறைந்தவன் ; இன்ப மயமானவன். எல்லா ஆற்றலும் உடையவன். ஆன்மாக்களின் பொருட்டுப் பல்வேறு திருமேனிகளை எடுத்துக்கொள்ளுகின்ருன். அவற்றுள் இடையருது ஆனந்தத் தாண்டவம் புரியும் நிலை ஒன்று. அது எல்லா மூர்த்திகளிலும் சிறந்தது. அந்த ஆனந்தக் கூத்து ஆன்மாக்களின் பொருட்டு ஓவாது சிவபெருமானுல் நிகழ்த்தப் பெறுகின்றது. அவன் ஆடவில்லையானுல், உலகத்தில் ஒன்றுமே ஆடாது. அந்தத் திருக்கூத்துக்கு முதலுமில்லை, முடிவுமில்லை; ஏனையதெருக் கூத்துக்களைப் போன்றதன்று அந்தத் திருக் கூத்து; அற்புதத் தனிக் கூத்து அது. சேக்கிழார் சுவாமிகள் கூறியருளினுர் :

'' ஆதியு முடிவுமில்லா
அற்புதத் தனிக் கூத்தாடும்
நாதனர் கழல்கள் வாழ்த்தி
வழிபடும் நலத்தின்மிக்கார் ''

ப—பாவம்; ர—ராகம்; த—தாளம். பாவ ராக தாளம் என்ற மூன்றும் ஒன்று கூடியது பரதம். இந்தப் பரதக் கலை, நடராஜப் பெருமானிடமிருந்து தோன்றியது. ''அன்பர்க்கு இன்பத் திறமுதவு பரத குரு'' என்கின்ருர் அருணகிரிநாதர். இனி பரத நூல்கள், நடனம் நூற்று எட்டு என்று கூறுகின்றன. சிவாகமங்களும், சிவதாண்டவம் நூற்று எட்டு என்று கூறியிருக்கின்றன.

நடேசப் பெருமானுடைய திருவுருவம், மூன்று கண்களும், நான்கு தோள்களும், சாந்த குணமும், சிவப்பு நிறமும், புன்முறுவல் செய்யும் முகமும் உடையதாயும் ; தலையின் ஓடும், கொக்கின் இறகும்; ஊமத்தையும், எருக்கும், கங்கையும், நிலவும் ஆகிய இவற்றைத் தலையில் அணிந்ததாயும் ; வலப்பாதம் அபஸ்மார (நினைப்பு நீங்கிய) முயலகன் மீது ஊன்றி நிற்பதாயும்; இடப்பாதம் தூக்கப்பட்டு சற்றுகுஞ்சித்ததாயும்; வலக் கரங்களுள் முன்கரம் அபயம் அளிப்பதாயும்; பின்கரம் டமருகம் தாங்கியதாயும்; இடக்கரங்களுள் முன்னது வீசித் தொங்கவிட்டுள்ளதாயும்; பின்னது நெருப்பை ஏந்தியதாயும், இடச் செவியில் திருத்தோடும், வலச் செவியில் மகர குண்டலமும் அணிந்ததாயும், அபயகரத்தில் நாகாபரணம் பூண்டதாயும், சர்வாங்கத்திலும் திருநீறு தரித்து நிலவுவதாயும், மேல் காட்டப்பட்ட சிவமந்திரத்தாற் பூசிக்கற் பாலது.

தாண்டவ வடிவம், தென்னுட்டிலே சிறப்பாக விளங்குகின்றது. எனினும் வடநாட்டிலும் காணப்படுகின்றது. சாளுக்கிய அரசர்களது தலைநகராயிருந்த வாதாபி நகரத்தின் குகைக் கோயிற் சுவரில், பதினறு கரங்களுடைய ஒரு சிவதாண்டவ மூர்த்தம் செதுக்கப்பட்டிருக்கின்றது. இக் குகை செய்யப்பட்ட காலம் கி.பி. 578 ஆம்ஆண்டெனக் கருதப்படுகின்றது. பல்லவ அரசர் காலத்தில் காஞ்சியம்பதியில் புதுக்கிய கைலாசநாதர் கோயில் சுவரிலும் (கி.பி. 675), நடராஜ வடிவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. ஆரியபுரம் என்னும் சாளுக்கிய நாட்டு நகரிலும், பத்துக் கரங்களையுடைய ஒரு நடராஜ வடிவம் உளது. எல்லோரா குகைக் கோயில்களிலும், நடராஜ வடிவங்கள் இருக்கின்றன. இனி எல்லாக் கோயில்களிலும் நடேச வுருவம் பொதுவாக வழிபாட்டிற்கு உளதாயினும், சிறப்பாக உளதாகிய திருத்தலம் தில்லைச் சிதம்பரமாகும்.

சிதம்பரம் :

சிதம்பரம் மிகப் பழைய கோயில். அதற்குக் கோயில் என்றே பேர். அங்கேயுள்ள சிவலிங்கம் திருமூலநாதர். பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாதரும், தேவரும் மூவரும் வழிபட்டு அருள் நலம் பெற்ருர்கள். அத்தலத்தில் வியாக்ரபாதர், பதஞ்சலி முனிவர் பொருட்டு, சிவபெருமான் திருநடனம் புரிந்தருளினுர். அந் நடனம் ஆனந்தத் தாண்டவம்—அல்லது நாதாந்த நடனம் எனப்படும். இந்த நடனத்தின் தத்துவத்தைத் தவயோக சித்தர்களே யறிவர்.

''மாலாங்கனே இங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியன் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே''

என்று திருமூலர் கூறுகின்ருர். திருமூலருடைய திருமந்திரத்திலே ஒன்பதாந் தந்திரத்திலே ''திருக்கூத்துத் தரிசனம்'' என்ற ஒரு தலைப்புளது. அது நாதாந்த நடனத்தின் உண்மையை

நன்கு விளக்குகின்றது. நடனத்தைக் கண்டு களித்த பதஞ்சலி முதலியோருடன், சித்த சிகாமணியாக விளங்கிய திருமூலரும் ஒருவர் என, அவர் பாடலால் தெளிவாகின்றது.

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்
என்றிவர் என்னெடு எண்மருமாமே

இதனுல் பதஞ்சலி முனிவர், நந்தி அருள் பெற்ற சித்தருள் ஒருவர் என்பதும் புலனுகின்றது. இறைவன் ஞானக் கண்ணைத் தர, தில்லை மன்றுள் அப்பரமனது திருநடனத்தைப் பதஞ்சலி முதலிய சித்தர்கள் கண்டு இன்புற்ருர்கள்.

எண்ணருங் காதல் கூரும்
இருவரும் காண ஞானக்
கண்ணினை நல்க முன்னைக்
காரிருள் கழிவுற் றின்ன
வண்ண மென்றறிய வாரா
வளரொளி மன்றுள் மாதோடு
அண்ணல்நின் ருடு கின்ற
ஆனந்த நிருத்தங் கண்டார்.

—பெரிய புராணம்.

சித்தர் :

சித்தாந்தச் செந்நெறியில் நான்கு படிகள்; சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. இவற்றுள் சிவயோக நெறி நின்று ஞானங் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள். சிவமூர்த்தி யோகிகளுள் மகாயோகியாவார். சடாமகுடம் யோகதண்டம் கமண்டலம் புலித்தோல் கோவணம் கபாலம் வெண்ணீறு உருத்திராக்கம் என்றவை யெல்லாம் யோகிகளுடைய சின்னங்களாகும். இவைகளை யுடைய மூர்த்தி சிவமூர்த்தி.

சித்தர்கள், ஞான சித்தர், நாத சித்தர், ரஸேஸ்வர சித்தர் என்று மூன்று பிரிவினராவார்கள். உண்மையான ஞான நிலையில் நின்றவர் ஞானசித்தர்; பிராணுயாம யோகப் பயிற்சியால் சுழுமுனை நாடியில் உண்டாகும் நாதத்தில் தம் மனத்தை ஒடுக்கிச் சமாதி நிலையில் நின்றவர் நாத சித்தர். ரஸாயன முறையால் காய சித்தி யடைந்தவர் ரஸேஸ்வர சித்தர். இந்த ரஸேஸ்வர சித்தர்களே வைத்தியம், ரஸவாதம் முதலிய நூல்களைச் செய்தவர்கள்.

ஞான சித்தர்கள், சுத்த சன்மார்க்க சித்தர்கள் எனவும் அழைக்கப்பெறுவர். அகத்தியர், அகப்பேயார், திருமூலர், பாம்பாட்டியார்; கடுவெளியார், இடைக்காடர், கருவூரார், சிவவாக்கியர், திருவெண்காடர், பத்திரகிரியார், அருணகிரியார், திருமாளிகைத் தேவர் என்ற ஆன்ருேர்கள் ஞான சித்தர்கள் ஆவார்கள்.

அநாதி நாதர், ஆதி நாதர், சடேந்திர நாதர், கோரக்க நாதர், சகோத நாதர், மச்சேந்திர நாதர், சித்திய நாதர், மதங்க நாதர், வகுளி நாதர் என்பவர்கள் நவநாத சித்தர்கள். ''குகையில் நவநாதரும்'' என்று அருணகிரியார் திருப்புகழில் கூறியுள்ளார். ''சொலவின் முடிவில் முடியாத பகுதி புருடர் நவநாதா'' என்ற திருப்புகழ் வாக்காலும் அறிக.

இங்ஙனம் வந்த சித்தர் மரபு, தாயுமானுர் காலம் வரை தமிழ் நாட்டில் சிறப்பாகச் செழித்திருந்தது. தாயுமானுருடைய குருநாதர் திருமூலர் திருமரபில் வந்தவர் என்று தாயுமானுரே ''மூலன் மரபில் வரும் மௌன குருவே'' என்று கூறுவதனுல் அறிக.

பதஞ்சலி முனிவர் :

சிவயோகச் செந்நெறியில் நின்ற, பழைய சித்தர்களுள் ஒருவர் பதஞ்சலி முனிவர். இவர் மகத நாட்டினின்றும் தில்லைவனம் வந்து, அரிய பெரிய தவஞ்செய்து, இறைவன் திருவருளால் நாதாந்த நடனத்தைத், தமது சிவஞான யோக வலிமையினுலே, அகக் கண் கொண்டு கண்டு களித்தவராவார். அத்திருக் கோலந்தான், தில்லை ஞான வெளியில் உள்ள நடேசனுருடைய திருவடிவம்.

நாதாந்த நடனம் :

ஞான மாத்திரையாய் நிற்கும் பரசிவம் ஏகமாய், குணுதீதமாய், சிதாகாசத்துக்குள் விளங்கும் பரஞ்சோதியாய் உள்ள பொருளாகும். அச்சிவத்தினது தத்துவாதீதமான, அத்துரிய நிலையில் எச்செயலும் நிகழ்வதில்லை. அக்காரணத்தினுல் அது சுத்த சிவம் என்றும், பரசிவம் என்றும் பேசப்பெறும். அத் தனி நிலை, மனத்தால் நினைக்கவும், வாக்கினுல் பேசவும், கலையினுல் அளக்கவும் இயலாதது.

தனிப் பரம் பொருளாகிய அப்பரசிவம், புறப் பொருள்களைத் தன்னருளுடன் நோக்கும் நிலையில், பராசக்தி எனப்படும். அதனுல் சிவத்தின் அருள் நிலையே பராசக்தியாகும் என்று அறிக. தீயும் சூடும் போலே, பரசிவமும் பராசக்தியும் ஒன்றே என வுணர்க. பரசிவமாகிய ஞானநிலையும், பராசக்தியாகிய அருட் செயல் நிலையும், ஒரே பொருளின் இரு தன்மைகளாகும். பராசக்தியும் ஞானசொரூபமே யாகும்.

பராசக்தியானது மறைத்தலில்லாத தன் சுத்த ஞான நிலையினின்றும் நீங்கி, உயிர்களுக்குத் தனுவாதிகளைத் தோற்றுவித்து, மலபரிபாகம் வரும் பொருட்டு, பிறப்பு இறப்புக்களை நல்கி, கன்மங்களை நுகர்வித்து, மறைத்தல் தொழிலைச் செய்யுமிடத்து, அவைகளைப் பக்குவப் படுத்தும் சிவசக்தியாக மாறுமிடத்து, அது திரோதான சக்தி யென்று சொல்லப்பெறும். அதுவே இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியென முத்திறப்பட்டு நின்று வியாபரிக்கும்.

உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தை அளித்தற்கு இரங்கும் நிலை இச்சா சக்தி ; அங்ஙனம் உயிர்கள் பால் இரக்கங் கொண்ட பின்னர், அவை சிவத்தைச் சார்வதற்கு வேண்டப்படும் உபாயங்களை அறியும் நிலை ஞான

சக்தி. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்றவைகளை வகுக்கும் நிலை கிரியாசக்தி.

சிருட்டியின் ஆரம்பத்தில், பரமசிவம் தனது துரிய ஞானத் தனி நிலையை விடுத்து அசைந்து, பராசக்தி நிலையை யடைகின்றது; அப் பராசக்தியினது நிலையும் தூய ஞானநிலையே யாயினும், அந்நிலை உயிர்களைக் குறித்த நினைவு ஏற்பட்ட இடமாமென அறிக. அப் பராசக்தி திரோதாயி யெனப்பட்டு, உயிர்களின் பொருட்டுச் சிருட்டியாதிகளைச் செய்யும் பொருட்டு வியாபரிக்குங்கால், ஞான சக்தியாய் வியாபரிக்கும். அவ் வியாபரிப்பே பரநாதம் எனவும், சிவதத்துவம் எனவும் கூறப்படும்.

இதனால் உயிர்களின் பொருட்டுப் பரசிவம் பராசக்தியை அதிட்டித்துத் தொழிற்படுவதே சிருட்டியாரம்பம் என்பது அறியப்படும். எனவே பரம்பொருளாகிய சிவம், சிதாகாச மாகிய பராசக்தியினிடம் எழுப்புவதே சிதா காசத்துள் எழுகின்ற முதல் அசைவாம் என்பதும் புலப்படும்.

பரசிவம், பராசக்தியானது ஒரு கூறுகிய ஞான சக்தியோடு கூடித் தொழிற்படுவதனால் சிவ தத்துவம் தோன்றும். அதிலிருந்து சக்தி தத்துவம் தோன்றும்; அச்சக்தியிலிருந்து நாதம் பிறக்கும்; அந் நாதமே அபர நாதம் எனப்படும்; அந் நாதத்திலிருந்து விந்து தோன்றும் ; அவ் விந்துவே அபர விந்து எனப்படும். இதனை,

> ''சிந்தையி னுள்ளே திரியுஞ் சிவசக்தி
> விந்துவும் நாதமு மாயே விரிந்தனள்''

என்ற திருமூலர் திருவாக்கினாலுந் தெளிக.

சிவ தத்துவத்தில் சக்தியிருக்குமேனும், சிவ ரூபமாகிய ஞானமே சிறந்து விளங்கா நிற்கும் ; சக்தி தத்துவத்தில் சிவம் இருக்குமேனும், சக்தியினது இயல்பாகிய கிரியையே முனைந்து விளங்கும். சிவன் தனது சக்தி சங்கற்பத்தால், நாநாதிவிதமாம் உருவப் பிரபஞ்சத்தைப் பஞ்சகிருத்தியப்படுத்துவன்.

பரம காரணமான அதீத நிலையில், பரசிவம் பராசக்தியோடுங்கூடி அசைவுறுதலே நாதாந்த நடனம் ஆகும்.

நாதாந்தம் என்பது, நாத அந்தம் எனப் பிரியும்; நாத தத்துவத்தின் முடிவு எனப் பொருள்படும். நாதம், தத்துவங்கள் எல்லா வற்றினுந் தலையாயது என்பது மேலே கூறிய வற்றால் அறிக. இங்கு நாதம் என்றது, பர நாதமாகிய சிவ தத்துவமென்பதும் அறிக. ''நாதமுங் கடந்த வெளியிலே நீயும் நானுமாய் நிற்கும் நாள் உளதோ'' என்பார் பட்டினத்தார்.

இந்த நாதாந்த நடனத்தினையே, சமயாதீதப் பழம் பொருளாகிய ஏகநாதன், தில்லைத் திருச்சிற்றம்பலத்துள், தனது நடராஜத் திருவடிவத்தால் வெளியே விளக்கிக் காட்டுகின்றனன். நடராஜப் பெருமான் தன் ஆனந்த மேலீட்டினால், ஆன்மாக்களின் மீதுள்ள தன் கருணையே, தனது அருள் திருமேனியாகக் கொண்டு, எஞ்ஞான்றும் இடையறுது நின்று நிகழ்த்தும் அப் பொற்புறு நடனமே தில்லைத் திருநடனமாகும். பரசிவம் பராசக்தியை நோக்குதல், உயிர்கட்குச் சிருட்டியாகி விளையும் பொருட்டே என வுணர்க. இதனையே ''மாதொருபாகம் நோக்கி மன்னுசிற்றம்பலத்தே. . . அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனர்'' என்று, தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் கூறுகின்றனர்.

சிதாகாசமாகிய பரவெளியிலே, பரம் பொருள் பரநாதத்தை எழுப்பி ஆடும் அவ் வாடலே, ஆன்மாக்களுக்குத் தநுகரண புவன போகங்களைப் படைத்துக் கொடுத்தலோடு, முத்தியின்பத்தையும் வழங்குகின்றது. எனவே நாதாதீதமாகிய அந்த அருள் நடனம், உலக உயிர்கள் யாவும் உய்வதற்குக் காரணமாகும் என்பதை யுணர்க. பரநாத தோற்றமே சிருட்டியாரம்பம். அதன் ஒடுக்கமே சங்காரம். இத் தத்துவத்தைத் தெரிவிக்க வந்தது திருக்கோயிலில் உள்ள பள்ளியறை. பரசிவம் ஐந்தொழில் நிகழத் தன்னிற் பிரிவிலாத பராசக்தியை நோக்கும் என்ற உண்மையை, உலகம் உணர்ந்து உய்யும் பொருட்டே, அந்த அமைப்பு ஏற்பட்டது என்பதைக் கூர்த்த மதியினர் உணர்வர்.

அன்றியும், நடராஜ வடிவம் ஐம்பெருந் தொழில்களைக் காட்டுவதுமன்றி, இவ்வைம் பெருந் தொழிலுக்கும் அதீதமாயுள்ள பேரின்ப நிலையையும் குறிக்கும் ; சிவபரம் பொருள் கேவல திசையில் இருந்த ஆன்மாக்களுக்குத் தநுகரணாதிகளைக் கொடுத்தல் தூல நடனம் எனப்படும் ; அது ஆன்மாக்களுக்குப் பெத்த நிலை அறிவிக்குந் தொழில் அதிசூக்கும நடனம் எனப்படும். ஆன்மாக்கள் பந்தத்தினின்றும் விடுபட்ட முத்தி தசையில் அநுபவப் பேறு பர நடனம் அல்லது ஞான நடனம் எனப்படும்.

எனவே, ஆனந்தத் தாண்டவம் பஞ்ச கிருத்தியத்தை மாத்திரம் காட்டுவதன்று ; அது நின்மல துரிய நிலையில் உண்டாகும் அருள் விளக்கத்தையுங் காட்டி, அதற்குப் பின் உண்டாகும் துரியாதீதத்துச் சிவபோக ஆநந்த நிலையையுங் காட்டுவதாகும். மெய்ஞ் ஞான மாகிய அருள் விளக்கமே மெய்யுணர்வாகும்.

> ''ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
> மெய்யுணர் வில்லா தவர்க்கு''

என்பார் திருவள்ளுவர்.

இந்த மெய்ஞ்ஞான அருள் விளக்கத்துக்குப் பின் நிகழா நிற்குந் திருக்கூத்தே சிவபோக மாகும். இதனைச் சேக்கிழார் பெருமான் தவிர, வேறு யாரால் விளக்க முடியும்? சிவயோக சிகாமணியாகிய திருமூல நாயனரது அநுபவப் பேற்றைக் கூறுமிடத்து இதனைக் கூறுகின்றார்.

> எவ்வுலகும் உய்ய எடுத்
> தருளியசே வடியாரைச்
> செவ்வியஇன் புறவணங்கிச்
> சிந்தைகளி வரத்திளைத்து

வவ்வியமெய் யுணர்வின்கண்
வரும் ஆனந்தக்கூத்தை
அவ்வியல்பிற் கும்பிட்டங்
காராமை யமர்ந்திருந்தார்.

சிவபோக விளைவாம் திருக்கூத்தைக் கண்டு திளைத்த, சித்தருள் ஒருவராகிய திருமூல நாயனர், தமது திருமந்திரத்தில் இப் பேரின்பத் திருநடனத்தின் உட்பொருளை மிகவும் சிறப்பித்து விளக்கியருளினர்.

பரம்பொருளாகிய சிவம், ஆன்மாக்களின் மீது வைத்துள்ள கருணையே தமது உருவாகக் கொண்டு, பராபரையின் திருமுன் ஆனந்தத் திருக்கூத்தை இயற்றுகின்ருர் என்ற தத்துவத்தைக் கூறுகின்ருர்.

அண்டங்கள் ஏழினுக் கப்புறத் தப்பால்
உண்டென்ற சக்தி சதாசிவத் துச்சிமேல்
கண்டங் கரியான் கருணைத் திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே.

அப்பராநந்தக் கூத்து நிகழ்வதற்குரிய இடம் பேரின்ப நிலையாகிய துரியமே என்பதைக் கூறுகின்ருர்.

தெற்கு வடக்குக் கிழக்குமேற் குச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில் பேரின்பத் துபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே.

இப்பேரின்ப உபயத்துள் நிகழ்வதாகிய நடனத்திற்கு அம்பலமாக அமைந்துள்ளது பராசக்தியேயாம் என்பதைக் கூறுகின்ருர்.

அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டையா காசங்கள் ஐந்தும் பதியாகத்
தெண்டினிற் சக்தி திருஅம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே.

அத் திருக்கூத்தைக் கண்கூடாகக் காண வல்லார் மாயை கடந்த மாதவரேயாவர்.

தீமுதல் ஐந்தும் திசைஎட்டும் கீழ்மேலும்
ஆயும் அறிவினுக் கப்புறம் ஆனந்தம்
மாயைமா மாயை கடந்து நின்ருர் காண
நாயகன் நின்று நடஞ்செய்யு மாறே.

அப் பரமானந்தக் கூத்தைக் காணும் தோறும், புளியைக் கண்டார்க்கு நாவில் நீர் ஊறுவதுபோல் உள்ளத்தே ஆனந்த அருவி பாயும்; சிவபோக விளைவே அத்திருநடனம் ;

புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாப்போல்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
அளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத் தமுதூறும் உள்ளத்தே.

நாதாந்த நிலையிலே நின்று நம்பன் நடிக்கின்றதனலே அண்ட சராசரம் யாவும் ஆடுகின்றன.

தேவர்சுரர் நரர் சித்தர் வித்தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே

மேலும் சிவபோகமாகிய முத்தி முடிவைக் குறித்தலோடு, சிவபரம் பொருளே ஆக்கல் அளித்தல் மறைத்தல் அருளல் என்ற ஐந்து தொழில்களையும் அயன் அரி உருத்திரன் மகேசன் சதாசிவன் என்னும் ஐவகை மூர்த்திகளின் வழியாகச் செய்கின்றது என்பதைக் காட்டி நிற்குந் தன்மை தன்னிடந் தங்குமாறு அமைந்துள்ள திருவுருவம் நடராஜ வடிவமாகும்.

அவருடைய திருக்கரத்தில் விளங்கும் உடுக்கை (டமருகம்)யினுல் உலக சிருட்டியையும், அபயகரத்தினுல் காத்தலையும், நெருப்பை ஏந்திய திருக்கரத்தினுல் அழித்தலையும், ஊன்றிய திருவடியால் மறைத்தலையும், தூக்கிய திருவடியால் ஆன்மாக்களுக்கு அருளலையும் இத்திருவுருவம் காட்டுகின்றது. இதனை ''உண்மை விளக்கம்'' என்ற சித்தாந்த நூலாசிரியர் மனவாசகங் கடந்தார் கூறுகின்ருர்.

தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையிற் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அநுக்கிரகம் என்னே.

— திருமந்திரம்.

தாண்டவஞ் செய்ய வல்ல ஆண்டவன், மாயையை எடுத்து அப்படி உடுக்கையினுல் உதறுகின்ருர். ஆன்மாக்களின் வல்வினைகளை —சஞ்சிதத்தைத் தமது திருக்கரத்தில் உள்ள நெருப்பில் சுட்டிக் சாம்பலாக்குகின்ருர். ஆணவமாகிய முயலகனை மேலெழா வண்ணம் கிரியா சத்தியாகிய வலப்பாதத்தினுல் மிதித்திருக்கின்ருர். ஆனந்த அநுபவத்தை ஞான சத்தியாகிய தூக்கிய திருவடியினுல் தந்து ஆன்மாக்களைப் பேரின்ப சாகரத்தில் அழுத்துகின்ருர். இதுவே அவர் செய்யும் பரத நாட்டியத்தின் உட்பொருள்.

மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய அமுக்கிஅருள் தான்எடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதந் தான்.

—உண்மை விளக்கம்

இனி நடராஜ வடிவம், பஞ்சாட்சரத்தால் அமைந்ததும் ஆகும். அதனை அறிந்து தியானிப்பதும், ஞான சாதகர்களுக்குக் கூறப்பட்ட முறைகளுள் ஒன்ருகும்.

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம் — கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

இதன் பொருள் :

''மாணுக்கனே! பொன்னம்பலமுடையான் திருநடனஞ் செய்கின்ற முறையைச் சொல்கின்ரேம் ; கேட்கக் கடவாயாக :

நின்றபாதத்திலே — ந
திருவுந்தியிலே — ம
திருத்தோளிலே — சி
திருமுகத்திலே — வா
திருமுடியிலே — ய

இந்த வண்ணம் எம்பிரான் ஐந்தெழுத்தையும் உருவமாகக் கொண்டு ஆடுகின்ருன் என்று அறிக. இது தூல பஞ்சாக்கரம். அன்றியும் சூக்கும பஞ்சாக்கர வகையாலும் அப்பரமனது தாண்டவ வுருவம் பேசப்பெறும்.

சேர்க்குந் துடிசிகரம் சிக்கெனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகரம் அடிக்கீழ் முயலகனர்
தங்கும் மகரமது தான்.

மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமஎன ஒதே.

ஒலிக்கின்ற உடுக்கை — சி
வீசியகரம் — வ
அமைத்த கரம் — ய
அனலேந்தியகரம் — ந
முயலகனைமிதித்த பாதம் — ம

இத்தகைய அருளானந்த அற்புதத் திருக்கூத்தை, உள் முகத்தில் நாடி, அலைகின்ற மனத்தை ஒடுக்கி, உள்ளுணர்வு பெற்று உவக்க வேண்டும் என்கிருர் திருமூலர்.

ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலம் குருபரன் கொண்டாடத்
தேடியு(ள்)ளே கண்டு தீர்ந்தற்ற வாறே.

இதுகாறும் கூறிய விளக்கத்திஞல், நாதாந்த நடனம் எனப்படும் ஆனந்தக் கூத்தால் உலகில் காணப்படும் அசைவுகள் யாவும் அவன் தன் அருளாலே செய்யும் ஆணையினுலே நிகழ்கின்றன என்பதும்; அத்தகைய நிகழ்ச்சியானது ஆன்மாக்கள் தம்முடைய இன்பங்கட்குக் காரணமான பந்தத்தினின்றும் நீங்கிப் பேராவியற்கைத்தாகிய முத்தியின்பத்தைப் பெறும் பொருட்டே நிகழ்கின்ற தென்பதும் ; அத் திருக்கூத்து நடைபெறுமிடம் தூலமாகிய திருச்சிற்றம்பலமே யன்றி, உலகமாகிய திருக்கோயிலும், சூக்குமமாகிய தகராகாசம் எனப்படும் அன்பர்களது இதய கமலமும் ஆகும் என்பதும், இனிது புலப்படும்.

இத்தகைய தத்துவங்களைத் தெளிவுறக் காட்டுந் திருவுருவம் நடராஜ வடிவினையன்றி வேறு ஒன்றும் இல்லை. இதனை நமக்கு உணர்த்திய ஆன்ருேர்களின் மதி நலம், துதி நலம் உடையதாகும். நடராஜ வடிவினைச் சூழ்ந் திருக்குந் திருவாசி ஒங்காரமாகும். இத்தகைய திருவுருவம் சிறப்பாக விளங்குவதனுல் தில்லையைத் தரிசித்த மாத்திரத்தில் முத்தியென மூந்தையோர் மொழிந்தனர். அதாவது நடராஜ வுருவத்தால் விளங்கும் சிவபோக நிலையைத் தரிசித்த மாத்திரத்தில் முத்தியுறும் என்பது போதரும்.

அதனுல் இத் தில்லை நடராஜ வுருவினைக் காணும் வாய்ப்புக் கிடைக்குமாயின், மண்ணுலகில் மனிதப் பிறப்பு மற்ருெரு முறை வந்தாலும் குறைவில்லை என்கின்ருர் அப்ப மூர்த்திகள்.

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

தன் பால் வந்த அடியார்களை ''என்று வந்தாய்?'' என்று கருணையுடன் கேட்பது போலவும் இருக்கிறது தென்பால் நோக்கியாடும் தில்லைப் பரமனது அபய கரத்தின் குறிப்பு.

ஒன்றியிருந்து நினைமின்கள்
உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலால்
கடிந்தான் அடியவர்க்காகச்
சென்று தொழுமின்கள் தில்லையுள்
சிற்றம்பலத்து நட்டம்
''என்று வந்தாய்?'' எனும்எம்
பெருமான்றன் திருக்குறிப்பே

இனி எல்லாமாய் நின்ற எம்பிரானுகிய அம்பலக் கூத்தனைத் தினையளவு நேரமாகிலும் நான் மறந்து உய்ய மாட்டேன் என்கின்ருர் அப்பர்.

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனே.

இத்தகைய திருக்கூத்தைச் சுந்தரமூர்த்தி நாயனுர் தரிசித்தபோது, அவருக்கு நிகழ்ந்த அநுபவத்தின் சிறப்பை எமது சேக்கிழார் பெருமான் கூறுகின்ருர்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமேயாக
இந்துவாழ் சடையான்ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள்திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

கருணையே உருவாகிய கனகசபாபதியின் தாண்டவத்தின் பெருமையை, வேத சிவாகமங்களே முழுவதும் உணர்ந்தில என்ருல், எம்போன்ருேர் எங்ஙனம் உணர்வர்? ஏதோ அவன் அருள் உணர்த்தியவாறு சிறிது வரைந்தோம். அன்பர்கள் அனைவரும் ஆனந்த நடனம் புரியும் அம்பலவாணனை, இன்னம் பல யோனியில் எய்தா திருக்குமாறு இறைஞ்சி இன்னருள் பெறுவார்களாக.

**



(முற்றோடர்ச்சி)

(61) அணி சிறந்த மணி :

அம்பிகை, ஒரு சமயம் இமயமலை அரச னுக்கு மகளாகத் தோன்றினாள். அதனால் அம் மலையரசனின் மரபு, பெருஞ் சிறப்பைப் பெற் றது. எனவே அம்மரபுக்கு வெற்றிக் கொடி போல அம்பிகை விளங்கினாள். அத்தகைய அமலை ஆகிய அம்பிகை, தனது முகத்தில் உள்ள மூக்கின்கண், அழகிற் சிறந்த மணியினால் அமைந்த மூக்குத்தி அணிந்துள்ளாள். அது, மலையிலே பிறந்த ஒரு கொடியின்கண் ஒரு தாமரைப் பூ மலர்ந்தாற் போலவும்; அத்தாம ரையின்கண் அழகிய ஒரு குமிழம்பூத் தோன்றி, ஒரு சிறந்த வெண்முத்தினை ஈன்றது போலவும் தோன்றுகின்றது. குற்றமற்ற கவிஞர்கள், இதனை மிகவும் வியந்து, இத்தகைய ஒரு காட்சியை யாம் எங்கணுமே கண்டதில்லை என்று, புகழ்ந்து கூறி மகிழ்வார்கள்.

இமய மன்னன் மரபில் வெற்றி
இடு பதாகை அனையஎன்
அமலை உன்றன் வதன துண்ட
அணி சிறந்த மணியையோ?
விமலம் மன்னு கவிஞர், முத்தை
வெற்பில் வல்லி அலர்வதுஓர்
கமலம் மன்னு குமிழ் அளித்தல்,
கண்டது அல்ல என்பதே!

அம்பிகை, தன் அருளால் இமயமலை அரச னின் தவத்திற்கு மகிழ்ந்து மகளாகத் தோன்றி, அவனையும் அவனது குலத்தையும் சிறப்புறச் செய்தனள் ஆதலின், ''இமய மன்னன் மரபில் வெற்றிஇடு பதாகை அனைய என் அமலை'' என்று போற்றிப் புகழ்ந்தார். மரபு-குலம். பதாகை -கொடி. அமலை-மலமற்றவள்; பிறர் மலத்தை யெல்லாம் போக்குபவள். சுமங்கலிகள் ஆகிய மகளிர் மூக்குத்தி அணிந்து கொள்ளும் இயல் பினராதலின், அம்பிகை, அணிந்து கொண்டி ருக்கும் மூக்குத்தியினை, ''வதன துண்ட அணி சிறந்த மணி'' என்று சிறப்பித்தார். வதனம்- முகம். துண்டம்-மூக்கு. அம்பிகையை மலையில் தோன்றிய கொடியாகவும், அவளது முகத்தினை அக்கொடியில் மலர்ந்த தாமரையாகவும், முகத் தில் உள்ள மூக்கினைத் தாமரையில் தோன்றிய குமிழம் பூவாகவும், மூக்கில் பதிந்து உள்ள முத்தினைக் குமிழம்பூ முத்தினை ஈன்றதாகவும், குறித்துள்ள கற்பனைத்திறம், பெரிதும் போற்றத் தக்கது. வெற்பு-மலை. வல்லி-கொடி. கமலம்- தாமரை. குமிழ்-குமிழம்பூ. மலையில் தாமரைக் கொடி தோன்றுதலும், தாமரையில் குமிழம்பூப் பூத்தலும், அது முத்தை ஈனுதலும் இல்லையாத லின், ''விமலம் மன்னு கவிஞர் கண்டதல்ல'' என்றனர். இது பொருளதிசயம் என்னும் அணி யாகும். விமலம்-குற்றம் அற்ற தன்மை. இச் செய்யுள் அம்பிகையின் மூக்குத்தியழகைப் புகழ்ந்தது. *(61)*.

(62) இதழ்ச் சிவப்பு இயற்கை :

அம்பிகையின் திருவாயில் உள்ள இதழ்கள், மிகவும் சிவந்த அழகிய இயல்பைப் பெற்றுள் ளன. பெண்களின் இதழ்களுக்குப் பொதுவாகக் கொவ்வைக் கனியை உவமையாகக் கூறுவது உண்டு. ஆனால் அம்பிகையின் இதழ்களினுடைய நிறத்தின் சாயலைப் பெற்று, அவற்றின் நிழலி னது தோற்றமாகவே தாம் விளங்கி வருவ தனால், கொவ்வைக் கனிகள், 'அம்பிகையின் இதழ்களுக்கு நாம் இணையாக மட்டோம்' என்று அஞ்சி, நாணம் கொள்ளும். ஒரு கால் உவமை ஏதேனும் உரைக்க வேண்டுமாயின், கடலில் உள்ள பவளமானது பழங்களைப் பழுக்குமாயின், அப்போது அதனை ஒருவாறு உவமையாகச் சொல்லக்கூடும்.

இறைவி நின் இதழ்ச் சிவப்பு
இயற்கை; இத்தொடு இணைசொனால்
நிறைகொள் கொவ்வை; இந்நிறத்தின்
நீழல் பெற்று விம்பமாய்
உறைதல் கொண்டு நாணும்; மற்றுஓர்
உவமை இல்லை; உண்டுஎனு
அறை கடல் துகிர்ப் பழுக்கின்
அன்று சொல்வன் அளியனே

இறைவியின் இதழ்களை வியந்து, ''இதழ்ச் சிவப்பு இயற்கை'' என்றும்; அதற்கு இணை யில்லை என்பார் ''இத்தொடு இணைசொனால்'' என்றும் குறிப்பிட்டார். கொவ்வைக் கனி, ஏனைய மகளிரின் இதழ்களுக்கு உவமையாகு மாயினும், அம்பிகையின் இதழ்களுக்கு உவமை யாகத் தகாது என்பார் ''இந்நிறத்தின் நீழல் பெற்று விம்பமாய் உறைதல் கொண்டு நாணும்'' என்றார். கொவ்வைக் கனி தலை கீழிட்டு இருத்தலால், நாணும் எனப் பொருத்த முறக் கூறினார். நாணுதல்—தலைகீழிட்டுக் குனிந்து கவிழ்ந்து நிற்றல். அம்பிகையின் இதழ்கள் இணையற்றவை என்பார் ''மற்று ஓர் உவமை இல்லை'' என்று மேலும் வலியுறுத்தினார். விம்பம்-பிரதிபலிப்பு ; நிழலின் தோற்றம். ''துகிர் பழுக்கின்'' என்றது, துகிர் (பவளம்) பழங்கள் பழுக்காது என்பது உணர்த்திற்று.

''பழுக்கின் அன்று சொல்வன்'' என்றது, பவளம் பழுப்பதும் இல்லை, அதனை யான் உவமையாகச் சொல்ல நேர்வதும் இல்லை என்ற கருத்தினது. உவமை கூற இயலாத ஒன்றற்கு உவமை தேடிக் கூற முற்பட்டுத் தோல்வியுற்ற தம் செயலுக்கு இரங்கி ''அளியன்'' (இரங்கத் தக்கவன்) என்று, தம்மை ஆசிரியர் சுட்டிக் கொண்டார். இஃது அற்புத உவமை என்னும் அலங்காரம். இப்பாடல் அம்பிகையின் இதழ் அழகைப் புகழ்ந்தது. (62).

(63) மூரலுக்கு நிகர் மூரலே :

அம்பிகை உலகுக்கெல்லாம் தாயாக விளங்குகின்றாள். அவளது திருவுருவம், அன்பானது முதிர்ந்து, ஓர் வடிவத்தை எடுத்து வந்தாற் போன்றுள்ளது. அவளது திருமுகம், சந்திரனைப் போன்று விளங்குகின்றது. அம்முகத்தினின்று தோன்றும் புன்முறுவல், சந்திரனின் நிலா ஒளியினின்று பெருகும் அமுதமும், அதன் இனிமையும், மணமும், குளிர்ச்சியும் ஒருங்கு சேர்ந்தாற் போன்று திகழ்கின்றது. அம்பிகையின் முகமாகிய சந்திரனில், தோன்றும் புன்முறுவலாகிய நிலா ஒளியின் இனிமைச் சுவை, சகோரம் என்னும் பறவைகளால் உண்ணப் பெறுகின்றது. இன்பச் சுவையையே பெரிதும் உண்டால், உண்பவர்களுக்கு அது தெவிட்டி உவட்டுதல் இயல்பு. இனிமைச் சுவை தெவிட்டினால், இழிந்த புளிப்புச் சுவையையும், மக்கள் விரும்பி உண்ண முற்படுவர். அதனால்தான் சகோரப் பறவைகள், இழிந்த புளிப்புச் சுவையை விரும்பி, சந்திரனின் நிலா ஒளியை உண்ணுகின்றன போலும்!

அன்பு முற்றி வடிவாய அம்மை! நினது
ஆனனத்து மதி நகைநிலா
நன்புறத்து அமுதம் ஒழுகும் மாமதுரம்
நறைகொள் சீதளம் அயின்றவாய்
இன்புளிப்பு அலது உவட்டுறுது; இனி
எனத் தெவிட்டிய சகோரம், வான்
முன்பரப்பும் நிலவு உண்ணுமால்; உனது
மூரலுக்கு நிகர் மூரலே

இப்பாடல் அம்பிகையினது புன்முறுவலின் சிறப்பைப் புகழ்ந்து போற்றுகின்றது. உலகத்து உயிர்களையெல்லாம் அருளினால் போற்றிக் காத்து வருதலின், அம்பிகையை அவற்றிற்கெல்லாம் தாய் என்னும் கருத்தில், ''அம்மை'' என்றார். உலகத்து உயிர்கள் மாட்டு அம்பிகையின் எல்லையற்ற அன்பின் திறனை விளக்குவதற்கு ''அன்பு முற்றி வடிவாய அம்மே'' என்றார். அம்பிகையின் முகத்தைச் சந்திரன் என்றும், அவளது புன்முறுவலைச் சந்திரனின் நிலா ஒளி என்றும் உருவகித்து, ''நினது ஆனனத்து மதி, நகை நிலா'' என்றார். ஆனனம்-முகம். மதி-சந்திரன். நகை-புன்முறுவல். நிலா-சந்திரனின் ஒளி. அம்பிகையின் புன்முறுவலில், சந்திரனின்பால் இல்லாத அமுதமும் இனிமையும் மணமும் குளிர்ச்சியும் நிறைந்துள்ளன என்பார் ''நகை நிலா நன்புறத்து அமுதம் ஒழுகும் மாமதுரம் நறைகொள் சீதளம்'' என்று சிறப்பித்தார். மதுரம்-இனிமை. நறை - மணம். சீதளம்-குளிர்ச்சி.

சகோரம் என்னும் பறவை, சந்திரனின் ஒளியை உண்டு வாழும் என்பர். அதற்குரிய காரணத்தை இங்கு ஆசிரியர் தற்குறிப்பேற்றம் என்னும் அணி அமையக் கூறுகின்றார். முன்பு இன்பச் சுவையையே உண்பவர்கள், பின்பு இழிந்த புளிப்புச் சுவையை விரும்பி நிற்பர். அம்பிகையின் புன்முறுவல் ஆகிய நிலா ஒளியின் இனிமைச் சுவையையே உண்டு தெவிட்டியதனால், சகோரப் பறவைகள், வானத்திலுள்ள சந்திரனின் நிலவு ஒளியாகிய புளிப்புச் சுவையை விரும்பி உண்ணுகின்றன என்பார், ''தெவிட்டிய சகோரம், வான்முன் பரப்பும் நிலவு உண்ணும்'' என்றார். சகோரம்—சகோரப் பறவை. அயின்ற — உண்ட. உவட்டுறுது—தெவிட்டாது. சந்திரனின் நிலா ஒளியைக் காட்டிலும், பன்மடங்கு ஒளியும் சிறப்பும் மிக்கு விளங்குவது அம்பிகையின் புன்முறுவல் ஆதலின், ''மூரலுக்கு நிகர் மூரலே'' என்றார். மூரல்—முறுவல். புன் சிரிப்பு. நிகர்—சமானம்.

இச்செய்யுள் அம்பிகையின் முகமாகிய மதியில் விளங்கும் நகையாகிய நிலாவின் ஒளியை, வானத்திலுள்ள மதியினது நிலா ஒளியினின்றும் மேம்பட்டது என உவமை கூறி மறுத்து, அப்பொருள் தன்னையே உவமையாகக் கூறியமையால், பொது நீங்கு உவமை என்னும் அணியாகும். (63).

(64) செய்ய கேழ் ஒளிவனப்பு :

அம்பிகை, தன் நாவினால் ஏதேனும் சொல்ல முற்படும்பொழுதெல்லாம், தனது தலைவராகிய சிவபெருமானின் வீரம் புகழ் அழகு முதலியனவற்றையே, சொல்லிச் சொல்லி மகிழ்கின்றாள். அச் சொற்கள் தெளிந்த சிறந்த கவிதைகள்போல் வெளிவருகின்றன. இனிமைச் சுவை முதிர்ந்து, நிறைந்து பழுத்தாற் போலச் சுவைமிகுந்து திகழ்கின்றன. அச்சொற்கள் இடையுறுது மேன்மேலும் பெருகி வெளிவருதலின், அம்பிகையின் நாக்கானது, சிவந்த நிறமும் ஒளியும் அழகும் பெற்று ஒளிர்கின்றது. வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவளும், வெண்மை நிறம் வாய்ந்த மேனியை உடையவளும் அகிய கலைமகள், அம்பிகையின் நாவில் இடம்பெற்று விளங்குகின்றாள். அதனால் அம்பிகையினது நாக்கின் செம்மை நிறமும் அழகும், ஒளியும், கலைமகள் பாலும் படிகின்றன. அவள் தன் வெண்மை நிறத்தை இழந்து, மாணிக்கம் போன்று செம்மை நிறத்தை அடைகின்றாள்.

விள்ள நாஉரை எழுந்தொறும் தலைவர்
வீரமும் புகழும் அழகுமே
தெள்ளு பாடல் மதுரம் பழுத்தனைய
செய்ய கேழ்ஒளி வனப்பினால்,
அள்ளல் மாமலரை விட்டு வாணி, உனது
அருண நாஉறைய, வெள்ளையாய்
உள்ள மேனியும், என் அம்மை நீஅருள
உன்நிறம் பெறுவது ஒத்ததே!

இப்பாடல் அம்பிகையினுடைய நாக்கின் எழிலைப் புகழ்கின்றது. கற்புடை மகளிர் தமது கணவரின் வீரம் புகழ் அழகு முதலியவற்றினை

இடையருது பேசி மகிழ்வர். ஆதலின், ''விள்ள நாவுரை எழுந்தோறும் வீரமும் புகழும் அழகுமே'' என்றூர். கணவரின் வீரம் புகழ் அழகு முதலியவற்றை வியந்து புகழ்ந்து, காதல் மகளிர் பேசுங்கால், அவர்தம் உணர்ச்சி, கவிதை வெள்ளமாக அமைந்து இன்பச்சுவை வளம் கனிந்து திகழும் ஆதலின், ''தெள்ளு பாடல் மதுரம் பழுத்தனைய'' என்றூர். ஒரு செயலை இடையருது செய்யும் ஓர் உறுப்பு, அதனுற் சிவப்பேறித் திகழும் ஆதலின், சிவ பெருமானின் வீரம் புகழ் அழகு ஆகியவற் றையே இடையருது பேசித் துதித்துப் புகழும் அம்பிகையின் நாக்குச் சிவந்தது என்றும்; அச் சிவப்புநிறம் அம்பிகையின் நாவிற்கு மேலும் அழகும் ஒளியும் அளித்தது என்றும் கூறுவார், ''செய்ய கேழ் ஒளி வனப்பு'' என்று சிறப்பித் தார். கலைமகள் அம்பிகையின் நாவில் இடம் பெற்று, அதனுல் சிறப்புற்றுள் என்பார், ''அள் ளல் மாமலர் விட்டு வாணி உனது அருண நா உறைய'' என்றூர். வாணியாகிய கலைமகள் சிறப்புற்ற தன்மையை விளக்குவதற்கு, அவள் வெண்மை நிறம் நீங்கி, செம்மை நிறம் பெற்ற தனை ஏதுவாகக் காட்டுவார், ''வெள்ளையாய் உள்ள மேனியும், உன்னிறம் பெறுவது ஒத்ததே'' என்றூர். இங்ஙனம் வாணியாகிய கலைமகள் நிறமாற்றம் எய்திச் சிறப்புற்றது நின் அருளினுலேயாகும் என்பார். ''என் அம்மை நீ அருள'' என்றூர். விள்ள-விளக்கிக்கூற. தெள்ளுதல்- தெளிவுற்றுத்திகழ்தல். மதுரம்- இனிமை. அனைய-போன்ற. செய்யகேழ்- சிவந்த நிறம். வனப்பு-அழகு. அள்ளல்-சேறு. அள்ளல்மாமலர்-சேற்றிற் பிறந்த வெண் தாமரை. வாணி-கலைமகள். அருணம்-சிவப்பு. உறைதல்-வசித்தல். அம்பிகையினுடைய நாவின் சிவப்பு நிறம், வாணியின் வெள்ளை நிற மேனியிற் படிந்து பரவுதலால், வாணியின் மேனி செந்நிறம் பெற்றது என்பார். ''உன் நிறம் பெறுவது ஒத்தது'' என்றூர். வெள்ளை நிறத்தில் செந்நிறம் ஏறிப்படிவது இயல்பாதல் காணலாம். ''உன் நிறம்'' என்று அம்பிகையின் மாணிக்கமணி நிறத்தைக் குறித்தார். இச் செய்யுள் அதிசய உவமை என்னும் அணியாகும்.

(65) அமரர் எனும் பெயர் :

உமையம்மை தன் குழலில் கற்றையாக மலர்கள் அணிந்துள்ளாள். மேலும் அவள் தாம்பூலம் தரிக்கின்றுள். அதில் பச்சைக் கருப் பூரத்துண்டம் சேர்ந்துள்ளது. அது வெண்மை நிறத்தால், மதித் துண்டம்போல உள்ளது. அம் பிகை தரிக்கும் தாம்பூலத்தின் ஒரு சிறு துண்டத் தினைத் தேவர்கள் உண்ணும் பேறு பெற்று, வாழ்க்கை வளம் பெறுகின்றனர். அதனுல் தேவர்கள், சிவபெருமானின் பரிகலச் சேட மாகிய நின்மாலியம், சண்டேசுவரனுக்கு மட்டும் கிடைக்கின்றதே, நமக்குக் கிடைக்க வில்லையே என்று, தாம் கொண்டிருந்த ஏக்கம் தீரப் பெறுகின்றனர். மேலும் அம்பிகையின் தாம்பூலத் துண்டத்தினை ஒரு சிறிது உண்ணப் பெற்றதனுல், அவர்கள் இறவாத வாழ்வு எய்தி, அமரர் என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றனர். அம்பிகையின் அருள் இல்லையாயின், அவர்களுக்கு இறவாத வாழ்வும், அமரர் என் னும் சிறப்பும் ஏற்பட்டிருத்தல் இயலாது.

> அற்றைஅருட் சிவடேம் சண்டன்உண
> அதுபொருது ஆவல் தீரக்,
> கற்றைமலர்க் குழல்உமை! நின் கருப்பூர
> சகலமதிச் சகலம் போல,
> உற்றதிருத் தம்பலத்தின் ஒருசகல
> மேனும், இனிது உண்டு வாழப்
> பெற்றிலரேல் அமரர்எனும் பெயர்பெறவும்
> இருந்தனரோ? பிழைப்பில் விண்ணேர்!

சிவபெருமானுக்குச் சிவாலயங்களில் நாள் தோறும் அணிவிக்கவும் ஆராதிக்கவும் பெற்ற நின்மாலியப் பொருள்கள் எல்லாம், சண்டேசு வரருக்கு உரியனவாய் அவரால் நுகரப்பெறும். இவ்வுண்மை,

> ''அண்டர் பிரானும் தொண்டர்தமக்கு
> அதிபனுக்கி அனைத்தும் நாம்
> உண்ட கலமும் உடுப்பனவும்
> சூடு வனவும் உனக்காகச்
> சண்டீ சனுமாம் பதந்தந்தோம்
> என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
> துண்ட மதிசேர் சடைக்கொன்றை
> மாலை வாங்கிச் சூட்டினர்.''
> —பெரிய புராணம்.

எனவரும் சேக்கிழார் செய்யுளால், தெள்ளி தின் உணரப்படும். ஆதலின் ''அற்றை அருட் சிவசேடம் சண்டன் உண'' என்றூர். 'அன்று' எனும் சொல் 'அற்றை' என வந்து, நாள் தோறும் என்னும் பொருள் குறித்தது. சேடம்- எஞ்சியபொருள், நின்மாலியம். சண்டன்- சண்டேசுவரர். சிவபெருமான் உண்டு எஞ்சிய சேடம், தமக்குக் கிடைக்காமையால், தேவர்கள் சண்டேசுவரர்மீது அழுக்காறு கொள்கின்ற னர்; சிவபெருமான் சேடம் உண்பதற்குத் தேவர்கள் பெரிதும் ஆவல் கொள்கின்றனர். அவ்வழுக்காறும் ஆவலும் தீர, அம்பிகை அணி யும் தாம்பூலத்தில் ஒரு சிறிது உண்ணப்பெறு கின்றனர். அதன்பயனுக இறவாத இன்ப வாழ்வு பெறுகின்றனர். இதனைக் ''கற்றை மலர்க் குழல் உமை! நின் தம்பலத்தின் ஒரு சகலமேனும் இனிதுண்டு வாழப் பெற்றி லரேல், அமரர் எனும் பெயர் பெறவும் இருந் தனரோ?'' என்றூர். தாம்பூலம் என்னும் வட சொல், தமிழில் தம்பலம் என வந்தது. சகலம்- ஒரு சிறு துண்டு. அமரர் என்னும் சொல் மரித் தல் இல்லாதவர் என்னும் பொருளுடையது. அம்பிகையின் தம்பலத்தில் ஒரு சிறிது உண்ணப் பெற்றதினுலேயே, தேவர்கள் இறவாத இன்பப் பேறு எய்தினர் என்பது கருத்து. இச் செய் யுள் பண்புவமை என்னும் அணியும், பொரு ளேது என்னும் அணியும் ஆக அமைந்துள்ளன.

(66) கருணை பழுத்தனைய கொம்பு :

அம்பிகை பசுமையான பூங்கொடியையும், கருணை பழமாகப் பழுத்தது போன்ற கொம்பை யும் போன்றவள். அம்பிகையும் இறைவனும் ஒருங்கு எழுந்தருளியிருக்கும்போது, கலைமக ளாகிய வாணி இறைவனின் அழகிய தோள்கள் செய்த வீரச் செயல்களைக் குறித்துப் பலகாலும்

பாடி நிற்பள். அங்ஙனம் கலைமகள் பலகாலும் புகழ்ந்து பாடிநிற்கவும், அவளது பாடல் இசையைக் கேட்டுச் சிவபெருமான் ஒருபோதும் தன் முடியை அசைத்திலர். ஆனால் அம்பிகையின் இனிய சொற்களைக் கேட்குங்காலெல்லாம் பெரிதும் மகிழ்ந்து பாராட்டி, தமது திருமுடியை அசைத்தருள்கின்றார். அதுகண்ட கலைமகள் பெரிதும் நாணத்தை அடைந்து தனது இசைத் தொழிலை விட்டாள்; மேலும் தனது எழில் மிக்க வீணையை அதன் உறையில் இட்டு முடித்தாள். இஃதன்றி அவள் வேறு யாது செய்வாள்?.

பசுத்தமலர்க் கொடி, கருணை பழுத்தனைய
கொம்பே! நின் பரமர் பொற்றோள்
விசைத்தொழிலைக் கலைவாணி தனிற்பாடிப்
பாடி, அவள் மெலிவ தல்லால்,
அசைத்திலர்பொன் முடி, உனது மதுரமொழிக்கு
அசைத்தனர்என்று, அதற்கு நாணி
இசைத்தொழிலைக் கைவிட்டாள்; எழில்வீணை
உறையிலிட்டாள்; ஏது செய்வாள்?

இப்பாடல் சிவபெருமானுடைய தோள்களின் வீரச் செயல்களையும், அவற்றைக் கலைமகள் புகழ்ந்து பாடுதலையும் குறிப்பிடுவதுடன், அம்பிகையின் குரல் இனிமையையும் சொல் இனிமையையும் சிவபெருமான் மிகவும் பாராட்டி மகிழ்தலை அழகுறக் கூறுகின்றது. 'யாழைப் பழித்தன்ன மொழியாள்', 'பண்ணின் நேர்மொழியாள்' என்றெல்லாம் புகழ்ந்து போற்றப்படும் அம்பிகையின் மதுரமொழிகளின் முன்னர், கலைமகளின் இசைக்கலைத் திறனும், வீணை மீட்டும் திறனும் எடுபடாமல் சிறப்பிழந்து நிற்கும் என்பது கருத்து. இம் மேலை மூன்று செய்யுள்களும், அம்பிகையின் திருவாய் மொழிச் சிறப்பை அழகுற உணர்த்தின. அம்பிகையை மலர்க்கொடி என்றும், கருணை பழுத்தனைய கொம்பு என்றும் ஆசிரியர் புகழ்ந்தார். இசையில்வல்ல பாடகர் ஒருவர் பாடுங்கால், கேட்போர் அதனைக்கேட்டு மகிழ்ந்து பாராட்டும் முறையில் தலையசைத்தல் இயல்பு.

இதனை:

''ஆறுமுகம் பிள்ளை அவதானம் கண்டெளியேன்
வேறுமுக மன்கூற வேண்டுமோ?—தேறுமதிச்
சேஷையா மெச்சித் திருவாய் மலர்ந்துசபாஷ்
பேஷ்ஐயா என்ற பிறகு''

எனவரும் கவிமணியின் தனிப்பாடலால் அறியலாம்.

அம்முறையில் கலைமகளின் பாடலைக் கேட்டுச் சிவபெருமான் மகிழ்ந்து பாராட்டித் தலையசைத்திலர் ஆதலின், கலைவாணி அதற்குநாணி இசைத்தொழிலைக் கைவிட்டாள் என்றும், தனது எழில்வீணையை உறையிலிட்டாள் என்றும் ஆசிரியர் குறிப்பிட்டார்.

(67) தவக்கொழுந்து தழைத்த அம்மை :

மலையரையன் அம்பிகையை மகளாகப் பெற்றான். அதனால் அவன்தன் குழந்தையாகிய அம்பிகையின்மீது கொண்ட அன்பினால், அம்பிகையின் கன்னத்தைத் தொட்டு மகிழ்கின்றான். சிவபெருமான் தம் மனைவியாகிய அம்பிகையின் மீது தாம் கொண்ட காதலால் இதழமுதம் பருகுதற்கு விரும்பி, அம்பிகையின் கன்னத்தைத் தம் கையால் தொட்டு ஏந்தி மகிழ்கின்றார். இங்ஙனம் மலையரசனும் சிவபெருமானும் முறையே தந்தையும் கணவருமாகிய உரிமையில் தொடுவதனால், அம்பிகையின் கன்னம் சிறந்து பொலிவுறுகின்றது. அத்தகைய அம்பிகையின் கன்னமானது, சிவபெருமான் தமது திருமுகத்தின் அழகை, அம்பிகையின் முகம் ஆகிய கண்ணாடியில் பார்க்கும்படி, அதற்குக் குமிழாக இட்ட காம்புபோல விளங்குகின்றது.

மகவுஆசை யால்,இமய மலையரையன்
மலர்க்கைதொட, மனத்துள் அன்பு
புக,ஆசை யால்இறைவன் கரத்துஏந்தப்
பொலிவுறும்நின் சிபுகம் போற்றின்,
முகவாசி அரன்படிமக் கலம்பார்க்க
இட்டமுகிழ்க் காம்பு போலும்!
சகவாழ்வை இகழ்ந்து,இதயம் தனித்தவர்தம்
தவக்கொழுந்து தழைத்த அம்மே!

தவம் புரிபவர்களின் இயல்பு இன்னதென்பார் ''சகவாழ்வை இகழ்ந்து, இதயம் தனித்தவர்'' என்றார். அங்ஙனம் தவம் புரிபவர்கள் பலரும் அம்பிகையை நோக்கித் தியானித்துத் தவம் புரிதலின், ''தவக் கொழுந்து தழைத்த கொம்பே'' என்றார். அம்பிகையின் கன்னத்தின் சிறப்பினை உணர்த்த ''மகவு ஆசையால் இமய மலையரையன் மலர்க்கை தொடுகின்றான்' என்றும்; ''மனத்துள் அன்புபுக ஆசையால் இறைவன் கரத்தில் ஏந்துகின்றான்'' என்றும்; இங்ஙனம் மலையரையன் தொடுவதனாலும், சிவபெருமான் ஏந்துதலாலும், அம்பிகையின் கன்னங்கள் அழகுற்று விளங்குகின்றன என்பார் ''பொலிவுறும் நின் சிபுகம்'' என்றும் கூறினார். அம்பிகையின் திருமுகம் கண்ணாடி போல் ஒளிமிக்கது என்றும், அது சிவபெருமான் தம் திருமுகப்பொலிவை நோக்கித் திருத்தங்கள் செய்து கொள்ளுவதற்கு உதவுகின்றது என்றும் குறிப்பில் புலப்படுத்தி, அம்பிகையின் முகமாகிய கண்ணாடிக்கு, அவளது கன்னங்கள் முகிழாக இட்ட காம்புகள் போல விளங்குகின்றன என்பார் ''நின் சிபுகம் போற்றின், முகவாசி அரன் படிமக்கலம் பார்க்க இட்ட முகிழ்க் காம்புபோலும்'' என்று சிறப்பித்துரைத்தார். முகவாசி-முகத்தின் அழகு. அரன்-சிவபெருமான். கரம்-கை. சிபுகம்-கன்னம். படிமக்கலம்-கண்ணாடி. தவம் புரிபவர்களுக்கு இடையூறு வராமல் பாதுகாத்து, அவர்களது தவம் நிறைவேறும்படி தண்ணளியினை புரிவதால், அம்பிகையை ''தவக்கொழுந்து தழைத்த கொம்பு' என்று புகழ்ந்து போற்றினார்எனினும் அமையும். இச்செய்யுள் அம்பிகையின் கன்னத்தினைப் புகழ்ந்தது.

(68) கஞ்சம் பயம்புகுதல் கடன் அன்றோ?

அம்பிகை, மாற்று இதற்கிணை என்னும் அளவு இல்லாத, பசுமை ஒளியைப் பிழம்பாகப் பழுத்த

பொற்கொடி போன்றவள். அவளுடைய கழுத்திலும் முலைகளிலும், மான்மதம் ஆகிய கத்தூரி நிரம்பப் பூசப் பெற்றுள்ளது. அதன்கண் அவள் அணிந்துள்ள முத்துவடம் புரள்கின்றது. அவள் தன் கணவராகிய சிவபெருமானின் திருமேனியைத் தழுவி அணைத்து முயங்குகின்றாள். அங்ஙனம் முயங்குந்தோறும் எழும் களிப்புமிக்க புளகத்தினால், அவளுக்கு மெய்ம்மயிர் சிலிர்க்கின்றது. அதனால் அவளுடைய கழுத்து, பசுமைநிறம் பொருந்தி, முட்செறிந்த தாமரைக் கொடி போன்று திகழ்கின்றது. அதன்மேல் உள்ள அழகிய திருமுகம், தாமரை மலரினும் சிறந்து விளங்குகின்றது. அச்சிறப்பைக் கண்டு, ஓடுகின்ற நீரின்கண் கரியசேற்றில் புரள்வதும், வெண்மையான நூலுடன், முட்கள்பொருந்திய நாளம் உடையதும் ஆகிய தாமரை மலரானது, அச்சத்தை அடைதல் முறையேயன்றோ?

வயங்குறும்நின் தரளவடம் மான்மதச்சேறு
அளைய, மது மத்தர் மேனி
முயங்குதொறும் எழுபுளகம் முட்பொதிந்த
பசுங்கழுத்தும் முகமும் கண்டால்,
இயங்குபுனற் கருஞ்சேற்றின் எழும்வலய,
முள்அரைத் தாள் ஈன்ற கஞ்சம்,
பயம்புகுதல் கடன்அன்றோ? மாற்றிலாப்
பசுமைஒளி பழுத்த பொன்னே!

அம்பிகையின் அழகிய ஒளிமிக்க திருமேனியின் இயல்பை வியந்து ''மாற்று இலாப் பசுமைஒளி பழுத்தபொன்'' என்றார். பசுமை ஒளி பழுத்த என்றதனால், பொன்னால் இயன்ற கொடி என விரித்துரைக்கப்படும். சிவபெருமான் எல்லையிலாப் பேரின்ப உருவினராதலின் ''மதுமத்தர்'' எனப்பட்டார்; தேன் நிறைந்த ஊமத்த மலரை அணிந்தவர். மிக நிரம்பப் பூசப்பெற்றிருக்கும் திறம்பற்றி ''மான்மதச் சேறு'' என்றார். ''வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை போழப்படா முயக்கு'' என்னும் திருக்குறளுக்கேற்ப, அம்பிகை தன் கணவராகிய சிவபெருமானை அடுத்தடுத்துத் தழுவியணைந்து முயங்கி இன்புறுதலின், ''மேனி முயங்குதொறும் எழும் புளகம்'' என்றார். அம்பிகையின் திருமுகம் தாமரை மலர் போலவும், அதனைத் தாங்கி நிற்கும் அவளுடைய கழுத்துத் தாமரைக்கொடி போலவும் விளங்குகின்றது என்பது கருத்து. தாமரைக் கொடிக்கும் கழுத்திற்கும் ஒப்புமை கூறுவார் ''முட்பொதிந்த பசுங் கழுத்து'' என்றார். கழுத்தைத் தாமரைக் கொடி எனவே, முகம் தாமரை மலர் என்பது தானே பெறப்படும். கஞ்சம்-தாமரைமலர். அம்பிகையின் கழுத்திற்கும், தாமரை மலருக்கும் இடையே வேற்றுமை கூறுவார் ''இயங்கு புனல்-கருஞ்சேற்றின்-எழும்வலய-முள் அரைத் தாள்-ஈன்ற கஞ்சம்'' என்றார். இயங்குபுனல்-ஓடுகின்ற தண்ணீர். வலயம்-நூல். கஞ்சம்-தாமரை மலர். ''பயம் புகுதல்'' என்னும் தொடர், நீருட் புகுதல் என்றும், அச்சம் அடைதல் என்றும், இருபொள் குறித்து நின்றது. பயம்-நீர், அச்சம். ஓகாரம் வினா. இச்செய்யுள், அம்பிகையின் கழுத்தைத் தாமரைக் கொடியினுடன் ஒப்பிட்டு, வேற்றுமைப்படுத்திக் காட்டுதலின், வேற்றுமை என்னும் அணியாகும் (67).

(69) கழுத்தின் வரைக்குறிகள் மூன்று :

அம்பிகை சிவந்த நிறமும் அழகும் உடையவள். அம்பிகையினது கமுகு போன்று வளவிய, பசுமையான கழுத்தின்கண், இரேகையாகிய மூன்று வரிகள் காணப்படுகின்றன. கழுத்திலாதல் மார்பிலாதல் மூன்று வரிகள் அல்லது கோடுகள் அமைந்திருத்தல், உத்தம இலக்கணம். ''வரையகல் மார்பிடை வரியும் மூன்றுள'' என்பது சிந்தாமணி (1462). அவ்வரிகள், அம்பிகையின் திருமணத்தில் ஒன்றோடொன்று சேர்ந்த மூன்று பொற்சரடுகள் அமைந்த மங்கலநாண் அழுந்தப் பதிந்து கிடப்பதனால் உண்டாகியனவோ? அல்லது மந்தரம் மத்திமம் தாரம் என்னும் மூவகை ஓசைக்கும் எல்லையாகத்திகழ்வனவோ? இன்னவென்று தெரிந்தில. திருமகளும் சயமகளும் கலைமகளும் ஆகிய மூவருமே, அவற்றை அறிந்து புகழ வல்லவர்கள். யான் அவற்றை என்னவென்று புகழ்ந்து கூறவல்லேன்?

செந்திரு! நின் திருமணத்திற் சேர்ந்தசரம்
மூன்றழுந்தித் திகழ்வது என்கோ!
மந்தர மத்திம தார மூவகை
நாதமும் எல்லை வகுத்தது என்கோ?
கொந்திரையும் துணர்ப்பூகம் கொழுத்தபசுங்
கழுத்தின்வரைக் குறிகள் மூன்றும்,
இந்திரையும் சயமகளும் கலைமாதும்
புகழ்வதல்லால், யான்என் சொல்வேன்?

'செந்திரு' என்பது அண்மைவிளி. செம்மை-சிவந்தநிறம். திரு-அழகு. செம்மையும் திருவும் உடைய அம்பிகையைச் 'செந்திரு' என்று விளித்தார். அம்பிகையின் அழகிய சிறந்த கழுத்தின் இயல்பினைக் ''கொந்து' இரையும் துணர்ப்பூகம் கொழுத்த பசும் கழுத்து'' என்றார். கொந்து இரையும்-மணத்தினால் வண்டுகள் வந்து ஆரவாரம் செய்கின்ற. துணர்-பூம்பாளைகள். பூகம்-கமுகு. வடநாட்டில் திருமணம் செய்யுங்கால் மூன்று சரடுகள் அமைந்த பொற்கயிற்றினால் இயன்ற மங்கல நாண் பூட்டுதல் மரபாகலின், ''திருமணத்திற் சேர்ந்தசரம் மூன்றழுந்தித் திகழ்வது என்கோ?' என்றும்; அம்பிகை இசைக்கலைக்குரிய தெய்வமாதலானும், இசையானது மந்தரம் மத்திமம் தாரம் என்று மூவகைப்படுதலானும், ''மந்தர மத்திம-தார-மூவகை நாதமும் எல்லை வகுத்தது என்கோ?'' என்றும் வியந்து வினவினார். என்கோ-என்று சொல்லுகேனோ? இந்திரை-திருமகள். அம்பிகையின் புகழை ஓரளவு அறிந்தவர்களாதலின் ''இந்திரையும் சயமகளும் கலைமாதும் புகழ்வது அல்லால், யான் என் சொல்வேன்?'' என்று வினவி அமைந்தார். (69).

(70) தோள் நான்கும் வழுத்துகின்றான் :

முன்னொரு காலத்தில், பிரமதேவன் 'சிவபெருமானைப் போல நானும் ஐந்து தலைகளைப் பெற்றுள்ளேன்' என்று, மிகவும் செருக்குக் கொண்டான். அதனால் சிவபிரான், பிரமனின் தலைகள் ஐந்தனுள் ஒன்றைக் களைந்தெறிந்தார்.

அதனால் நான்கு தலைகள் மட்டுமே எஞ்சிநின்ற அவனுக்கு, நான்முகன் என்பது பெயராயிற்று. அத்தகைய பிரமன் இப்பொழுதெல்லாம் தன்னுடைய நான்கு முகங்களாலும், நின்னுடைய தோள்களையும் துதித்துப் புகழ்ந்து கொண்டிருக்கின்றான். அதற்குக் காரணம், அம்பிகையின் தோள்களைப் புகழ்ந்து துதித்தால், தன் தலைகளுக்குச் சிவபெருமானால் எத்தகைய இடையூறும் அழிவும் நேரமாட்டா, என்று அவன் துணிந்த துணிபேயாகும்.

முன்னம்ஒரு தலை, சினவுஉன் முதல்வரால்
இழந்தஅயன் முகங்கள் நான்கால்
உன்அழகுக்கு ஏற்றபசுங் கழைமணித்தோள்
ஒருநான்கும் வழுத்து கின்றான்;
இன்னம்ஒரு சீற்றம்எழுந்து 'அரி தலையை'
எனினும், இவள் தடமென் தோளைச்
சொன்னதலைக்கு அழிவுஇலைஎன்று துணிந்தஅதில்
துணிவன்றோ? சுருதி வாழ்வே!

அம்பிகை வேதங்களை அருளிச் செய்தவள், வேதங்களின் பொருளாக விளங்குபவள், வேதங்களையே தனது உறைவிடமாகக் கொண்டிருப்பவள். ஆதலின் அவளைச் ''சுருதி வாழ்வு' எனக் குறிப்பிட்டுச் சிறப்பித்துரைத்தார். சுருதி-வேதம். சிவபிரான் அம்பிகைக்குக் கணவராதலின் ''நின்முதல்வர்'' என்றார். 'முதல்வர்' என்னும் சொல், ஈண்டுக் கணவர் என்னும் பொருளில் வந்தது. கழை-மூங்கில். அம்பிகை மூங்கில்போன்ற தோள்களை உடையவளாதலின், அவளது தோள்களைப் ''பசுங்கழை மணித்தோள்'' என்றார். சினவு-சினத்தை உடைய. அயன்-பிரமன். துணிவு-தெளிவு, தைரியம். பிற உறுப்புக்கள் எல்லாம் இருக்கவும், பிரமன் அம்பிகையின் தோள்களை வழுத்துவது, அவைகள் தனக்கும் உயிர்களுக்கும் அபயம் தந்து காக்கும் சிறப்புடைமை கருதி. இச்செய்யுள் குணஏது என்னும் அணியாய், அம்பிகையின் தோள்களைப் புகழ்ந்தது.

(71) அதிசயமோ, பேதைமையோ, அன்போ ?:

அம்பிகையின் சிறந்த திருக்கைகளிலுள்ள நகங்கள் ஒளிமிகுந்து, அழகியனவாய் விளங்குகின்றன. அந்நகங்களின் தோற்றம், அம்பிகையின் திருக்கைகள் புரிந்த புன்முறுவல் போலத் திகழ்கின்றது.

தாமரை மலர், திருமகளின் சிறிய கால்களால் மிதிக்கப் பெற்றுத் துவள்கின்றது; திருமகள் தன் கால்களில் அணிந்துள்ள செம்பஞ்சுக் குழம்பினாலேயே, தாமரை செயற்கையாகச் சிவந்த நிறத்தைப் பெறுகின்றது. இத்தகைய அற்பமான தாமரை மலரோ, நமது இயற்கையழகிற்கு எதிரே நின்று மலர்வது? என்று கருதி, அம்பிகை எள்ளி நகைக்கும் தோற்றம்போல, அம்பிகையின் திருக்கைகளிலுள்ள நகங்கள் விளங்குகின்றன. வேதங்கள், அந்நகங்களைப் புகழ்ந்து போற்றுவது அதிசயத்தினாலோ ? அல்லது பேதைமையினாலோ ? அன்பினாலோ? யாதுபற்றி, என்று நான் அறிகின்றிலேன்.

திருமகள்தன் சீறடியால் துவண்டும், அதிற்
செம்பஞ்சால் செங்கேழ் பெற்றும்,
மருமுளரி எழில்படைத்தது 'இதுவோ? நம்
இயற்கைஎதிர் மலர்வது' என்றே
இருகரமும் நகைத்தநகை ஒளியை, உனது
எழில்உகிர்என்று இறைஞ்சி நாளும்
அருமறைகள் வழுத்துகின்றது அதிசயமோ?
பேதைமையோ? அன்போ? அம்மே!

அம்பிகையின் திருக்கைகளிலுள்ள நகங்களின் அழகையும் ஒளியையும் வியந்து, தற்குறிப்பேற்றமாக ''இருகரமும் நகைத்த நகையொளி'' என்றார். அங்ஙனம் திருக்கைகள் நகைத்த நகைப்பிற்குக் காரணம் கூறுவார் ''இதுவோ நம் இயற்கை எதிர் மலர்வது? என்றே இருகரமும் நகைத்த நகை'' என்று விளக்கம் செய்தார். தாமரை மலரின் சிறுமைக்குக் காரணம் கூறுவார் ''திருமகள் தன் சீறடியால் துவண்டும், அதிற் செம்பஞ்சால் செயற்கையாகச் செங் கேழ் பெற்றும், எழில் படைத்த இது'' என்றார். மந்தார மலர், பாரிசாதமலர் முதலிய சிறந்த பல மலர்கள் இருத்தலின், அவற்றினின்று தாமரையினைப் பிரித்து அதன் இழிவு புலப்படுத்துதற்கு ''இதுவோ?'' என விதந்தெடுத்து வினவினர். ''நம் இயற்கை'' என்றதனால், தாமரையின் செந்நிறமும் அழகும் செயற்கை என்பது புலப்படுத்தப்பட்டது. ஒருவரை மற்றொருவர் புகழ்ந்து வழுத்துவதற்குக் காரணம், அதிசய உணர்வு-பேதைமை இயல்பு-அன்புணர்ச்சி என்னும் மூன்றனுள் ஏதேனும் ஒன்றேயாதல் வேண்டும். ஆதலின் ''அருமறைகள் வழுத்துகின்றது அதிசயமோ? பேதைமையோ? அன்போ?'' என்றார். 'அம்மா' என்னும் சொல் விளித்தற்கண் 'அம்மே' என வந்தது. பெண்களின் பாதங்கள் ஆண்களின் பாதங்களைவிடச் சிறியனவாக இருத்தல் இயல்பாதலின் ''திருமகள் தன் சீறடி'' (சிறுமை அடி- சீறடி) என்றார். இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அவநுதி என்னும் அணியாகும்.

(72) திவலைகிட்டினும் அற்பஉயிர் முத்திபெறும்:

அம்பிகை சிவபெருமானின் இடப்பக்கத்தில் மயில்போன்று வீற்றிருக்கின்றாள். அவளுடைய தனங்கள் இறுமாந்தும் செம்மாந்தும் அழகுறத் திகழ்கின்றன. அவற்றின்கண் சுரக்கும் அமுதமயமான அருள்ஞானப் பாலினை உண்ட சிறப்பினாலேயே, விநாயகரும் முருகனும் முறையே மூத்தபிள்ளையார் என்றும், இளைய பிள்ளையார் என்றும் பெயர் பெற்றனர்; தலைமையும் சிறப்பும் எய்தினர், அம்பிகையின் அத்தகைய அமுதமயமான அருள் ஞானப் பாலில், ஒரு சிறிய துளியளவு கிடைத்தாலும், என்னுடைய இழிந்த உயிரும்கூடச் சிறந்த முத்தியைப் பெற்றுவிடும்.

நித்தர்ஒரு பக்கமயில்! நிற்களிறுஉன் வட்டமுலை
நிற்கும்எழிலில், தனது சீர்
மத்தகம் எனத்தனில் அயித்து, ஒரு கரத்தை
முடிவைத்து உறத் தடவுமால்!
முத்தமுலை செப்புவதுஎன்? அக்களிறு பிற்குமரன்
முற்புதல்வர் துய்த்த அமுதால்
அத்தலைமை பெற்றனர்! அதில்திவலைகிட்டினும்,என்
அற்பஉயிர் முத்தி பெறுமே!

இச்செய்யுள் அம்பிகையின் தனங்களைப் புகழ்ந்து கூறுகின்றது. பெண்களின் தனங்களை யானையின் மத்தகத்திற்கு ஒப்பிட்டுக் கூறுதல் கவிதை மரபு. ஆதலின் அம்பிகையின் தனங்களை நோக்கிய விநாயகப் பெருமான், தமது அழகிய மத்தகங்கள்தாம், அம்பிகையின் மார்பில் வந்து பொருந்தினவோ என்று ஐயுற்று, தம் துதிக்கையைத் தலையின்மீது வைத்துத் தடவிப்பார்த்தார் எனத் தற்குறிப்பேற்றம் அமையக் கூறி, ''நிற் களிறு உன் வட்டமுலை நிற்கும் எழிலில், தனது சீர் மத்தகம் எனத் தனில் அயிர்த்து, ஒரு கரத்தை முடிவைத்து உறத் தடவும்'' என்றார். நித்தர்-சிவபெருமான். 'மயில்' என்றது அண்மைவிளி. களிறு-யானை; யானை முகத்தையுடைய விநாயகர். மத்தகம்-யானையின் தலைமீதுள்ள இரு கொம்மைகள். அயிர்த்து-ஐயுற்று, சந்தேகங்கொண்டு. அக்களிறு-விநாயகர். பிற்குமரன்-முருகன். துய்த்த-உண்ட. அமுது-பால். அத்தலைமை பெற்றனர்-பிள்ளையார் என்னும் சிறப்பைப் பெற்றனர். அம்பிகையின் ஞானப்பாலை உண்ட திருஞான சம்பந்தரையும், விநாயகர் முருகர் ஆகிய இருவரோடு நினைவு கூர்ந்து, அக்குறிப்பு அமையப் ''பிற்குமரன் முற்புதல்வர்'' என்றார். முற்புதல்வர்-முதலிய புதல்வர்கள். திவலை-சிறுதுளி. 'கிட்டிலும்' என்னும் உம்மையால், கிட்டாமை புலப்படும். அம்பிகையின் அருள் ஞானப்பாலின் சிறப்பை விதந்து வியந்து "அதில் திவலைகிட்டினும் என் அற்ப உயிர் முத்தி பெறும்'' என்றார். அம்பிகையினது தனங்களின் சிறப்பைப் புகழ்தல் அரிது என்பார் ''முத்த முலை செப்புவது என்?'' என்றார். முத்தமுலை-முத்துமாலை அணிந்த தனங்கள். இச்செய்யுள் திரிபுஅதிசயம் என்னும் அணியாகும்.

(73) செக்கர்மணி மெய்க்கலசம் :

அம்பிகை ஒரு காலத்தில் மலையரசனின் மகளாகத் தோன்றினாள். அதனால் பார்வதி என்றும், பர்வதவர்த்தனி என்றும், மலையரசன் மகள் என்றும் பெயர் பெற்றாள். அம்பிகையின் தனங்கள் அழகு முதிர்ந்தவை. அதனால் அவற்றின் மீது மூன்று கண்களை உடைய சிவபெருமானுக்கு மயல் முதிர்கின்றது. அவற்றினின்று சுரக்கும் அருள்ஞானப்பாலை, அம்பிகை விநாயகருக்கும் முருகனுக்கும் அளிக்கின்றாள். அதனால் அவர்கள், என்றும் நீங்கா இளமை நலம் அமைந்து திகழ்கின்றனர். அம்பிகையின் தனங்கள், பாற்கடலில் தோன்றிய அமிழ்தத்தினை எடுத்து அடைத்து, இரு கண்களாகிய முத்திரை அமைக்கப்பெற்ற, மாணிக்கக் கலசங்கள் போன்றவை என்று சொல்லத்தகும். அதனை ஒரு சிலர் செப்பு (சிமிழ்) என்று, சொல்வது பொருத்தமன்று.

முக்கண் இறைவற்கு மயல்முற்ற,எழில்முற்றும்முலை
முட்டிய சுரப்பு ஒழுகும்பால்,
மக்கள் இருவர்க்கு அருள,அக்களிறும் இக்குகனும்
மட்டிளமை முற்று கிலரால்!
அக்கடல் உதித்த அமுதத்தினை எடுத்து,அதில்
அடைத்து, இருகண் முத்திரையின்வாழ்
செக்கர்மணி மெய்க்கலசம்அத்தனை;உன் வட்டமுலை
செப்புஅல; மலைப் புதல்வியே!

சிறந்த மனைவியாதலும், நல்ல தாயாதலும், பெண்ணின் நல்லாள் ஒருத்திக்கு உரிய இனிய கடமையாகும். அதன்படி அம்பிகை சிவபிரானுக்குச் சிறந்த மனைவியாகவும், விநாயகர் முருகர் ஆகிய புதல்வர்களுக்கு நல்ல தாயாகவும் விளங்குகின்றாள் என்பது, இச்செய்யுளின் முதலிரண்டு வரிகளில் புலப்படுத்தப்பெற்றுள்ளது. அம்பிகையின் தனங்களைச் ''செக்கர் மணி அமுத மெய்க்கலசம்'' என்று புகழ்ந்து, சிலர் சொல்வது போல ''செப்புஅல'' என்று மறுத்துப் புகழ்ந்துரைத்தார். தனங்களில் உள்ள கண்களை ''இருகண் முத்திரை'' எனத் தற்குறிப்பேற்றம் செய்து, ''செப்புஅல'' என மறுத்ததனால், இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அவநுதி (மறுத்தல்) என்னும் அணியாகும்.

''தாமச்செப்பு இணைமுகட்டுத்
தண்கதிர் விடும்நீல
மாமணி தாபித்தனபோல்,
மனம்பருகு கருங்கண்ண''

எனவரும் சீவகசிந்தாமணிச் செய்யுள், இங்குக் கருதியுணரற்பாலது. முக்கண் இறைவன்-சிவபெருமான். மயல்-ஆசை, மயக்கம். முற்ற-முதிர, மேன்மேல் பெருக. முட்டிய சுரப்பு-நிறைந்து பெருகும் ஊற்று. மட்டுஇளமை முற்று இலர்-மட்டுப்பட்ட இளமைத்தன்மை நீங்கி முதிர்வு அடைந்திலர். அக்கடல்-பாற்கடல். அடைத்து-நிரப்பி. செக்கர்மணி-சிவந்தமாணிக்கம். கலசம்-குடம். அத்தனை-முழுவதும். செப்பு-சிறிய சிமிழ்.

(74) பொற்றனம் உரைபடா :

யானை முகத்தையுடைய விநாயகப்பெருமான், கயமுகன் என்னும் அசுரனை எதிர்த்து வென்று, அவனது தந்தத்தை ஒடித்தபொழுது உதிர்ந்த முத்துக்களால், அழகிய மாலை ஒன்றைப் புனைந்து, அம்பிகைக்கு அளித்தார். அம்முத்துமாலையின் வெண்மை நிறத்தில், அம்பிகையினது வாயின் இதழாகிய மாணிக்கத்தின் சிவப்பும் ஒருங்கு சேர்ந்து, பினாகபாணி எனப்படும் சிவபிரானின் பிரதாபமும், புகழும்போல விளங்குகின்றன. சிவபிரானின் பிரதாபமும் புகழும் ஆகிய இரண்டினைப்போல, அம்பிகையின் தனங்கள் இரண்டும் பொலிவு பெற்றுப் பூரித்துத் திகழ்கின்றன. இத்தகைய அம்பிகை

யின் தனங்களின் பொலிவுமிக்க வளமையை எவராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது.

கொற்ற வாரண முகமகன், பொரு
  குஞ்சர ஆனன நிருதனார்
இற்ற கோடுஉதிர் ஆர மாலிகை,
  இதழ் மணிப்பிரபை தழையவே,
பெற்ற பாக பிநாக பாணிப்
  பிரதாபமோடு அணி புகழ் என
உற்றது ஆயினும், உனது பொற்றனம்
  உரைபடா நிறை செல்வியே!

அம்பிகையின் இரு தனங்களும், சிவபெருமானின் பிரதாபம் புகழ் என்னும் சிறந்த இரு பண்புகளைப் போலப் பொலிகின்றன என்பது கருத்து. ஒருவன்தன் வீரச் செயல்களால் அடையும் சிறப்பு பிரதாபம் எனவும், கொடைத்திறனால் எய்தும் மதிப்பு புகழ் எனவும் வழங்கப்பெறும். பிரதாபம் சிவப்பு நிறமாகவும், புகழ் வெண்மை நிறமாகவும் புலவர்களாற் கூறப்படும். பரஞானம் அபரஞானம் என்னும் இரு ஞானங்களாகத் திகழும் அம்பிகையின் தனங்களை, ஆசிரியர் இங்குச் சிவபெருமானின் பிரதாபம் என்றும், புகழ் என்றும் சிறப்பித்துரைத்தார். இச்செய்யுள் தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும். கொற்றம்-வெற்றி. குஞ்சரம்-யானை. நிருதன்-அசுரன். ஆனனம்-முகம். குஞ்சரஆனனநிருதன்-யானை முகமுள்ள கஜமுகன் என்னும் அசுரன். அசுரனை இகழ்ச்சிக் குறிப்பில் ''நிருதனார்'' என்றார். விநாயகரின் ஊர்தியாகி, அவர்தம் திருவடிக் கீழ் எஞ்ஞான்றும் அமர்ந்திருக்கும் அரிய பேறு பெற்றமை கருதி, 'நிருதனார்' என்றார் எனினுமாம். இற்ற-உடைந்த. கோடுஉதிர்-தந்தத்தில் இருந்து உதிர்ந்த. ஆரமாலிகை-முத்தினால் செய்த மாலை. மணி-மாணிக்கம். முத்து வெண்மை நிறமும், மாணிக்கம் சிவப்பு நிறமும் உடையன. பிரபை-ஒளி. பிநாகபாணி-பிநாகம் என்னும் வில்லைக் கையில் உடைய சிவபெருமான். நிறைசெல்வி-நிறைந்த செல்வங்களை உடைய அம்பிகை. இப்பாடல் தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும்.

(75) கவிதை என்றொரு புனிதமாரி :

உயர்ந்த அந்தணர் குலத்தில், கவுணியர் என்னும் கோத்திரத்தில் தோன்றிய சம்பந்தர் என்னும் சிறிய குழந்தையாகிய அழகிய மேகம், அம்பிகையின் பாலை உண்டு. பொருள் நயம் பெற்ற கவிதை என்னும் ஒப்பற்ற தூய மழையைப் பொழிந்தது. அதனால், இளமையாகிய மங்கலத்தை உடைய அம்பிகையின் சிந்தையில், நிரம்பிய பாலாகிய அமுதம் சுரந்து ஊறினால், அஃது அவளுடைய கொங்கையின்கண் பெருங்கவிதை அலைகளை உடைய, கடலாக மாறிப் பெருகும் போலும்!

தருண மங்கலை! உனது சிந்தை
  தழைந்த பால்அமுது ஊறினால்,
அருண கொங்கையில் அது பெருங்கவி
  அலை நெடுங்கடல் ஆகுமோ?
வருண நன்குறு கவுணியன் சிறு
  மதலை அம்புயல் பருகியே,
பொருள் நயம்பெறு கவிதை என்றுஒரு
  புனிதமாரி பொழிந்ததே!

அம்பிகையின் ஞானப்பாலை உண்டு, திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்கள் பாடிய சிறப்பினை, இச்செய்யுள் வியப்புறக் குறிப்பிடுகின்றது. தருணம்-இளமை. அருணம்-சிவப்பு. கவுணியன்-கவுணியர் குலத்தில் தோன்றிய சம்பந்தர். திருஞானசம்பந்தரை மேகமாக உருவகித்துக் ''கவுணியன் சிறுமதலை அம்புயல்'' என்றதனால், அவர் அருளிய தேவாரத் திருபாடல்களைப் ''பொருள்நயம் பெறு கவிதை என்று ஒரு புனிதமாரி பொழிந்தது'' என்றார். மேகங்கள் கடலில் நீரை முகந்து மழைபொழியும் ஆதலின் சம்பந்தரை மேகமாகவும், தேவாரத் திருப்பாடல்களைப் புனித மழையாகவும் குறிப்பிட்டு, அம்பிகையின் கொங்கையினை ''அலைநெடுங்கடல்'' என்றார். மதலை-குழந்தை. புயல்-மேகம். மாரி-மழை. புனிதம்-தெய்வத் தன்மை. இச்செய்யுள் அதிசயம் பற்றிய சிறப்புருவகம் ஆகும்.

—ந. ரா. முருகவேள்

தொடரும்

(செய்திச் சுருக்கம்)

திருப்பணி அடிக்கல் நாட்டுவிழா :

ஸ்ரீரங்கம், ஸ்ரீ ரங்கநாதசுவாமி திருக்கோயில், தெற்கு இரண்டாவது கட்டைக் கோபுரத்தின் திருப்பணிக்கு அடிக்கல் நாட்டுவிழா, 14—7—77 வியாழனன்று காலை 11 மணியளவில், நமது அறநிலைய ஆணையர் **திரு. எம். கே. பாலசுப்பிரமணியம்,** ஐ.ஏ.எஸ். அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. திருப்பணிக் குழுத் தலைவர் **உயர்திரு. டி. எம். நாராயணசாமிபிள்ளை,** எம்.ஏ., பி.எல். அவர்களும், திருப்பணிக் குழுவின் துணைத் தலைவர் திரு கே. ஸ்ரீநிவாசன் அவர்களும், உதவி ஆணையர்—செயல் அலுவலர் திரு வி. கே. வேலுசாமி, பி.ஏ. அவர்களும், மற்றும் பக்தகோடிகளும், விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

—ஆசிரியர்.

திருமூழிக்களத்து விளக்கு

[திரு. என். சுப்பு ரெட்டியார், M.A., Ph.d.]

''பின்னானார் வணங்கும்சோதி திருமூழிக் களத்தானாய்!'' என்று திருமங்கையாழ்வாரால் போற்றிப் புகழப் பெற்றவன் திருமூழிக்களத்து எம்பெருமான். பரத்துவம், வியூகம், அவதாரம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் ஆகிய எம்பெருமானுடைய ஐந்து நிலைகளில் முதல்நான்கிலும் சம்பந்தம் பெறாதவர்கள்(அந்வயிக்கப் பெறாதவர்கள்) 'பின்னானார்' என்று குறிப்பிடப்பெறுபவர்கள். அவர்கட்காகத் திருமூழிக்களம் முதலான அர்ச்சாவதார நிலங்களிலே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான் எம்பெருமான். திருமூழிக்களம் என்றது எல்லாத் திவ்விய தேசங்கட்கும் உபலட்சணமாய் நிற்பதாகக் கொள்ளல் வேண்டும். ஏனைய நான்கு நிலைகளிலும் அநுபவிக்கக் கூடிய எல்லாத் திருக்குணங்களும் நிறைந்திருப்பது இந்த அர்ச்சாவதாரத்தில்தான்.

இந்த அர்ச்சாவதாரம் என்ற உருவம் எக்காலத்தவர்க்கும் எத்தேயத்தவர்க்கும் காட்சி அளிக்கும். அவரவர் விரும்பிய நலனையும் ஈந்து நிற்கும். 'மனம் வாக்குக் காயங்கட்கு எட்டாத பரம் பொருளுக்கு ஓர் உருவத்தையும் ஓரிடத்தையும் நிலைநாட்டி வழிபடுதல் யாங்ஙனம் பொருந்தும்? என ஐயுறலாம். ''ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலா'' இறைவனுக்கு 'ஆயிரம் திருநாமம் பாடுவது' எதற்காக என்று வினவலாம். அருவாய் நிற்கும் ஆண்டவன் உலக உயிர்கள் உய்யும்பொருட்டு அவற்றின்மீது கொண்டுள்ள தண்ணளியால் உருக் கொண்டு எழுந்தருளியுள்ளனன் என்பது சமயக் கொள்கை. நம் மனமும், புலன்களும், செயல்களும் ஒரு வரையறைக்குட்பட்டவை. ஆதலின், அதற்கேற்ப எல்லாவற்றையும் கடந்து நிற்கும் கடவுளை வகுத்துக் கொண்டாலன்றி நாம் அக்கடவுளிடம் அன்பு செலுத்தவோ அவனது அருளைப் பெறவோ இயலாது. பரந்து செல்வதும், கட்டுக்கடங்காததும், காற்றிலும் கடுகியோடுவதுமான மனத்தை ஓரிடத்தில் நிறுத்தித் தியானிக்க ஓர் உருவம் இன்றியமையாதது. உருவம் இன்றேல் மனம் ஒருப்படுதல் இல்லை. ஊனக் கண் காணாக் கடவுளிடம் மனத்தைக் குவியச் செய்து தியானித்தில் நுழைக்க, உருவம் இன்றியமையாது வேண்டப்பெறும்.

பிற சமயத்தினரைக் காட்டிலும் வைணவர்கட்கு உருவத்தில் ஊற்றம் அதிகம். இதுவே பக்தியைக் காட்டிலும் சிறந்த பிரபத்தியைச் (சரணாகதியை) சேதனன் கடைப்பிடித்தற்குப் பொருத்தமான இடம் என்பதும், இதில் மேற்கொள்ளும் பிரபத்தியே தவறாமல் விரைவில் பயனளிக்கும் என்பதும் அவர்கள் உறுதியாகக் கொண்ட நம்பிக்கை. ஆழ்வார்கள் அனைவருமே அர்ச்சைக்கு மங்களா சாசனம் செய்திருப்பதுவே இதற்குத் தக்க சான்றாகும். அர்ச்சையின் பெருமையைப் பிள்ளைலோகாச்சாரியரும்,

''பூகத ஜலம்போலே அந்தர்யாமித்துவம்;
ஆவரண ஜலம்போலே பரத்துவம்; பாற்கடல்
போலே வியூகம்; பெருக்காறுபோலே விபவங்கள்;
அதிலே தேங்கிய மடுக்கள்போலே அர்ச்சாவதாரம்''

என்று குறிப்பிட்டிருப்பது ஈண்டுக் கருதத் தக்கது. பூமிக்குள் ஆழத்தில் அடங்கிக் கிடக்கும் நீரைப் போன்றது அந்தர்யாமித்துவ நிலை; அண்டத்திற்குப் புறத்தே பெருகிக் கிடக்கும் ஆவரண நீர் போன்றது பரத்துவ நிலை; அண்டத்திற்கு உட்பட்டிருந்தும் கிட்ட அரிதாக இருக்கும் பாற்கடல் போன்றது வியூக நிலை; எப்பொழுதோ வெள்ளமிட்டோடின பெருக்காறுகள் போன்றவை விபவ அவதாரங்கள்; பெருக்காறு பெருகி வெள்ள மிட்டோடின போது அதிலே தேங்கி நின்ற நீர்நிலைகள் போன்றவை அர்ச்சாவதாரங்கள். நீர்விடாய் மிக்குத் துடிக்கும் ஒருவனுக்கு முதல் நான்கு நிலைகளிலுமுள்ள நீர் உடனே பயன்படாது; மடுக்களிலுள்ள நீரே உடன் விடாய் தீரப் பயன்படும். அங்ஙனமே, முதல் நான்கு நிலைகளிலும் உள்ள எம்பெருமான்கள் அப்பொழுதே ''கண்டே களிக்கின்றது இங்கு என்று கொல் கண்கள்?'' என்று ஆழ்வார் கூறியவாறு கண்டு பற்ற வேண்டுமென்று ஆசைப்படும் முமுட்சுகளுக்குப் பயன்படுவதில்லை; திருக்கோயில்களிலும் அடியார்களின் திருமாளிகைகளிலும் எழுந்தருளியுள்ள அர்ச்சாவதாரமே அவர்கட்குப் பெரிதும் பயன்படக் கூடியது.

திருமூழிக்களம் என்பது மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. ஏனைய மலைநாட்டுத் திருப்பதிகள் போலவே இதுவும் இயற்கை வனப்பு கொஞ்சும் சூழலில் அமைந்துள்ளது. இந்தத் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை, திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர். திருமங்கை யாழ்வார் ''முனியே! திருமூழிக்களத்து விளக்கே!'' என்றும், ''மூழிக்களத்து விளக்கினை'' என்றும் போற்றுவர். நம்மாழ்வாரும், ''திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடர்க்கு'' என்று கூறியுள்ளார். இரண்டு ஆழ்வார்களுமே இந்தத் தலத்து எம்பெருமானைச் சுடர்ப்பொருளாகவே அருளிச் செய்தி

ருப்பது கருதத்தக்கது. எம்பெருமானுடைய அனந்த கல்யாண குணங்களுள் சௌலப்பியம் என்னும் குணம் சிறந்தது. அந்தத் திருக்குணம் இருட்டறையில் விளக்குப்போல் ஒளிர்வது அர்ச்சாவதாரத்தில்தான். அதுவும் சாதாரண மக்கட்கும் காட்சிதரும் இடமாகிய திருமூழிக்களத்தில் அக்குணம் மிகவும் ஒளிபெற்று விளங்குதலால் ஆழ்வார்கள் இருவரும் 'விளக்கு' என்றும், 'ஒண்சுடர்' என்றும், 'சோதி' என்றும் கூறியுள்ளனர் என்று கருதலாம். ஆசாரிய ஹிருதயம் என்னும் நூல் இத்தலத்து எம்பெருமானிடம் சௌகுமார்யகுணம் (அழகு) 'கூடு பூரிக்கும்' என்று குறிப்பிடுகின்றது.

எர்ணாகுளத்தில் தங்கித் திருக்காட்கரை சென்று திருக்காட்கரை அப்பனைச் சேவித்தோமல்லவா? அங்கிருந்தபடியே 'திருமூழிக்களத்து விளக்கினையும்' காண ஆசைப்படுகிறோம். சாதாரணமாக யாத்திரை செய்பவர்கள் முன்பின் தெரியாத இடங்கட்குச் செல்லுங்கால் கிட்டத்தட்ட அந்தத் திவ்விய தேசம் இருக்கும் இடத்தை குற்றுமதிப்பாகத் தெரிந்துகொண்டு விட்டாலும் தங்குமிடத்திலிருந்துகொண்டு ஒருவருக்கு நான்கு பேர்களை விசாரிக்க வேண்டும். சரியாகத் தெரிந்துகொண்ட பிறகுதான் அந்த இடத்திற்குப் புறப்படுதல் வேண்டும். இல்லாவிடில் பல தொல்லைகள் விளையும். சரியான காலத்தில் பேருந்து வசதிகள் இரா; அந்த இடத்தில் உணவு வசதி, தங்கும் வசதிகள் இருப்பதில்லை. காலமல்லாக் காலத்தில் பேருந்து கிடைத்து ஏறிச் சென்றாலும் திருக்கோயில் திருக்காப்பிடப் பெற்றிருக்கும். திருக்காப்பு நீக்கும் (திறக்கும்) வரையிலும் காத்திருக்க வேண்டியிருக்கும். சேவை முடிந்து திரும்புங்கால், பேருந்து வசதி இருப்பதில்லை. மாலைக் காலமாக நேர்ந்துவிட்டாலோ சொல்ல வேண்டியதில்லை. இடவசதி, உணவு வசதி முதலியவையின்றி அவதிப்படவேண்டி வரும். நன்றாக விசாரித்ததில் எர்ணாகுளம்-ஷோரனூர் இருப்புப் பாதையிலுள்ள ஆல்வே நிலையத்தில் இறங்கி அங்கிருந்து பேருந்து மூலம் செல்ல வேண்டும் என்பதை அறிகின்றோம். ஆல்வே சற்றுப் பெரிய ஊராதலின் அடிக்கடி பேருந்து வசதிகள் கிடைக்கும். எர்ணாகுளத்தினின்றும் சரியாகக் காலை 7.50 மணிக்குப் புறப்படுகின்றோம்; ஆல்வேயில் இறங்குகின்றோம். புகை வண்டியில் போகும்போதும் பேருந்தில் செல்லும்போதும் இருபுறமுமுள்ள சோலைகள், நெல்வயல்கள், கமுகு-தென்னந் தோப்புக்கள் முதலிய இயற்கை வனப்புக்களை எல்லாம் கண்டுகளித்தவண்ணம் செல்லுகின்றோம். அழகுகூடு பூரிக்கும் மூழிக்களத்தின் வழியெல்லாம் அழகின் காட்சிகள்தாம். பாரதிதாசனின் ''அழகின் சிரிப்பு'' என்ற நூலிலுள்ள கவிதைகளின் காட்சிகள் யாவும் நம் நினைவிற்கு வருகின்றன. இந்தப் பகுதிகட்கு வந்துதான் அந்தக் கவிதைகளைப் பாடினரோ என்று கூட எண்ணுகின்றோம். எண்ணற்ற உயிர்கட்கு எல்லையற்ற இன்பங்களைப் படைத்துப் புரந்து இன்புறும் 'அலகிலா விளையாட்டுடைய' ஆண்டவனின் பெருங்கருணைத் திறத்தினை எண்ணி எண்ணி வியந்து நிற்கின்றோம். இந்நிலையில்,

எத்தனைகோடி இன்பம்
வைத்தாய்—எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!

என்ற பாரதியாரின் வாக்கும் நம் நினைவுக்கு வருகின்றது. அதை நினைந்தவுடன் தொடர்ந்து

''சித்தினை அசித்துடன்
இணைத்தாய்—அங்கு
சேரும்ஐம் பூதத்து
வியன்உலகு அமைத்தாய்
அத்தனை உலகமும்
வண்ணக் களஞ்சியம்
ஆகப் பலப்பலநல்
அழகுகள் அமைத்தாய்''

என்ற அடிகளும் தொடர்ந்து நம் மனத்தில் குமிழியிட்டு எழுகின்றன. சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்று தத்துவங்களும் இயைந்து நிற்கும் அதிசயம் நம் கருத்தினைக் கவர்கின்றது. சித்தாகிய உயிரை அசித்தாகிய உடம்புடன் இணையச்செய்து, அந்த உயிரை இயக்கும் இறைவனின் செயலையும், அந்த உயிர்கள் கைபுனைந்து இயற்றி அசித்தினைப் பயன்படுத்தி எத்தனையோ கோலங்கள் புனைந்து தமக்கு வேண்டிய விதவிதமான வசதிகளையெல்லாம் அமைத்து இந்த உலகினைக் 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனுக்கும்' ஏற்ற வண்ணக்களஞ்சியமாக ஆக்கிக் கொள்ளும் அற்புதத் திறத்தினையும் வியந்து போற்றுகின்றோம். 'விசிட்டாத்துவைத தத்துவத்தை' விளக்கி நிற்கும் கவிதையை நன்கு சுவைத்து மகிழ்கின்றோம். இம் மன நிலையில் ஆல்வேயை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம்.

ஆல்வேயிலிருந்து சுமார் பத்துக்கல் தொலைவிலுள்ளது திருமூழிக்களம்; சாலையின்மீதே ஊர் அமைந்துள்ளது. பேருந்தினின்றும் இறங்கினவுடன் கால்ஃபர்லாங்கு தூரம் நடந்தே திருக்கோயிலை அடைகின்றோம். நம்மாழ்வாருடன் திருக்காட்கரை அப்பனின் சீலகுணத்தில் ஈடுபட்டு அதில் ஆழங்கால் பட்டோம் அல்லவா? அங்ஙனம் நம்மாழ்வார் ஆழங்கால் பட்டவுடன் அப்பெருமானைநேரில்காணஆசைப்பட்டுப்பிராட்டியின் நிலையிலிருந்து பராங்குச நாயகியாகத் தூதுவிட்டது நம் நினைவிற்கு வருகின்றது. நாரை, குருகு, கொக்கு ஆகிய பறவை இனங்களையும் வண்டு, தும்பி ஆகிய பூச்சி இனங்களையும் மேகத்தையும் அவர் தூது விட்டதை நினைந்து பார்க்கின்றோம். எம்பெருமானின் அழகையும் குணங்களையும் பற்றாகக்கொண்டு அவன்பால் தூது விட்டதையும், அதுவும் தாமான தன்மையை ஏறிட்டுக்கொண்டு பராங்குச நாயகியாகத் தூது அனுப்பியதையும் சிந்திக்கின்றோம். அந்நிலை அவருக்குத் தானாக வந்து சேர்கின்றது. அதில் அவர் பரவசப் பட்டுக் கிடக்கின்றார். புருடோத்தமனான எம்பெருமானது பேராண்மைக்கு உலகமடங்கலும் பெண்தன்மையாக இருப்பதையும் சீவான்மாவுக்குப் பாரதந்திரியமே (எம்பெருமான் வயத்திலிருத்தலே) வடிவாக இருப்பதையும் எண்ணுகின்றோம். வைணவ சமயப்படி ஆசாரியர்களே பறவைகளாகக் கருதப்படுகின்றனர் என்பது ஈண்டுக்

கருதத்தக்கது. இனி ஆழ்வார் தூது விட்டதை நினைவு கூர்வோம்.

தன்னுடைய சோலையில் இரைதேடித் திரியும் நாரையைத் தூதுபோகுமாறு வேண்டுகின்றாள் பராங்குசநாயகி.

''செங்கால் மடநாராய்!
திருமூழிக் களத்துஉறையும்
கொங்குஆர்பூந் துழாய்முடிஎம்
குடக்கூத்தர்க்கு என்தூ தாய்
நும்கால்கள் என்தலைமேல்
கெழுமீரோ நுமரோடே''

என்று வேண்டுகின்றாள். திருவிருத்தத்தில் தூது அனுப்புவதற்குவண்டுக்களை அழைக்கும்பொழுதே

''எம்மீசர் விண்ணோர் பிரானார்
மாசில் மலரடிக்கீழ் எம்மைச்
சேர்விக்கும் வண்டுகளே''

என்று கூறினாரல்லவா? எம்பெருமானுடைய திருவடியிணையின்கீழ்த் தம்மைச் சேர்ப்பிக்க வல்ல ஆற்றல்வாய்ந்த ஆசாரியர்களையே தூதர்களாய்க் கொண்டதை அங்கு நன்கு காட்டியருளினார். அப்படிப்பட்ட ஆசாரியர்கள் தம் சுற்றத்துடன் தம் தலையின்மீது திருவடிகளை வைப்பதே பெறற்கரிய பேறு என்பதை இத்தூதுப்பதிகத்தில் அருளிச் செய்கின்றார். 'செங்கால மடநாராய்!' என்று கால்களைச் சிறப்பித்துச் சொல்லுவதால் ஆசாரியன் திருவடிகளே தஞ்சம் என்ற தொனிப்பொருளைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

எம்பெருமான் தமது அடியார் குழாங்களுடன் திருமூழிக்களத்தில் கலந்து பரிமாறிக் கொண்டிருக்கும் நிலையில் ஒருக்கால் தன்னை (பராங்குச நாயகியை) மறந்திருத்தல் கூடும். அஃதன்றித் தன்னைப் புறக்கணிப்பதற்குக் காரணமில்லை. அந்நிலையிலிருக்கும் அவரைப் பார்த்துச் செய்தி சொல்லவேண்டும் என்று குருகினங்களை வேண்டுகின்றாள் ஆழ்வார்நாயகி,

''நுமரோடும் பிரியாதே
நீரும்நும் சேவலுமாய்
அமர்காதல் குருகினங்காள்!
அணிமூழிக் களத்துஉறையும்
எமராலும் பழிப்புண்டு
இங்கென்? தம்மால்இழிப்புண்டு
தமரோடு அங்கு உறைவார்க்குத்
தக்கிலமே கேளீரே!''

என்ற பாசுரத்தின் மூலமாக. எம்பெருமான் உகந்த அடியார் குழுக்களுடன் தானும் வந்து அடிமை செய்வதற்குத் தகுதியில்லையோ என்று கேட்குமாறு நாரையின் ஒரு பிரிவாகிய குருகினங்களைப் பணிக்கின்றாள். ''அவன் தன் அடியார்களுடன் கூடிக் குலவுவது போல் நீங்களும் உங்கள் உறவினருடன் கூடி வாழ்கின்றீர்கள். அவன் இருக்கும் நிலை உங்கள் திறத்தில் பலித்துள்ளது. அங்ஙனமே என் திறத்திலும் பலிக்க வேண்டாவோ?'' என்கிறாள். எம்பெருமான் அடியார்களுடன் கூடி வாழ்வது போலவும், குருகு தன் இனத்துடன் கூடி வாழ்வதுபோலவும், தானும் தன் காதலனாகிய எம்பெருமானுடன் வாழும்படி செய்யவேண்டாமா என்பது குறிப்பு. ''குறைவாளர் காரியம் குறைவற்றார்க்குத் தீர்க்கவேண்டாவோ? உண்டார்க்குப் பட்டினி கிடந்தார்பசி பரிகரிக்கப் பிராப்தமிறே'' என்பது ஈடு.

—தொடரும்.

(செய்திச் சுருக்கம்)

விநாயகர் பெருமை :

இந்நூலின் வெளியீட்டு விழா, திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவர் திருக்கோயிலில் உள்ள, அருள்மிகு மாணிக்க விநாயகர் சந்நிதியின் உற்சவர் மண்டபத்தில், 14—7—77 வியாழன் அன்று மாலை 5 மணியளவில், ''திருப்பணியரசு'' ''மதிற்பணி மணி'' **உயர்திரு. டி. எம். நாராயணசாமிபிள்ளை,** எம்.ஏ., பி.எல். அவர்கள் தலைமையில், நமது அறநிலைய ஆணையர் **உயர்திரு. எம். கே. பாலசுப்பிரமணியம்,** ஐ.ஏ.எஸ். அவர்களால், நிகழ்த்தப் பெற்றது. திருச்சித் துணையாணையர் திரு ஓ. ஆறுமுகம், பி.ஏ., பி.எல்., அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். இந்நூலை எழுதித் தொகுத்து உதவிய ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். அவர்களும், ''எழுத்தாளன்'' இதழாசிரியர் கவிதாமணி திரு அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும், சிறப்புரை நிகழ்த்தினர். அருள்மிகு தாயுமானவர் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு கே. என். சொர்ணம் அவர்கள், நன்றியுரை நவின்றார்கள். விநாயகப் பெருமானைப் பற்றிய கட்டுரைகளும், துதிப் பாடல்களும், உரை விளக்கமும், அழகிய சில படங்களும் கொண்ட இந்நூல், ''செயல் அலுவலர், அருள்மிகு தாயுமானவர் திருக்கோயில், மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி—620002'' என்னும் முகவரியிற் கிடைக்கும்.

—ஆசிரியர்.

அத்துவித சொரூபம்

[சீலத்திரு. சோமசுந்தர நாயகர்]

"அத்துவிதம்" என்னும் சொல் கேவலாத்துவிதம், சுத்தாத்துவிதம், விசிட்டாத்துவிதம் என்னுஞ் சொற்றொடர்களிலே சேர்த்துச் செய்யுள் வழக்கினும், உலகவழக்கினும் வழங்கப் பட்டு வருகின்றது. இச்சொல்லைச் சொல்லாராயும் நெறியானும், பொருளாராயும் நெறியானும், பரிசோதனை செய்து உணர்ந்து கொள்ளல்வேண்டும்.

இனி இச்சொல்லைப் பகுக்குமிடத்து, நத்விதீயம் என்று நிற்கும். இவற்றுள் முதல் நின்ற எழுத்து, அன்மை—இன்மை—மறுதலை என்னும் பொருள்களைப் பயப்பதோர் உபசர்க்கமாம். பின் நின்ற சொல், இரண்டு என்னும் பொருளைத் தருவதோர் எண்ணுச் சொல்லாம். இவையிரண்டும் புணருங்கால், ந என்னும் அவ்வுபசர்க்கத்தில், ந் என்னும் மெய்யெழுத்துப் போக, அம்மெய்யின் மேல் ஏறி நின்ற, அ வென்னும் உயிரெழுத்து மாத்திரம் நின்று அத்விதீயம் என்றாகும். இவ்வத்விதீயம் என்னுஞ் சொல், செந்தமிழ் வழக்கில் அத்துவிதம் என்று திரிபெய்திவரும்.

இனி, அவ்வுபசர்க்கமெய்யில் ஏறி நின்ற அகரவுயிர் நிற்ப, ந் என்னும் மெய் கெடுதல், பாணினி முனிவர் தமது அட்டாத்தியாயி இலக்கணத்தில், இரண்டாம் பாதத்து ஆறுவது சூத்திரத்தின்கண் ஓதியவாற்றால் இனிதறியப் படும்.

இனி இவ்வுபசர்க்கம் அன்மைப் பொருளையுணர்த்துதல், அப்பிராமணன் அசைவன் அநேகர் அஞ்ஞானி என்றற் றொடக்கத்துச் சொற்களால் அறியப்படும் ; இவை முறையே பிராமணன் அல்லாதவன், சைவனல்லாதவன், ஏகன் அல்லாதவன், ஞானியல்லாதவன் எனப் பொருளுணர்த்தும். இஃது இங்ஙனம் அன்மைப் பொருளை உணர்த்துதல், உயர்திணை அஃறிணைப் பொருட் பெயர்களோடு சேர்ந்து நின்ற வழியேயாம்.

இனி இஃது இன்மைப் பொருளை யுணர்த்துதல், அஃறிணைப் பண்புச் சொற்களோடு இணங்குகின்ற வழியேயாம். இஃது அமலம் அகளங்கம் அயோக்கியம் அசலம் என்றற் றொடக்கத்தனவற்றால் அறியப்படும்; இவை முறையே மலம் இன்மை, களங்கம் இன்மை, யோக்கியம் இன்மை, சலனம் இன்மை என்னும் பொருள்களை உணர்த்தா நிற்கும். அஃறிணைப் பொருளுள்ளும் இவை குணத்தை யுணர்த்திப், பின் உயர்திணைப் பொருளுக்கு அமலன் அகளங்கன் அயோக்கியன் அசலன் என்று பெயராங்கால், அக்குணங்களையில்லாதவன் என்றே பொருள் குறிக்கும். ஆகவே, இவை அஃறிணையுள்ளும் உடைமைப் பொருளான குணமின்மையைக் குறிக்கவே வருவனவாம் ஆதலால், அவ்வுபசர்க்கம் இன்மைப் பொருளுணர்த்தும் வழியெல்லாம், பண்புச் சொற்களோடு மாத்திரம் இணைந்து வருமென்றல் துணிபொருளாம்.

இனி மேலே குறிக்கப்பட்டவாறு, இது பிராமணன் முதலான பொருட்பெயரை அறிவிக்குமிடத்தெல்லாம், அன்மைப் பொருளை உணர்த்துவதென்பதூஉம், இதனோடு இயைவித்து அறியற்பாற்று. இனிக் குணப்பெயருள்ளுங் குணிப்பெயருள்ளும் ஒன்றனோடொன்று மறுதலைப்பட்டு, இரட்டை மொழிகளாய் நிற்பனவற்றுள், ஒன்றனைச் சுட்டுமிடத்து இந்நகரவுபசர்க்கம் மறுதலைப் பொருள் பயப்பதாய் நிற்கும். இது அசத்தியம் அஞ்ஞானம் அசாதாரணம் அசேதனம்என்றற்றொடக்கத்தனவற்றால் தெற்றெனத் தெளியப்படும். இவை முறையே சத்தியத்தோடு மறுதலைப்பட்ட அசத்தியத்தினையும், ஞானத்தோடு மறுதலைப்பட்ட அஞ்ஞானத்தினையும், சாதாரணத்தோடு மறுதலைப்பட்ட அசாதரணத்தினையும், சேதனத்தோடு மறுதலைப்பட்ட அசேதனத்தினையும் நன்குணர்த்துவனவாம்.

இச்சொற்கள் மக்களிரட்டை மரமிரட்டை காயிரட்டை போல், ஒன்றற்கொன்றினமாய், இரண்டேயாய் நிற்றலால், இவற்றுள் ஒன்றனையொரு சொல்லுணர்த்தவே, ஏனையதனை அச்சொல்லொடு இணைந்த உபசர்க்கம் உணர்த்தி, இவ்வாறு மறுதலைப் பொருட்கண்ணே வருவதாகும்.

இனி உண்மையான் நோக்கும் வழி இம் மறுதலைப் பொருளும், மேலே காட்டிய அன்மைப் பொருட்கண்ணே அடங்குவதன்றிப் பிறிதில்லை.

நன்று சொன்னீர், இம்மறுதலைப் பொருளையுணர்த்தும் உபசர்க்க அவசரமும் அன்மைப் பொருட்கண்ணே அடங்குவதென்று மாத்திரம் கூறுவதென்னை? அஃது இன்மைப் பொருட்கண் அடங்குவதென்றுரைத்தல் ஆகாதோ எனின், —நன்று வினயினாய், அன்மை யென்பது ஒரு பொருளை மறுத்து வேறோர் பொருளை நாட்டுவதாம். இன்மை யென்பது அப்பொருளின் இருப்பை மறுத்து அதன் அபாவத்தை நாட்டுவதாம். 'இவன் சாத்தனா?' என்று வினயினானுக்கு, அவன் சாத்தன் அல்லன் கொற்றன் என்றெழுந்த மறுமொழி, வினவப்பட்ட அவ்வுயர்திணைப் பொருள் சாத்தனல்லன் என்று மறுத்துக் கொற்றன் என்பானை அறிவுறுத்தியது.

இனி, 'அங்கே சாத்தன் உளனா?' என்று வினாயினானுக்கு, அங்கே சாத்தன் இலன் என்றெழுந்த விடை சாத்தன் என்னும் உயர்திணைப் பொருள் அங்கில்லாமையை உணர்த்தி அதன் அபாவத்தையே அறிவுறுத்தியதாம்.

'இவன் சாத்தனா?' என்று முன்னெழுந்த வினாவில் வினாவப்பட்ட பொருள் ஒன்றிருப்ப, அப்பொருளின் உண்மை மாத்திரம் அறியப்படாது நின்றது; அதற்கெழுந்த சாத்தனல்லன் கொற்றன் என்னும் விடை, அப்பொருளினிருப்பை உடன்பட்டு, அப்பொருள் கொற்றனாம் என அதன் உண்மையை மாத்திரம் அறிவுறுத்தி நிற்பதாயிற்று.

இதனால், அன்மைப் பொருள் ஒரு திரவியத்தின் இருப்பையுடன்பட்டு, அதன் சொரூப உண்மையினை மாத்திரம் அறிவிப்பதாம் என்று இனிது பெறப்படுமென்க.

இனி 'அங்கே சாத்தன் உளனா?' என்று பின்னெழுந்த வினாவில், சாத்தன் என்னும் உயர்திணைப் பொருட்சொரூபஞ் சிறிதும் வினாவப் படுதலின்றி, அப்பொருளின் இருப்பே அறியவேண்டுவதாய் நின்றது; அதற்கு விடையாய் எழுந்த 'அங்கே சாத்தன் இலன்' என்பது, வினவப்பட்ட அவ்வுயர் திணைப்பொருள் அங்கில்லையென மறுத்து, அதன் அபாவத்தை நாட்டுவதாயிற்று. இதனால் இன்மைப்பொருள், ஒரு திரவியத்தின் இருப்பை உடன்படாது அதனை மறுத்து, அதன் அபாவத்தை நாட்டுதற்கண்ணே மாத்திரம் வருவதாமென்று துணியப் படும் என்க.

இதனால் வினாவும் பொருளினிருப்பு அறியப்பட்டு, அதன் சொரூபம் அறியப்படாமையின்கண் வருவதூஉம்; பொருட்சொரூபம் அறியப்பட்டு அதன் இருப்பு அறியப்படாமையின்கண் வருவதூஉம் என, வினா இருதிறப்பட்டு நிற்றல் காண்க.

இதனாலன்றே தொல்காப்பியத்திற்கு உரைகண்ட ஆசிரியர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'பொருட்பிழம்புமாத்திரம் உணர்ந்து அதன் உண்மை யறியப்படாமையினும், உண்மை மாத்திரமுணர்ந்து, பிழம்பறியப்படாமையினும் வினாநிகழும்' என்று அங்ஙனம் உரை கூறுவாராயினதூஉமென்க. இது நிற்க.

இனி அவ்வசத்தியம் அஞ்ஞானம் என்பவற்றின்கண் நின்று மறுதலைப் பொருளுணர்த்திய ந எனும் உபசர்க்கம், அன்மைப் பொருட்கண் அடங்குமாறு யாங்ஙனமெனிற் காட்டுதும்:

ஞானத்தோடு மறுதலைப்பட்ட பொருள் அந்த ஞானத்தின் அபாவமாயினன்றே, ஆண்டு இன்மைப்பொருள் கூறல் பொருந்தும்? ஞானம் இன்மையே அஞ்ஞானம் என்றும், பிரகாசமின்மையே அந்தகாரம் என்றுங் கூறுதல், ஒருவாற்றானும் பொருந்தாதாம். அபாவப் பொருளாயின் அதற்குக் குணமுந் தொழிலும் இல்லையாம். இது தருக்க சங்கிரகவுரையிலே தருக்க சாத்திரியாரான அன்னம்பட்டர் உரை கூறுமாற்றானும் இனிது பெறப்படும்.

இனி அஞ்ஞானம் என்னுந் திரவியத்திற்கு அறியாமைக் குணமும், சீவான்மாக்கள் அறிவை விளங்கவொட்டாது தடை செய்து நிற்குங் கிரியையும், அந்தகாரத்திற்குக் கருமைக்குணமும், கண்ணை மறைத்து அதனறிவியக்கத்தைத் தடைசெய்து நிற்குங் கிரியையும், பிரத்தியக்கமாக அறியக் கிடத்தலால், அவை இல்பொருளாகாது உள் பொருள்களேயாம்.

அற்றேல் தருக்க சாத்திரியாரான அன்னம்பட்டர் அந்தகாரத்தினைத் திரவியம் என்றுரையாது 'அஃது ஆலோகத்தின் அபாவம் போன்ற ஓர் இல்பொருள்' என்றுரை கூறியதென்னை எனின்;—அவர் அவ்வாறு கூறியது ஒருவாற்றானும் பொருந்தாதாம்; என்னை? இக்காலத்துப் பௌதிக சாத்திரிகளெல்லாம் தம் மதிநுட்பத்தால் இயற்றிய பல நுண்ணிய இயந்திர சகாயங் கொண்டு, பிரகாசிக்கின்ற கிரணங்களிலெல்லாம் அதிசூக்குமமான அந்தகார அணுக்கள் இயங்குதலைப் பிரத்தியட்சமாகக் கண்டு போதருகின்றனராகலின், ஒளியைப் போல இருளும் உள்பொருளாமென்றே துணியப்படும்.

இந்த நுண்பொருள், வடநூல் தென்னூல் முடிபு முழுதும் ஒழுங்குணர்ந்து உரை எழுதிய ஆசிரியர் சிவாக்கிர யோகிகள், சிவஞான சித்தியாருரையுள் அந்தகாரம் உள்பொருளென்றே நாட்டிய முடிபும், இக்காலத்துப் பௌதிக சாத்திர முடிபோடு பெரிதும் இணங்குகின்றது. இங்ஙனமாகலின், இதனுண்மை யறியாது கூறிய அன்னம்பட்டருரை, ஈண்டைக்குச் சிறிதும் பொருந்தாதென்று துணியப்படும். இது நிற்க.

அவ்வாறு மேற்காட்டிய முறையால் சத்தியம், ஞானம் என்பவற்றோடு மறுதலைப்பட்ட அசத்தியம் அஞ்ஞானம் என்பனவெல்லாம், உள்பொருள்களையே குறிப்பனவாமாகலின், அவையெல்லாம் இன்மைப் பொருட்கண் அடங்குமாறில்லை என்பதும்; அவை அன்மைப் பொருட்கண் அடக்கமுறுதலே பொருத்தமாமென்பதும்; அதனால் மறுதலைப் பொருள் அன்மைக்கண் அடங்க ந வென்னும் உபசர்க்கம் உணர்த்தும் பொருள் அன்மை இன்மை யென்னும் இரண்டேயாமென்பதும், பெறப்படுவனவாம் என்க.

இனி இந்நகரத்தா லுணர்த்தப்பட்ட அன்மை இன்மை என்னும் இருபொருள்களுள், ஈண்டெடுத்துக் கொண்ட 'அத்துவிதம்' என்னுஞ் சொல்லின்கண், நகரம் எப்பொருளை உணர்த்துமெனின், —அஃது அன்மைப் பொருளை உணர்த்துவதாமென்க.

'துவிதம்' என்பது இரண்டு என்னும் பொருளை உணர்த்துவது. இரண்டு என்னும் பொருட்பெயர் இருமை என்னும் பண்பைத் தானுடையதாக இருத்தலின், இவ்வெண்ணுப்

பொருட்பெயர்மேல் வரும் நகரம் அன்மைப் பொருளையல்லது, வேறு பொருளை உணர்த் தாது. என்னை? பண்பை யுணர்த்துங் குணப் பெயர்மேல் வரும் நகரம் மாத்திரம், இன்மைப் பொருளைக் காட்டுமென்று மேலேயுரைத்து விளக்கினுமாகலின் என்க.

இன்னும் இவ்வெண்ணுப் பொருட்பெயர் மேல் வரும் நகரம் என்னுஞ் சொல், ஒன்றில்லை யென்னும் இன்மைப் பொருளைச் சுட்டாது, ஒன்றல்லாத பலவென்பதனைக் காட்டுதலே சான்றுமாகாலானும்; ஆசிரியர் சிவஞான யோகிகளும் சிவஞான போத உரையின்கண் ''எண்ணுப் பெயர்மேல் வந்த நகரம் அன்மைப் பொருள் மாத்திரையே யுணர்த்திப் பொதுமை யினிற்பதன்றி ஏனைச் சொற்களின்மேல் வந்த நகரம்போல இன்மை மறுதலைப் பொருள்களை யுணர்த்துதல் வழக்கின் கண் இன்மையின்'' என்று ஆராய்ந்து நிறுவினமையானும்; 'அத்து விதம்' எனுஞ் சொல் 'இரண்டு அன்மை' என்றே பொருளுணர்த்து மென்றல் கரதலாம லகம் போற் பெறப்படுவதாம்.

இனி இதற்கு இப்பொருள் காணமாட்டா தார் 'அத்துவிதம்' என்னும் பொருட்பெயர் மேல் வந்த நகரத்திற்கு 'இரண்டின்மை' எனப் பொருள் கொண்டு, இரண்டு என்பதன் இருப் பை மறுத்து, அதற்கு 'ஒன்று' என்றே பொரு ளுரைத்தார்.

இனி ஒன்று என்பதனை உணர்த்துதற்குச் சமஸ்கிருத பாஷையில் 'ஏகம்' என்னுஞ்சொல் உண்டாகலின், அதனையே 'அத்துவிதம்' என் னுஞ் சொல்லும் உணர்த்து மென்றல் மிகை படக் கூறுதல் என்னுங் குற்றமாயொழியும். உலகத்தில் பரந்து பட்டுக்கிடக்கும் எல்லாப் பாஷைகளிலும் ஒரு பொருளை உணர்த்துதற்கு ஒரு சொல்லேயன்றி இரு சொற்கள் கிடையா.

இனி அதுவேயுமன்றித் தமிழ் வடமொழி முதலான மொழிகளில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்றற் றொடக்கத்து எண்ணுப் பொருள்களைக் குறிக்க, ஒன்று இரண்டு மூன்று முதலான ஒவ்வோர் சொற்களே காணப் படுகின்றன அன்றி, வேறு பிற காணப்படுகின் றில. ஒன்று என்பதற்கு ஏகம் என்னும் ஒரே சொல்லும், இரண்டு என்பதற்குத் துவிதம் என்னும் ஒரே சொல்லும், மூன்று என்பதற்குத் திரிதம் என்னும் ஒரே சொல்லும், நான்கு என் பதற்குச் சதுர்த்தம் என்னும் ஒரே சொல்லும் ஐந்தென்பதற்குப் பஞ்ச என்னும் ஒரே சொல் லுங் காணப்படுதலல்லாமல், வேறு சொற்கள் காணப்படா மயால், பிறவற்றிற்கின்றி இவ் வேகம் என்னும் ஒரு பொருட்கு மாத்திரம் 'அத்துவிதம்' என மற்றொரு பெயருமுண்டென் றல், பாஷாதத்துவம் இனைத்தென்றறியாதார் கூறுங்கூற்று யொழியும். அது கிடக்க.

இனிப் பொருளாராயும் நெறியால் வைத்துப் பார்க்குமிடத்தும், அவ்வத்துவிதம் என்னுஞ்சொல், ஒன்றெனப் பொருள்படுமா றில்லையாம். உருத்திரன் ஒருவனே உளன் இரண்டாவதில்லை எனவும், பிரமம் ஏகமாயும் அத்துவிதமாயுமுளதெனவும், அத்துவிதமாயும் சாந்தமாயும் நான்காவதாயுமுள்ள சிவத்தின் வேறுவதொன்றில்லை எனவும், பரம் பொருட் டுணிவு பெறுவிக்குங்கால், அதனை 'ஏகம்' 'அத்துவிதம்' என்ற இரண்டு சொற்களால் விளக்குதலானேயே, அஃது அவ்விரு சொல்லா னும் அதன் இரு வகை இலக்கணத்தை உரைக் கப்புகுந்த தென்பது பெறப்படவில்லையா ? தத்துவம் கடந்த பரம்பொருளியல்பு உணர்த் தும் வழியெல்லாம், சுருதி 'ஏகம்' என்றே ஒழியாது, 'அத்துவிதம்' எனவும், மேலும் ஒரு சொற் கூட்டிக் கூறுதல், அச்சொல்லால் வேறு மொருநுட்பந் தெரிக்கும் கருத்துப் பற்றியே யன்றோ?

அற்றன்று, பிரமம் ஒன்றேயுளதென்று மேலும் மேலும் வற்புறுத்துதற் பொருட்டா கவே, சுருதி அங்ஙனங் கூறிற்றன்றி 'அத்து விதம்' என்னுஞ் சொல்லால் வேறும் ஒரு நுட்பந் தெரித்தற் பொருட்டன்றெனின் ;— ஒன்றனையே மேலும் மேலும் வற்புறுத்த வேண் டினர், அப்பொருட்குரிய அச்சொல்லையே மறித்தும் மறித்துங் கூறுவர்; இவ்வியல்பு தமிழ் வடமொழி முதலான எல்லாப் பாஷை இலக்க ணங்களுக்கும் ஒப்ப முடிந்த தொன்றேயாம் ; அவனே அவனே சாத்தன், கொற்றன் அதனை உண்ணவே உண்ணவே செய்வான் என்னும் உதாரணங்களானும், இது தெளியப்படும். கடவுள் ஒன்றென்றே தெளிவிக்க வேண்டுவா ரும், 'ஒன்றே, ஒன்றே கடவுள்' என்றே கூறுப.

இதுபோலச் சுருதியும் கடவுள் ஒன்றென்று மாத்திரம் உறுதியுரை நிகழ்த்த வந்ததாயின் 'ஏகம் ஏகம் பிரமம்' என்றே கூறிடல் வேண்டும். அங்ஙனமன்றிச் சுருதி பிரமம் ஒன்றென்று வற்புறுத்துதலோடு, அதன் வேறுமோர் இலக் கணத்தையுங் குறித்தற் பொருட்டே 'ஏகமே வாத்விதீயம்' எனக் கிளந்தோதுவதாயிற்று.

அற்றேல், பிரமம் ஒன்றே உளதென நிறுத்தக் கருதிய அதன் பொருள் ஆற்றல், 'அத்துவிதம்' என்னுஞ் சொல்லுக்கு வேறு பொருள் கற்பித்தலாற் குறையுமெனின்; — நன்று சொன்னாய், தேற்றப் பொருள்படுந் தமிழ் ஏகாரத்தோடு ஒப்பதான 'ஏவ' எனும் இடைச் சொல் 'ஏகம்' என்பதனோடு இயைந்து நின்று 'பிரமம் ஒன்றே' எனப்பொருளுணர்த் தியதாகலின், அப்பொருளாற்றல் ஆண்டுக் குறையுமாறு சிறிதுமில்லை என்க.

அற்றன்று, 'அவனே அவனே சாத்தன்' என்புழித், தேற்றேகாரம் அவன் என்பதனோடு சேர்ந்து நின்றவிடத்தும், மேலும் வலியுண்டா தற்பொருட்டு 'அவனே அவனே' என்பது இரட்டித்து வந்தவாறு போல 'ஏகமேவ' என்ற விடத்தும், மேலும் அப்பொருளாற்றல் தோன் றுதற் பொருட்டு 'அத்துவிதம்' எனும்சொல் வந்ததெனின்;— அவ்வாறு வரல் வேண்டினும், மேலை உதாரண வாக்கியத்தில் 'அவனே' என் பதே பின்னும் இரட்டித்து வந்தவாறு போல 'ஏகமேவ' என்பதே பின்னும் இரட்டி ''ஏக

மேவ ஏகமேவ பிரமம்'' எனவரற்பாலதல்லது, ''ஏகமேவாத்வதீயம்ப்ரம்மா'' என வரற்பாற்றன்று என மறுக்க. அல்லதூஉம், 'அவன்' என்பது இரட்டியவழி 'ஏ' காரம் இரண்டிடத்தும் புணர்ந்து, 'அவனே அவனே' என நிற்றல் போல 'ஏவ' என்பதும் இரண்டிடத்தும் புணர்ந்து 'ஏக மேவாத்விதீயமேவப்ரம்மா' என நிற்றல் வேண்டும்; மற்று அவ் 'ஏவ' எனும் இடைச்சொல் மேலைச் சுருதி வாக்கியங்களில் 'ஏகம்' என்பதனோடு மாத்திரம் புணர்ந்து நிற்பக் கண்டாமன்றி, 'அத்துவிதம்' என்னுஞ் சொல்லோடு புணர்ந்து நிற்பக் காணாமையாலும் அங்ஙனம் பொருள் செய்தல் அவ்வாக்கியக் கருத்துக்கு முற்றும் முரணுமென்பது கடைப்பிடிக்க.

இனிச், சுருதி வேறு எப்பொருள் கூறக் கருதி 'அத்துவிதம்' எனுஞ்சொல்லை ஆண்டுப் பிரயோகிப்ப தாயிற்றெனின் :— அப்பிரமம் என்னும் முழுமுதற் பொருள் ஏனை உலகு உயிர்களோடு ஒற்றுமையுற்றுப் பிரிப்பின்றி நிற்றலை உணர்த்துதற் பொருட்டாகவே, அஃதச் சொற்பிரயோகஞ் செய்ததென்க.

அற்றேல், அவ்வுலகுயிர்களோடு பிரிப்பின்றி நிற்கும் அவ்விறைவனும் அவையும் சமமாவான் செல்லுமேயெனின் ; —அங்ஙனம் பிரிப்பின்றி நிற்பினும் இறைவன் அளவிறந்த ஆற்றலும் முற்றறிவும் முழுமுதன்மையும் உடையனாகலானும், ஏனை ஆன்மாக்கள் சிறிய சத்தியும் சிற்றறிவும் உடையவாய் முதன்மையில்லனவாயிருத்தலானும், மற்றை உலகங்கள் அறிவில்லாத சடப் பொருள்களாதலானும், அவனும் அவையும் அவ்வாறு சமமாவான் செல்லுதலில்லை என்க.

இது தெரித்தற்கென்றே 'அத்விதீயம் ப்ரம்மா' என்னாது, 'ஏகமேவாத்விதீயம் ப்ரம்மா' எனச் சுருதி 'ஏகம்' என்னுஞ் சொற்கூட்டிக் கூறுவதாயிற்று. 'பிரமம் ஏகமேவ' என்றமையானே இரண்டு பிரமங்கள் இல்லை, பிரமம் ஒன்றேயுள்ளது என்பது துணியப்படுவதாயிற்று.

தேர் முதலாயின பலராற் செய்யப்படுதல் போல, அதிவிசித்திரமான இப்பிரபஞ்சமும் கடவுளர் பலராற் செய்யப்படுவதென்னும் அநேகஈசுரவாதத்தை மறுத்துக், கடவுள் ஒன்றே உள்ளதென நிறுவுதற் பொருட்டுச் சுருதி 'ஏகமேவ' எனுஞ் சொற் பிரயோகஞ் செய்வதாயிற்றெனும் உண்மையைச் சைவசித்தாந்தப் பரமாசாரிய மூர்த்திகளான மெய்கண்டதேவர்,

''ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்றநீபாசத் தோடுளேகாண்—ஒன்றின்றால்
அக்கரங்க ளின்றா மகர வுயிரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு''

என இனிது தெருட்டியருளினமை காண்க. 'ஏகமேவ' என்ற அச்சொற்களால் பரப்பிரமத்தோடு சமம் பெறுவதில்லையெனவும், அப்பிரமம் தான் ஒன்றேயாய் உள்ளதெனவும், மிக நுண்ணியபொருள் நிலைபெறுத்தப்பட்டவாறு காண்க.

இனி அப்பிரமம் தான் ஒன்றேயாய் நிற்பினும், ஏனை உலகுயிர்களை அசைவித்தற் பொருட்டும், அறிவித்தற் பொருட்டும் அநாதி தொட்டு அவற்றோடு வேறறக் கலந்து நின்று உபகரித்தலின், அங்ஙனங் கலந்து நிற்கும் உண்மையினைத் தெருட்டவே, பொருட்டன்மையால் ஒன்றாய் நிற்கும் அப்பிரமத்தைச் சுட்டிச் சுருதி 'அத்விதீயம்' எனவும் மொழிந்திடுவதாயிற்று.

பொருட்டன்மையால் தான் ஒன்றேயான பிரமம், ஏனை உலகுயிர்களோடு சம்பந்தமுறாது தனித்து நிற்பதாயின் 'அத்விதீயம்' என்னுஞ் சொற்பிரயோகம் வேண்டாமல் 'ஏகமேவ ப்ரம்மா' என்று மாத்திரமே கூற அமையும். அங்ஙனம் தான்வேறு உலகுயிர்கள் வேறு எனத் தனித் தனியே நிற்றலின்றி, இறைவன் அவற்றோடு இயைந்து உடனாய்க் கலந்து கொண்டிருத்தலின் ஏகமாகிய அப்பிரமத்தைச் சுட்டி, அத்விதீயம் எனுஞ் சொற் பிரயோகம் எழுந்ததென்க.

பாலும் நீருந் தனித் தனியே நிற்குமாயின், பால் ஒன்று நீர் ஒன்று என்றும், அவை தனித் தனியே இரு பொருள்கள் என்றுங் கூறல் பொருந்தும்; அங்ஙனமின்றிப் பாலும் நீரும் ஒன்று கூடிய வழி, அக்கலப்பினை ஒன்றெனவாவது இரண்டெனவாவதுகூறல் சிறிதும் பொருந்தாதாம்; அக்கலப்பினை இரண்டல்லதெனக் கூறுதலே பொருத்தமாம்.

இதுபோலப் பிரமம் தான்வேறு, உலகுயிர்கள் வேறு எனத் தனித் தனியே நிற்பின், அவை தம்மை வேறு வேறு இருபொருள்களெனக் கொண்டு 'துவிதம்' என வழங்கல் பொருந்தும்; மற்று அப்பிரமம் அவ்வாறின்றி அநாதிதொட்டு உலகுயிர்களோடு உடனாய்க் கலப்புற்று நிற்றலின், அவை தம்மை ஒன்றெனவாவது இரண்டெனவாவது கூறுதல் பொருந்தாமையின், அவை கலப்பால் இரண்டல்லவாய் நிற்குமியல்பு தெரிந்து 'அத்விதீயம்' எனச் சுருதி கூறுவதாயிற்றென்க.

இனி அன்மைப் பொருள் ஒன்றனை மறுத்து வேறொன்றனை நாட்டுவதாகலின், பிரமமும் உலகுயிர்களும் வேறு வேறு நிற்குமெனத் துவிதவாதிகள் கூறும் தனி நிலையினை மறுத்து, அவையிரண்டும் ஒன்றோடொன்று அளாவி நிற்கும் கலப்பு நிலையினை, இவ்வத்துவிதம் எனும் சொல் ஈண்டுணர்த்துவதாயிற்று. இவ்வத்துவிதம் எனும் சொல் அன்மைப் பொருளையன்றி, வேறு பொருளுணர்த்தாதென்பது முன்னரே இனிது விளக்கப்பட்டது காண்க.

இனி இவ்வத்துவித இரகசியார்த்தத்தை உணர்த்தவே, தக்கணாமூர்த்தி வடிவாய் எழுந்தருளிய இறைவனருட்கோலம், சின்முத்திரை பிடித்துக் காட்டிய தென்க. அச் சின்முத்திரை

யிற் பெருவிரலோடு சுட்டுவிரல் சேர்ந்து ஒரு சக்கர வடிவு தோன்றுகின்றது. பெருவிரலுஞ் சுட்டு விரலுந் தனித் தனியே நிற்பிற் பெருவிரல் ஒன்று, சுட்டுவிரல் ஒன்று எனவும்; அவை தனித்தனி இரு பொருள்கள் எனவுங் கூறுதற்குப் பொருந்தும்; அங்ஙனமின்றி அவ்விரலிரண்டும் ஒன்றுகூடி ஒரு சக்கரவடிவாய் நின்றவழி, அக்கூட்டுறவை ஒன்றெனவாவது இரண்டெனவாவது கூறுதல் ஏலாது. அங்ஙனங் கூறல் ஏலாமையால், அவ்வொன்றுக்கும் இரண்டிற்கும் நடுநின்ற இயைபைச் சுட்ட, ஒன்றனையும் இரண்டனையும் உணர்த்தாத அத்துவிதம்' எனுஞ்சொல், ஆன்றோரால் அழைக்கப்பட்டதென்க.

இனி இவ்விரற் கூட்டத்திற் பெருவிரலே பிரமமாம், சுட்டுவிரலே ஆன்மாவாம்; இவை இரண்டன் கூட்டுறவே முத்தியாம்; அம்முத்திக் கூட்டுறவே அத்துவித முத்தி எனப்பெயர் பெறுவதாம். இங்ஙனம் இச் சின்முத்திரைக் கண் அத்துவித முத்தித் தன்மை, சொல்லானன்றி வெறுங்கை காட்டால் அறிவுறுக்கப்பட்டமையினாலன்றே, அக்குருவைச் சுட்டி ''எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடியிருந்து காட்டிச், சொல்லாமற் சொன்னவரை'' என்று ஆன்றோர் கூறுவாராயினாரென்க. இச் சின்முத்திரையின் பொருள் இதுவாதல் உணரமாட்டாதார், இதற்குத் தமக்குத் தோன்றியவாறெல்லாம் வேறு வேறு பொருள் கூறி இழுக்குறுவர். அது கிடக்க.

இனி அத்துவிதம் எனும் அச்சொல்லுக்கு இன்மைப் பொருள் கூறுதல் அடாதாயினும், உலகுயிர்களெல்லாம் வெறும் பொய்ப்பொருள்களென்று கோடுமாகலின், பிரமம் ஒன்றே சத்தியமாய் உள்ளது, ஏனைய இல்லை எனப்படுதற்கு ஏற்ப, அத்துவிதம் என்னுஞ் சொல்லுக்கு இவ்விடத்து மாத்திரம் 'இரண்டின்மை' எனப் பொருள் கொள்வேமென ஏகான்ம வாதிகள் கூறுவராலெனின்;—அவர் கூறுவது ஒருவாற்றானும் பொருந்தாமை சிறுமகார்க்கும் விளங்கற்பாலதேயாம். உள் பொருள்களாய் உண்மை அனுபவப் பொருள்களாய்த் தோன்றும் உலகுயிர்களை, இல்பொருள்களென்றற்குப் பிரமாணமின்மையானும், ஈசன் அநீசனான ஆன்மா இருவரும் பிறவாதவர் என்பதும், பரமான்மா சீவான்மா என ஒரே பெயரான் வழங்கப்படும் இரு பறவைகள் மாயை என்னும் ஒரே மரத்திலுள்ளன என்பதும் இனிது பெறப்படுதலானும், சுருதியோடு முரணாமற் கூற வேண்டுமென்னும் அவருரையே அவர்க்கு இழுக்காய் முடிதலானும் அவருரை பொருந்தாதென்க.

சென்னை சூளை சீலத்திரு சோமசுந்தர நாயகர் *(1846-1901)* அவர்களைச் சைவத் தமிழுலகம் நன்கினிது அறியும். அவர்கள் மாட்சிமிகு பாஸ்கர சேதுபதி மன்னர் அவர்களால், ''வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம்'' என்றும், திருவாவடுதுறை ஆதீனத்தின் குருமகாசந்நிதானம் அவர்களால் ''பரசமய கோளரி'' என்றும், அரிய பட்டங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றவர். தமிழ் தெலுங்கு சமஸ்கிருதம் ஆங்கிலம் என்னும் பல மொழிகளில் பெரும் புலமை வாய்ந்தவர். சிவாதிக்ய ரத்னாவளி, சைவசூளாமணி, பரதத்துவப் பிரகாசிகை, பிரமதத்துவ நிருபணம், அர்ச்சாதீபம், ஆதிசைவப்பிரபாவம், சித்தாத்த ரத்னாகரம், சித்தாந்த ஞான போதம், மெய்கண்ட சிவதூஷண நிக்கிரகம், ஆசார்யப்பிரபாவம் முதலிய, பலப்பல அரிய சமய தத்துவ நூல்களை இயற்றியவர்.

நம்முடைய சமய தத்துவ நூல்களில், வழங்கப்பெறும் சொற்பொருள்கள், சில சமயங்களில் செவ்விதின் வரையறை செய்யப்படுவதில்லை. ("Theology" says the Master of Balliol, "is full of undefined terms which have distracted the human mind for ages. Man kind have reasoned from them but not to them; they have drawn out conclusions without proving the premises; they have asserted the premises without examining the terms. The passions of religious parties have roused to the utmost about words of which they could have given no explanation, and which had really no distinct meaning".—Lord Avebury, The pleasures of Life, P. 222) அதனால் ஒரு சொல்லுக்கும், ஒரு சொற்றொடருக்குமே, பலர் வெவ்வேறு வகையான பொருள் விளக்கங்கள் செய்ய வாய்ப்பு ஏற்படுகின்றது. அம்முறையில் ''அத்துவிதம்'' என்னும் ஒரு சொல்லுக்கே, சங்கரர், இராமாநுசர், மத்துவர், வல்லபர், நிம்பார்க்கர், மெய்கண்டார் முதலிய பல்வேறு ஆசிரியர்கள், வெவ்வேறு விளக்கங்கள் செய்து, வெவ்வேறு கோட்பாடுகளையும், நெறிகளையும் வகுத்தருளியுள்ளனர்.

சீலத்திரு சோமசுந்தரநாயகர் அவர்கள், வடமொழியிற் பெரும்புலமை வாய்ந்து திகழ்ந்தவர் ஆதலின் 'அத்துவிதம்' என்னும் சொல்லுக்குச் சைவசித்தாந்த நெறியின்படி, அழகிய இனிய தமிழில் உரைவிளக்கம் செய்திருக்கின்றார். அஃது அன்பர்களுக்குப் பயன்படும் பொருட்டு, இங்கு எடுத்து வெளியிடப்படுகின்றது.

இதன்கண், எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம், அன்மைப் பொருளை உணர்த்துவதன்றி, இன்மைப் பொருளையும் மறுதலைப் பொருளையும் உணர்த்தாது என்றும்; எனவே துவிதம் என்னும் எண்ணுப்பெயர் மேல் வந்த நகரம் அன்மைப் பொருளை உணர்த்துவதன்றி, இன்மைப் பொருளையும் மறுதலைப் பொருளையும் உணர்த்தாது என்றும், குறிப்பிடப்பெற்றுள்ளது. ஆனால் ''அஷ்டாநவம் (எட்டில் ஒன்பதில்லை)'' என்னும், பிரயோகத்தில் 'நவம்' என்னும் எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம், இன்மைப் பொருளை உணர்த்துகின்றது. ''அபஞ்சீகரணம்'' என்புழியும் இங்ஙனமே எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம் இன்மைப் பொருளை உணர்த்துகின்றது. எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம் இன்மைப் பொருளை உணர்த்தாது என்பது நியமமாயின், ''சதேந ஸஹஸ்ரம்'' (நூற்றில் ஆயிரமில்லை), ஸஹஸ்ரேநாயுதம்'' (ஆயிரத்தில் பதினாயிரமில்லை), ''ஒன்றுளதாயினும் இரண்டில்லை'' என்றற்றொடக்கத்துப் பிரயோகங்கள் நிகழுதல் கூடா. நிகழுதலின், எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம் அன்மைப் பொருளையே உணர்த்தும்; வேறு பொருளை உணர்த்தாது என்பது பொருந்தாது. அத்துவிதம் என்பதனுள் நகரம், ''அநேகம் (ஒன்றல்ல)'' என்பதுபோல, அன்மைப் பொருளையே உணர்த்துமாயின், அது துவிதமல்ல (இரண்டல்ல) என்னும் மயக்கப்பொருளையே உணர்த்தும். உணர்த்தின் இரண்டல்ல என்பது ஒன்று, மூன்று, நான்கு முதலியவற்றையும் உணர்த்துதல் கூடும் என, வேதாந்த நூலார் கூறும் விளக்கமும், ஈண்டு நாம் சிந்தித்து ஆராய்ந்து உணர்தற்குரியது.

—ஆசிரியர்.

திருநந்திதேவர்

'அருண்மொழியரசு' திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

மாகேசுவரம் என்ற மலை மிகவும் வளமுடையது. கனி மரங்களும், பூ மரங்களும், சோதிவிருட்சங்களும் மிக்கஅழகாக எப்போதும் பூத்துக் கொண்டும் பழுத்துக் கொண்டும், காண்போர் கண்களையும், கருத்தையும் கவர்ந்து கொள்ளும் கவினும், மகிமையும் உடையனவாய் விளங்கின ; சித்தரும் முத்தரும் இருடியரும் அம்மலையில் சிவத்தை நோக்கித் தவத்தைப் புரிந்து கொண்டிருப்பார்கள். நல்ல தீர்த்தங்கள் பல அமைந்திருந்தன.

இத்தகைய மாகேசுவர மலையிலே ஒரு மாதவ முனிவர் பன்னெடுங்காலந் தவம் புரிந்து கொண்டிருந்தார். அவருடைய தவம் அளவிடற்கரியது. ஒரு சமயம் அம்முனிவர் தமது நண்பர்களுடன் உலக யாத்திரை புரிந்தார். இடையில் யமபுரம் வர நேர்ந்தது. அறக் கடவுள் முனிபுங்கவர்களை வரவேற்று உபசரித்தனர். முனிபுங்கவர் நரகங்களைப் பார்வையிட்டு வந்தபோது, இடையில் ஒரு கற்குன்று இருந்தது.

''அறக்கடவுளே! இக் குன்று இங்கிருக்க வேண்டிய காரணம் யாது?'' என்று முனிபுங்கவர் வினவினர். அறக்கடவுள், ''சுவாமீ! பூமண்டலத்தில் தாங்கள் சிறுவராக இருந்த போது, தங்கள் திருமனையில் வந்து அமுதுண்ட சிவஞானியின் உணவுப் பாத்திரத்தில், விளையாட்டாக ஒரு சிறு கல்லை எறிந்தீர், அச் சிவஞானி, அக்கல்லை அன்னத்துடன் சேர்த்து உண்டார். அக் கல் இங்கு வந்து, நாளும் நாளும் வளர்ந்து கொண்டிருக்கின்றது. தாங்கள் இங்கு வரும்போது இக்குன்றை உடைத்துக் கரைத்து உம்மை உண்ணுமாறு புரிவர். நல்வினையும், தீவினையும் ஒன்றுக்கு ஆயிரமாக வளருமல்லவா? ஆகவே ஞானியின் உணவில் கல்லை எறிந்த நீர், இக் கற் குன்றை உண்டு, அவ்வினையைத் தீர்க்க வேண்டும்'' என்றார்.

இச் சொற்களைக் கேட்ட முனிபுங்கவர் நடுங்கிவிட்டார். ''அறக்கடவுளே! இவ்வினை தீர வழி ஏதேனும் உளதோ?'' என்று கேட்டனர். அறக்கடவுள், ''அருந்தவ அண்ணலே! வினையை விதைத்தவன் வினையை யுண்பான் ; தினையை விதைத்தவன் தினையை யுண்பான். இக்குன்றுக்கு நிகரான ஒரு குன்றை மண்ணுலகில் தாங்கள் கண்டு அதனை உடைத்துக் கரைத்துக் குடித்தால் இக்குன்று இங்கே கரைந்து ஒழியும்'' என்றார்.

முனிவர் பெருமான் அறக்கடவுளிடம் விடைபெற்றுக் கொண்டு மண்ணுலகம் அடைந்தார். தாம் நரகிற் கண்ட குன்று போன்ற ஒரு குன்றைத் தேர்ந்து கண்டனர். அதனைச் சிறு சிறு துண்டுகளாக்கி நாடோறும் அக்கல்லைத் தூளாக்கி நீரில் கரைத்துக் குடித்துத் தமது தவச் சித்தியால் அக்குன்றை அதம் பண்ணினார். சிலையை அதஞ் செய்ததனால் சிலாதர் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது.

பின்னொரு சமயம் அவர் யமபுரம் போய்ப் பார்த்தனர். அக் குன்று அங்கு மறைந்து விட்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். திரும்பி வருங்கால், சில ஆன்மாக்கள் நரகில் கிடந்து துன்புறக் கண்டார். திருவுளம் இரங்கினார். ''நீவிர் என்ன தீவினை புரிந்தீர்கள்? இவ்வாறு கிடந்து வேதனையுறுகின்றீர்களே'' என்று கருணையுடன் வினவினர்.

''புண்ணியவானே! பூவுலகில் எங்கள் மரபில் வந்த சிலாதன் என்பவன் திருமணமின்றியும் புதல்வர்ப் பேறு இன்றியும் பிரமசாரியாகவே இருக்கின்றான். குலமழிகின்றது. நாங்கள் நலமழிந்து நரகிடை விழுகின்றோம்'' என்றார்கள். இதைக் கேட்ட சிலாதர் ''பிதிர்க்களே வருந்தன்மின் ; சிலாதன் என்பவன் யான்தான். உங்கள் பொருட்டுத் திருமணஞ் செய்து நன்மகனைப் பெறுவேன்'' என்றார். உடனே அவர்கள் அந் நரகினின்றும் நீங்கி நற்கதி பெற்றார்கள்.

சிலாதர் பூவுலகம் எய்தி, உத்தம குணம் பொருந்திய சித்திரவதியார் என்ற பத்தினியை மணந்து கொண்டனர். மனைவியுடன் இருந்து நித்திய நைமித்திய ஒழுக்கங்களைப் பேணி நல்லறம் புரிந்தார். திருநீறும் உருத்திராக்கமும் திருவைந்தெழுத்தும் புனைந்து, சிவார்ச்சனை புரிந்து வந்தார். ஐம்பெரும் வேள்விகளையும் புரிந்து வந்தார்.

நெடுங்காலமாகியும் மகப்பேறு வாய்க்கவில்லை. ஒருநாள் மனைவியார் அவர் திருவடியைத் தொழுது ''உயிர்த் துணைவரே! நமது குலம் விளங்க ஒரு புதல்வன் நமக்குப் பிறக்கவில்லையே. என்னிருந்து என்ன பயன்? சுதானந்தமில்லார்க்கு, சதானந்தமில்லை என்பர் ஆன்றோர். ஆதலின் தங்கள் பேர் விளங்க நமக்கு ஒரு புதல்வன் உதிக்கச் சிவமூர்த்தி கருணை புரியவில்லையே. தாங்கள் சிவபூஜையில் அப்

பரமபதியை வேண்டுங்கள். ''வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என்றபடி நமக்கு மக்கட் பேற்றை வழங்குவார். தட்டி னுல்தானே கதவு திறக்கும். அழுத குழந்தை தானே பால் குடிக்கும். கேட்டால்தானே இறைவன் வரமருள்வார்'' என்ருள்.

சிலாதர் புன்முறுவல் செய்தார். ''பெண் மணி! குலம் விளங்க மைந்தன் பிறக்க வேண் டியது அவசியந்தான். ஆனுல் எப்போது கிடைக்க வேண்டுமோ அப்போதுதானே கிடைக்கும். இறைவனுக்கு நமது குறை தெரி யாதா? அவர் திருவுள்ளம் அறியாதது ஒன்று உண்டோ? உனக்கு ஏன் இந்த அறியாமை? எல்லாம் அறிந்தவர் சிவபெருமான்; இரக்கமே வடிவானவர் ; எல்லாம் செய்ய வல்லவர் ; அவர் எல்லாம் அருள வல்லவர். ஆகவே காலமறிந்து அருளுவர். கவலே வேண்டாம்'' என்ருர்.

''பெருமானே! தாங்கள் கூறுவது நியா யமே. எனினும், ''தவத்தளவேயாகுமாம் தான் பெற்ற செல்வம்''; மனம் தூயார்க்கு எச்சம் நன்ருகும்'' என்றெல்லாம் நீதி வாக்கி யங்கள் தெரிவிக்கின்றன. ஆகவே நற்றவஞ் செய்தால், அத்தவப் பயனுகக் கற்றவர் புகழும் சான்முஊ உதிப்பான்'' என்று சித்திரவதி செப்பினுள்.

மதி நலம் மிகுந்த மனேவியின் அறவுரை யைக் கேட்ட சிலாதர், ''அவ்வண்ணமே அரிய தவஞ் செய்வேன்'' என்ருர். திருநீற்றை உடம்பெல்லாம் பூசிக்கொண்டார். ஆயிரம் உருத்திராக்கம் அணிந்தார். வேனிற் காலத்தில் வெய்யிலிலும், மாரிக் காலத்தில் வெட்டவெளி யிலும், பனிக்காலத்தில் நீரிலும், காயும் கனியு மின்றியும், நீரும் காற்றும் இன்றியும், ஒரு காலில் நின்று, கரங்களே உயரக் கூப்பி, ஒரு மைப்பட்ட மனத்துடன், திரு ஐந்தெழுத்தை ஓதிப் பல்லாண்டு தவம் புரிந்தனர்.

சிவபெருமான் விடை மீது தோன்றி அவ ருக்குக் காட்சியளித்து ''அன்பனே என்ன வரம் வேண்டும்? கேள். அருள் புரிவோம்'' என்று அருளிச் செய்தார். சிலாதர் ''கண்ணுதற் கடவுளே! என் குலமும் உலகமும் உய்யவும், சிவநெறியீடேறவும், இறவாத் தன்மையுள்ள ஒரு புதல்வனேயருள் புரிய வேண்டும்'' என்ருர்.

உமாபதி, ''அன்பனே! நீ ஸ்ரீசைல மலே சென்று புத்திர காமேஷ்டி யென்ற வேள்வி புரியத் தொடங்குவாய்; நமக்குச் சமானமான சிறந்த புதல்வன் தோன்றுவான்; அவனுல் உன் குலம் புகழ் அனேத்தும் வாழும்'' என்று கருணே புரிந்து கரந்தருளினர்.

சிலாதர், சிவாக்ஞையைச் சிரமேற்கொண் டார். மனேவியாருடன் திருப்பருப்பதஞ் சேர்ந் தார். அங்கு அநேக முனிவர்களுடன் வேள்வி புரியத் தொடங்கினுர். இதனே இதனே, இப்படி இப்படி செய்ய வேண்டும் என்று திட்டமிட் டார். வேள்விக்கு உரிய சாதனங்களேயெல்லாம் ஆயத்தஞ் செய்தார். வைநசவாலகில்ய முனி வர்களே ரித்விக்குகளாகவும், குணி என்பவரை பிரம்மாவாகவும், பார்க்கவரை ஹோதாவாக வும், தும்புருவை உத்காதாவாகவும், அநமித் திரரைச் சதசியராகவும் நியமித்தார். பல தானங்களேயும் புரிந்தார். தீட்சை செய்து நியமத்துடன் ஒழுகினுர். நன்னுளில் பொற் கொழு பூட்டிய கலப்பையைப் பிடித்து யாக பூமியை உழுதார். பொற் கொழுவில் ஒரு தங்கப் பெட்டி வெளிப்பட்டது. அப்பெட்டியை அங்குள்ள முனிவர்கள் அனேவருங் கண்டு அதி சயமுற்ருர்கள். சிலாதர், சிவநாமஞ் சொல்லிப் பெட்டியைத் திறந்தார். கோடி சூரிய ஒளி யுடன், எல்லா அணிகலன்களேயும் அணிந்த ஒரு இளங் குமரன், அப்பெட்டியில் இருக்கக் கண்டார். மலர் மழை பொழிந்தது. வேத வொலி முழங்கியது. அமர துந்துபி ஒலித்தது.

புதல்வனேச் சிலாதர் எடுத்து உச்சி மோந்து முத்தமிட்டு மார்புடன் அணேத்து ஆனந்தக் கடலில் மூழ்கினுர். மனேவியார் கரத்தில் அளித்தார். சித்திரவதியார் மட்டற்ற மகிழ்ச்சியுற்றனர். மகனே மார்போடு அணேத் தனர். பால் பெருகியது. மகனுக்குப் பாலூட் டினர், தாலாட்டினர், அருமை பாராட்டினர்.

நான்முகக் கடவுள் இந்திரனே நோக்கி ''இப் புதல்வன் எல்லோருக்கும் ஆனந்தத்தை யருளுவதனுல் நந்தீசன் என்று அழைக்கப்பெறு வான்'' என்றனர். ''சிலாதர் மகனுதலின் இவன் சைலாதி என்று விளங்குவான்'' என்று முனிகணங்கள் வாழ்த்தினுர்கள். சிலாதர் வேள்வியை முற்றுவித்து, முனிவர்களே உப சரித்து விடை தந்தனுப்பினுர். நந்தீசர் இனிது வளர்ந்தார். உபநயனம் நிகழப்பெற்ருர். பிதாவிடம் விடைபெற்றுக் கொண்டு, பன்னிரு யாண்டு குருகுல வாசஞ்செய்து, வேதாகமங்களே ஐயந்திரிபு மயக்கமற ஓதியுணர்ந்தார். குரு வருளும் திருவருளும் பெற்றுப் பிதா மாதாக் கள்பால் வந்து அஞ்சலி செய்தார்.

தாய் தந்தையர் தனயனே நோக்கி இன் புற்ருர்கள். ''சுந்தர மிகுந்த மைந்தனே! இனி நீ ஒரு குலக் கொடியை மணந்து குலத்தினே வளர்த்து எமக்கு மகிழ்ச்சியைத் தருவாய்'' என்ருர்கள். நந்திதேவர், ''தாய் தந்தையரே! திருமணமா? பிறவிப் பெருங்கடலேக் கடக்க விரும்பிய எனக்குத் திருமணம் எற்றுக்கு? நீந்த முயல்பவன், குழவிக் கல்லே இடுப்பில் கட்டிக் கொள்ளலாமா? பறக்க விரும்பும் பறவை சிறகைத் துணித்துக் கொள்ளலாமா? இது என்ன விந்தை? அன்புள்ள தந்தையே ! தாயே! வேண்டாம்.

''மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க லுற்ருர்க்கு உடம்பும் மிகை''

என்றபடி, உடம்பே எனக்கு மிகையாகத் தோன்றுகின்றது. அறுபகை யொழித்து ஐவரை அறுவராக்கி, பிறவா நலம் பெறுவேன். அரிய இப்பிறப்பை அவமே கழிக்கலாமா?

ஓதிநூல் கோடி யுணர்ந்தும் உணரார்கள்
பாதி வெண்பாவில் பகரக்கேள்—ஆதி
சிவமே பொருள் அதனேச் சேருநெறி யன்பே
பவமே பகையருளால் பார்.

எனவே நான் ஒரு கணத்தையும் வீணுக்கமாட்டேன். சிவபெருமானே வேண்டித் தவஞ் செய்யப் போகின்றேன்'' என்ருர்.

தாய் தந்தையர் அது கேட்டு, ஒரு புறம் மகிழ்ச்சியும், மற்ருெருபுறம் வருத்தமும் அடைந்தார்கள். ''எங்கள் மாதவத்தால்வந்து பிறந்த மணி விளக்கே தவத்திற்கு இது பருவமன்று. உன் இளமை மிக்க திருமேனி வருந்துமே. நாங்கள் உன்னைப் பெறுவதற்குப் பலப் பல தவம் புரிந்தோம். கண்மணியனைய கான் முளேயே! திருமணம் புரிந்து சில காலம் வாழ்ந்து பின்னர் தவஞ் செய்; இல்லற தருமம் குற்றமுடையதன்று'' என்ருர்கள்.

நந்தீசர் : ''அன்பு மிக்க அன்னையே ! அருமைப் பிதாவே! உமது அன்புக்கு மகிழ்ச்சி. இந்த உடம்பு நிலேயில்லாதது. எந்தக் கணத்தில் மரணம் வருமோ? நிச்சயிக்க முடியாது. நீரிற் குமிழிக்கு நிகரானது இந்த உடம்பு. தவிர இளமையில் செய்யும் தவம், புதிய ஆடையில் சாயம் தோய்ப்பது போன்றது. ஆசாபாசம் இன்றி, அரன் திருவடியை நினைத்துத் தவஞ் செய்தால் அருள் நலம் உண்டாகும். அதுவே பிறவிப் பயனுகும். சில் காலஞ் சென்ருல் மூப்பு வரும். பொறி புலன்கள் சோர்வு அடைந்துவிடும். அப்போது உறுதியாகத் தவஞ் செய்ய முடியாது.

''குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நிழைத்தேறி—வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை''

என்று ஆன்ருேர் கூறுவர்.

சிவபெருமான் கருணே எல்லா நலங்களேயும் செய்யும். அக் கருணே மிகவும் அற்புத ஆற்றலுடையது. கரும்பையும் வண்டையும் அரும்பையும் கொண்டு மன்மதன் எல்லோரையும் வென்று மூன்று உலகங்களிலும் ஆட்சிபுரிவது சிவன் கருணேயாலன்ருே? ஈசன் கருணே பெற்ருல் ஒரு சிறு துரும்பும் அண்ட கோடிகளேப் படைத்துங் காத்தும் துடைத்தும் ஆணே செலுத்தும்.

கரும்பும் சுரும்பும் அரும்பும் பொருப்படைக் காமல்வில்வேள்
இரும்புங் கரைந்துருகச் செய்யுமால் இறும் பூதி தன்றே
விரும்பும் பெரும்புலியூர் எம்பிரான் அருள் மேவில் ஒரு
துரும்பும் படைத் தழிக்கும் அகிலாண்டத் தொகுதி யையே

ஆதலினுல் சிவபெருமான் திருக்கருணேயைப் பெறுவதுவே இப்பிறப்பின் பயன். அதனேப் பெற முயலாது நான் ஒரு கணமுந் தரியேன். நீவிர், நெஞ்சம் கொஞ்சமும் வருந்தாமல் மகிழ்ச்சியுடன் என்னே ஆசீர்வதித்து அனுப்புங்கள்'' என்ருர்.

தாய் தந்தையர் மறுத்துரைக்க மாட்டாதவர்களாய் மனம் மறுகி, உள்ளம் உருகிக் கண்ணீர் பெருக, மகனே வாழ்த்தி யனுப்பினுர்கள். நந்தீசர் தவக்கோலம் புனேந்தார். உணவையும், உறக்கத்தையும் துறந்தார். மனத்தை யடக்கினுர். அசையா அன்புடன் அரனுரை வேண்டி, நூறு வருடம் பஞ்சாக்கினிக்கு இடையில் நின்று, கடுந் தவம் புரிந்தார். அவருடைய அரிய பெரிய தவத்தைக் கண்டு அமரரும், முனிவரும் அதிசயித்தார்கள். தவவொளி விண்ணுலகத்தையும் ஒளிமயமாக்கியது. எது குறித்து இத் தவத்தை இவர் புரிகின்ருரோ என்று கருதி மாலயனுதி வானவர் நடுங்கினுர்கள். தங்கள் பதவிகளேக் குறித்துத் தவம் புரிவாராயின் தம் பதம் போகுமே என்று கவன்றனர்.

வெள்ளி மலே போன்ற விடை மீது வெள்ளே நீரணிந்த விமலன் தோன்றியருளினுர். ''நந்தீ! உன் தவத்திற்கு உவந்தோம். வேண்டிய வரங் கேள். தருவோம்'' என்று அருளிச் செய்தார்.

மூவரும் தேவரும் காணுத முழு முதற் கடவுளேக் கண்ட நந்தீசர், ஆனந்த பரவசரானுர்; குதித்தார்; அழுதார்; தொழுதார் ; ஆடினுர் ; பாடினுர் ; பித்தனேப் போல் ஓடினுர்; பன்முறை பணிந்தார். கருணேக் கடலே! காமதகனு! அரவாபரணு! திரிபுராந்தகா! தேவாதி தேவா! சந்திர சேகரா! ஆலமுண்ட நீலகண்ட நிமலனே! உமாமகேசுவரா! ஏழையேன் என்னென்று துதி செய்வேன். வேதங்கட்கும் எட்டாத வித்தகனே! எனக்கு வேண்டிய பொருள் யாதொன்றுமில்லே. உமது பாத கமலத்தில் மாருத அன்பு ஒன்றே வேண்டும். திருநீற்றிலும், உருத்திராக்கத்திலும், சிவ பூஜையிலும் நீங்காத ஆர்வம் வேண்டும். வேருென்றும் வேண்டாம்.'' என்ருர். இதனேக் கேட்ட ஏனேய தேவர்கள், நம் பதவிக்கு ஆபத்தில்லே என்று மகிழ்ந்தார்கள். சிவபெருமான் அகமகிழ்ந்து, ''அவ்வாறே யாகுக'' என்று அருள்புரிந்து மறைந்தருளினுர்.

நந்தீசர் மீளவும் உறுதியுடன் ஒரு நூறு வருடம் ஒப்பற்ற தவம் புரிந்தார். அத் தவத்தால் உலகங்கள் நடுங்கின. அத்தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் காட்சியளித்து, ''நந்தீ! உனது அரிய தவத்தைக் கண்டு நாம் மிகவும் மகிழ்கின்ருேம். நீ கணுதிபனுய் விளங்குவாய். என் ஆணே எங்கும் நடப்பது போல் உன் ஆணேயும் நடக்குமாறு அதிகார சக்தியையும் தந்தோம். ஆகவே அதிகார நந்தியாய் விளங்குதி'' என்று கருணே புரிந்தார்.

நந்தீசர், கண்ணுதற் கடவுளேப் பல முறை பணிந்து, ''அரவாபரணு! அருளாரமுதே ! வணக்கம்; வணக்கம். இரு வினேயின் வழி, ஆன்மாக்களுக்குத் தேவரீரது ஆணே நடப்பதுவே அமையும். சிறியேனுடைய ஆணேயும் வேண்டுமோ? என்பால் தேவரீர் வைத்திருக்கும் கருணே, உலகம் உணரும் பொருட்டு சிவ பூஜை, உருத்திர ஜெபம், திருநீறுங் கண்டிகையும் புனேதல் ஆகிய இவைகட்கு வேருன பூஜை, செபம், புனேவு செய்பவர் எவராயினும் அவர்களேத் தண்டிக்கவும், சிவார்ச்சனே செய்பவர் பால் சென்று அவர்களேக் காக்கவும் ஆற்றலு

டையவனாக அந்த ஆணை அமைவதாக'' என்று வேண்டினார். ''அவ்வாறே யாகுக'' என்று கருணை புரிந்து மறைந்தருளினார்.

நந்தீசருக்குத் தவத்திலே யுள்ள சுவை, வேறு எதிலும் உண்டாகவில்லை. தவமே தனமாகக் கருதினார். மறுபடியும் சிவபிரானை வேண்டி நூறு வருடம் தவம் புரிந்தனர். கண்ணுதற் கடவுள் கருணைமீக் கூர்ந்து காட்சி யளித்தார். நந்தீசர் பெருமானுடைய அடிமலர் மீது வீழ்ந்து கைகூப்பி நின்று ''திருமால் கண் மலரால் அர்ச்சித்த திருவடியை யுடையவரே போற்றி; அமரர் உய்ய ஆலமுண்ட அண்ணலே போற்றி; உலகை யழிக்க வந்த கங்கா நதியைத் தாங்கிச் சடையில் அடக்கி ஆன்மாக்களுக்கு அருள் புரிந்த ஆதிமூர்த்தியே போற்றி ; உயிர்கள் தோறும் இருந்து இன்னருள் புரியும் ஈசனே போற்றி; உமது திருவருளைப் பெற்றல்லவா திரிமூர்த்திகளும் முத்தொழில் புரிகின்றனர். ஆ! ஆ! தேவரீரது திருவருளின் பெருமையை அறியவல்லார் யாவர்? அதனை உன்னும் போதெல்லாம் உள்ளம் உருகி நீராய் ஓடுகின்றதே'' என்று துதி செய்தனர்.

சிவபெருமான், ''நந்தீ! உன்னைப் போல் பயன் கருதாது அன்பையே கருதித் தவம் புரிந்தார் வேறு ஒருவருமில்லை. நீ எம்மைப் போல் நித்தியனாக இருந்து யாவராலும் வணங்கப்பெறுவாய். உனக்குத் திவ்விய வடிவும், சடைமுடியும், சந்திர கலையும், நீலகண்டமும், மூன்று கண்களும், நான்கு தோள்களும், மான் மழுவும், யானையுரியும், நமது பூரண அருளும் அளித்தோம்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். மாலயனாதி வானவர்களைச் சிவபெருமான் பார்த்து, ''தேவர்களே! யாம் இந்த நந்தீசனைச் சகல கணாதிபர்களுக்கும் அதிபனாகச் செய்தோம். விநாயகன் முருகனைப் போல் இவனும் எமக்கு மகன். எல்லாத் தேவர்களாலும் இவன் பூசிக்கத் தக்கவன். இனி சிவஞானத்தைப் போதிப்பதற்கு இவனே ஆசிரியன், எமக்கு இவனே திருமேனி'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பின்னர் அரம்பையர் ஆடவும், நாரதாதியர் பாடவும், தேவதுந்துபி முழங்கவும், மலர் மாரி பொழியவும், பிதுர்த் தேவரது மனத்தில் உதித்த சுயஜ்ஞை என்ற கன்னிகையை நந்தீசருக்குத் திருமணம் செய்வித்தனர். உலகில் உள்ள ஆன்மாக்கள் யாவும் அத் திருமணத்தைக் கண்டு உவகையுற்றன. சிவபெருமானும், உமாதேவியும், நந்தியெம் பெருமானையும் சுயஜ்ஞா தேவியையும், தமது மகனும் மருமகளும் எனக் கொண்டு, அவ்விருவரையும் அழைத்துக் கொண்டு திருக்கயிலம்பதி சென்றனர். திருக்கயிலாயத்தில் நந்தி தேவர் வேத்திரப் படை தாங்கி விடையவர் திருச் சந்நிதியில் நின்று மகிழ்வாராயினார்.

அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லாம் முதற்குரு நாதனாகி
பங்கயந் துளவம் நாறும் வேத்திரப் படை பொறுத்த
செங்கையெம் பெருமான் நந்தி சீரடிக் கமலம் போற்றி.

செய்திச் சுருக்கம்

இந்து சமய இளைஞர் மன்றம்

ஸ்ரீ சங்கர ஜெயந்தி விழா

இராயப்பேட்டைப் பகுதியில் உள்ள புதுபாக்கம் கிளை இந்து சமய இளைஞர் மன்றத்தினர் கிளையின் 5ஆம் ஆண்டு விழாவையும், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் 84-வது ஜயந்தி விழாவையும் கடந்த 10—7—1977 ஞாயிறன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினர்.

காலையில் அருகில் உள்ள ஸ்ரீ செல்வ விநயகர் ஆலயத்தில் அபிஷேகமும், ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் திருவுருவப் படத்திற்கு அர்ச்சனையும், வேத பாராயணமும் நடைபெற்றன. நன்பகலில் நூற்றுக்கணக்கான ஏழைகளுக்குப் ''பிடி அரிசித் திட்டத்தின்''கீழ் அன்னதானம் செய்யப்பட்டது.

பிற்பகலில் ஸ்ரீ வேணுகோபால சுவாமி அரி பக்த ஜன சபை மண்டபத்தில் திருவல்லிக்கேணிக் கிளை பகவான் ஸ்ரீ சத்ய ஸாயி பஜனை மண்டலியினர், மற்றும் சென்னையிலுள்ள பல்வேறு கிளை இந்து சமய மன்றத்தினரால் பஜனையும், பக்திப் பாடல்களும் பாடப்பெற்றன. அதனைத் தொடர்ந்து மாலையில் டாக்டர் கே. ஏ. பிள்ளை அவர்கள் தலைமையில், ''தியாக பூமி'' பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாசன், எம்.ஏ., பி.டி., அவர்களால், பகுதியிலுள்ள பல்வேறு ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பள்ளிச் சிறுவர் சிறுமியர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்பெற்றன. மன்றத்தின் தலைவர் திரு ஏ. சுந்தரராமன் அவர்கள் மன்றம் துவக்கப்பெற்ற தினத்திலிருந்து இதுநாள் வரை ஆற்றப்பெற்ற பணிகள் குறித்து விவரமாக எடுத்துரைத்தார். திரு ஆர். சாயிராம், செயலாளர் அவர்களை விழா சிறப்புற நடைபெறத் தக்க ஏற்பாடுகளைச் செவ்வனே செய்திருந்தார்.

இரவு சுந்தரம் பார்ட்டியாரின் விசேஷ நாதஸ்வர இன்னிசை, மற்றும் புதுக்கோட்டை ஸத்குரு ஸ்ரீ கோபாலகிருஷ்ண பஜனை மண்டலி இளைஞர்களின் ஆனந்த நர்த்தன திவ்யநாம பஜனையுடன், நன்கு அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் ஸ்ரீ ஜக்த்குரு அவர்களின் பெரிய அளவு திருவுருவப் படம், புதுப்பாக்கம் பகுதி முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

மேற்படி விழாவிற்குப் பகுதியிலுள்ள பொதுமக்களும், மற்றும் சென்னை கிளைகள், செங்கற்பட்டு கிளை சமய மன்றத்தினர் ஆகியோரும், பெருமளவில் வருகை புரிந்தனர்.

திருத்தணிகைத் தல விளக்கம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

(1) இருப்பிடம்:

திருத்தணிகை என்னும் புகழ்மிக்க திரு முருகன்ன தலம், செங்கற்பட்டு மாவட்டத்தில், சென்னையிலிருந்து பம்பாய் செல்லும் இருப்புப் பாதை வழியில், அரக்கோணத்திற்கு வடக்கே 13 கிலோமீட்டர் தொலைவிலும், சென்னையிலிருந்து 84 கிலோமீட்டர் தொலைவிலும் உள்ளது. இத்தலம், ''தொண்டை நாடு'' என்று வழங்கும் பகுதியில் உள்ளதாகத் தமிழ் நூல்கள் கூறும்.

தொண்டை நாட்டிற்குத் தலைநகரமாகிய காஞ்சிபுரம் தெற்கிலும்; விரிஞ்சிபுரம்—வள்ளிமலை—சோளிங்கபுரம் மேற்கிலும்; திருவாலங்காடு கிழக்கிலும்; திருக்காளத்தி—திருப்பதி வடக்கிலும் சூழ்ந்திருக்க, அவற்றிற்கு மத்தியில் நடுநாயகமாகத் திருத்தணிகைத் தலம் அமைந்து விளங்குகின்றது.

பழைய தமிழ் நூல்கள் ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்'' என்று, திருவேங்கடம் என்னும் திருப்பதியைத் தமிழ் நாட்டின் வடக்கு எல்லையாகக் கூறியிருக்கின்றன. ஆனல், இப்போது தமிழ் நாட்டின் வடக்கு எல்லைத் தலமாகத் திருத்தணிகையே சிறந்து விளங்குகின்றது.

முருகப் பெருமான் தேவர்களின் துயரம் நீங்கும் பொருட்டுச் சூரபதுமனுடன் செய்த போரும், வள்ளியம்மையை மணந்து கொள்ள வேடர்களுடன் விளையாட்டாக நிகழ்த்திய சிறு போரும் முடிந்து, தணிந்து அமர்ந்த தலம் ஆதலின் இதற்குத் தணிகை எனப் பெயரமைந்தது. தேவர்களின் அச்சம் தணிந்த இடம்; முனிவர்கள் காம வெகுளி மயக்கங்களாகிய பகைகள் தணியும் இடம்; அடியார்களின் துன்பம் கவலை பிணி வறுமை ஆகியவற்றைத் தணிக்கும் இடம் ஆதலாலும், இதற்குத் தணிகை என்று பெயரமைந்தது.

''திருத்தணிகை மலைமேலே குமார தேவன்
திருக்கொலுவீற் றிருக்கும்அதன் பொருளைக் கேளீர்!
திருத்தணிகை என்பதிங்குப் பொறுமை யின்பேர்;
செந்தமிழ்கண் டீர்பகுதி, தணிகை எனும்சொல்;
பொருத்தமுறும் தணிகையினுற் புலமை சேரும்;
பொறுத்தவரே பூமியினை ஆள்வார் என்னும்
அருத்தம்மிகு பழமொழியில் தமிழில் உண்டாம்;
அவனியிலே பொறையுடையான் அவனே தேவன்.''

என்று தேசீய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பாடியிருப்பதும், இங்கு நாம் உணர்ந்து இன்புறுதற்குரியது. தணிகை என்னும் சொல்லுக்குப் பொறுத்தல் (பொறை) என்பதும் ஒரு பொருளாகலின், ''அடியவர்களின் பிழைகளையும் பாவங்களையும் பொறுத்து அருள்புரியும் தலம், திருத்தணிகை'' என்று கொள்ளுதலும் பொருந்தும்.

(2) திருத்தணிகை நகர்:

திருத்தணிகை, ஒரு சிறிய ஆனல் சிறந்த நகரம். நகருக்கு மிக அருகிலேயே, திருத்தணிகை இருப்புப்பாதை நிலையம் உள்ளது. இங்கு இருப்புப்பாதை தெற்கு வடக்காக அமைந்திருக்கின்றது. நகருக்கு வடக்கே நந்தியாறு என்னும் சிற்ருறு ஒடுகின்றது. இருப்புப் பாதைக்கு மேற்கிலும், கிழக்கிலும், நகர் பரவியுள்ளது. இருப்புப் பாதையின் கிழக்கே அரசு அலுவலகங்களும், அஞ்சலகமும், உயர்நிலைப்பள்ளியும் உள்ளன. நகரின் கிழக்குப் பகுதியாகிய இதற்குக் ''கீழ்த் திருத்தணி'' என்று பெயர். இருப்புப் பாதையின் மேற்குப் பக்கத்தில் கடைத்தெரு முதலியன உள்ளன.

நகருக்கு வடக்கே திருப்பதிக்குப்போகும் பாதையில் : வடமேற்கே சோளிங்கபுரம் — திருவள்ளூர்—சென்னை போகும் பாதையும் ; தெற்கே அரக்கோணம்—காஞ்சிபுரம் போகும் பாதையும் உள்ளன. சோளிங்கபுரம் போகும் பாதைக்கு வடக்கே, இருப்புப் பாதைக்கு மேற்கே, ஏரி ஒன்று இருக்கின்றது. நகருக்குத் தெற்கே அரக்கோணம் போகும் பாதைக்கு மேற்கில், தாமரைக் குளம் என்னும் நல்ல தண்ணீர்க் குளம் ஒன்று உள்ளது. இதிலிருந்துதான் இந்நகருக்குக் குழாய்நீர் கிடைக்கின்றது. திருத்தணிகை வட்டத்திற்குத் திருத்தணிகையே தலைநகரம். திருத்தணிகை ஓர் ஒன்றியம். திருத்தணிகை, மடம் கிராமம், நல்லான்குளம், அமிர்தபுரம் (மேற்குத் திருத்தணிகை) என்னும் சிற்றூர்கள், இந்த ஒன்றியத்தில் அடங்கியுள்ளன. மக்கள் தொகை சுமார் 20,000. நகருக்குக் குழாய் நீர், மின் விளக்கு வசதிகள் உள்ளன.

திருத்தணிகையில் அந்தந்த வகுப்பினர் தங்குவதற்கு, வசதிமிக்க சத்திரங்கள் சுமார் 150 உள்ளன. கிருத்திகை முதலிய சிறப்பு நாட்களில், சத்திரங்கள் நிரம்பியிருக்கும். கலியாணம், உபநயனம், ஏழைகளுக்கு உணவிடு

தல் முதலிய நிகழ்ச்சிகள், இச்சத்திரங்களில் நடைபெறும். விழா இல்லாத வெற்றுக் காலங்களில், இச்சத்திரங்களில் பயணிகள் தங்குவதற்கு இடம் தாராளமாகக் கிடைக்கும். மலை நிலமாதலின், திருத்தணிகை சிறிது வெப்பம் மிக்க இடமாகும். ஆயினும், நல்ல கறிகாய், பால், தயிர், நெய் முதலிய பொருள்கள் இங்குத் தாராளமாகக் கிடைக்கும். ஆதலால், மக்கள் வசிப்பதற்குத் தகுந்த வசதிகள் உள்ள ஊர், திருத்தணிகை என்று சொல்லலாம். இங்குள்ள திருமுருகன் திருக்கோயிலின் சிறப்பே, இவ்வூருக்குப் பல்லாற்றாலும் பெருமை தருகின்றது.

(3) திருத்தணிகை மலை:

இத்தலத்தில், முருகப்பெருமான் மலை மீது எழுந்தருளி வீற்றிருக்கின்றார். ஒரு தனி மலையின் சிகரத்து உச்சியில், கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. முருகன் எழுந்தருளி விளங்கும் மலையின் இருபுறங்களிலும், மலைத் தொடர்ச்சிகள் பரவிப் படர்ந்துள்ளன.

வடக்கே உள்ள மலை சிறிது வெண்ணிறமாக இருப்பதனால், ''பச்சரிசி மலை'' என்றும், தெற்கே உள்ள மலை கருநிறம் வாய்ந்திருப்பதனால், ''பிண்ணாக்குமலை'' என்றும் கூறப்படுகின்றன.

இருப்புப் பாதை நிலையத்திலிருந்து தென்மேற்கே சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் மலையடிவாரம் உள்ளது. 'சரவணப் பொய்கை' என வழங்கும் புகழ்மிக்க ''குமார தீர்த்தம்'' என்னும் பெரிய திருக்குளம் மலையடிவாரத்தில் உள்ளது. யாத்திரிகர்களும் பக்தர்களும் இதிலேயே பெரும்பாலும் நீராடுவது வழக்கம். இத் தீர்த்தத்தைச் சுற்றிப் பல மடங்கள் உள்ளன. அதனால் இப்பகுதிக்கு ''மடம் கிராமம்'' என்று பெயர் வழங்கும். திருக்குளத்தின் தென்மேற்கு மூலையில் மலையடிவாரம் இருக்கின்றது.

திருக்குளத்தின் கிழக்குக் கரையினின்று மலையைப் பார்த்தால், வளைவாக இடப்பெற்ற ஒரு மாலை போலவும்; மூவுரு எடுத்த ஒரு பரம்பொருள் போலவும்; மூன்று மலைகள் விளங்கும். அவற்றின் மத்தியில், திருமுருகன் திருக்கோயில் நடுநாயகமாகச் சிறந்தோங்கி விளங்குகின்றது. அக்காட்சி மிகவும் அழகு வாய்ந்து திகழும். அதனால் அருணகிரிநாதர் இதனை ''அழகு திருத்தணி மலை'' என்று புகழ்ந்து போற்றியிருக்கின்றார். திருமுருகனுக்கு இணையான தெய்வங்கள் எதுவும் இல்லாமை போலவே, திருத்தணிகைக்குச் சமமான தலமும் வேறெதுவும் இல்லை எனலாம்.

திருவி ளங்கிய வனப்பினில்
அறிவினில் திறத்தினில் அருள்தன்னில்
ஒருவர் தங்களை உயர்த்தமுன்
முருகனை உவமையாக் குவர்; அன்னான்
பொருவில் வள்ளியொடு ஆடிடம்
ஆகிய புகழ்த்தணி கையும், யாங்கும்
ஒரு ந கர்க்குஅணி உயர்த்தமுன்
உவமையா உரைப்பதால் எவராலும்

-தணிகைப்புராணம்.

(4) தணிகைக்கோயிலின் தொன்மைச் சிறப்பு:

திருத்தணிகை முருகன் திருக்கோயில் மிகவும் தொன்மை வாய்ந்தது. முருகனின் அடியார்களுள் தலைசிறந்தவரும், விஜயநகர அரசர்களுள் ஒருவனாக விளங்கியிருந்த பிரபுட தேவராஜன் (கி.பி. 450) என்னும் அரசனின் காலத்தவரும் ஆகிய அருணகிரிநாதர், 63 திருப்புகழ்ப் பாடல்களால் இத்தலத்தினைப் பெரிதும் போற்றித் துதித்துள்ளார். அதனால் 600 ஆண்டுகளுக்கும் முன்னரே, இத்தலமும் கோயிலும் புகழோங்கித் திகழ்ந்திருந்தன என்பது திண்ணம்.

அன்றியும், இற்றைக்குச் சுமார் 900 ஆண்டுகளுக்கும் முன்னர் வாழ்ந்த கச்சியப்ப சிவாசாரியர், தமது கந்தபுராணத்தில், ''மலர்களில் தாமரை மலர் போலவும், நதிகளில் கங்கை நதி போலவும், தலங்களில் காஞ்சிபுரம் போலவும், மலைகளிலெல்லாம் சிறந்தோங்கித் திகழ்வது திருத்தணிகையே'' என்றும்; ''உலகில் மலைகள் பல இருப்பினும், சிவபெருமான் கயிலாய மலையையே காதலித்தது போல, முருகன் திருத்தணிகை மலையினையே பெரிதும் விரும்பி, அங்கு மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கின்றான்'' என்றும்; இதனைச் சிறப்பித்துப் புகழ்ந்துள்ளார்.

''விரை இடங்கொளும் போதினுள்
மிக்கபங் கயம்போல்,
திரை இடங்கொளும் நதிகளிற்
சிறந்தகங் கையைப்போல்,
தரை இடங்கொளும் பதிகளில்
காஞ்சியந் தலம்போல்,
வரை இடங்களிற் சிறந்தது, இத்
தணிகைமால் வரையே'' (1)

''மந்த ரத்திலும் மேருமால்
வரையினும் மணிதோய்
கந்த ரத்தவன் கயிலையே
காதலித் ததுபோல்,
சுந்த ரக்கிரி தொல்புவி
தனிற்பல எனினும்,
இந்த வெற்பினில் ஆற்றவும்
மகிழ்ச்சியுண்டு எமக்கே'' (2)

—கந்தபுராணம்.

மேலும், இங்கே அபராஜிதவர்மன் (கி.பி. 875—893) என்னும் பல்லவ மன்னனின் கல்வெட்டும், முதலாம் பராந்தகச் சோழன் (கி.பி. 907—953) காலத்துக் கல்வெட்டும் காணப்படுவதனால், இற்றைக்கு 1,000 ஆண்டுகளுக்கு முன்னரேயே இத்தலம் பல்லவர் சோழர் முதலிய தமிழ் நாட்டுப் பேரரசர்களால் போற்றப்படும் பெருமை பெற்றிருந்த செய்தி தெளிவுறத் தெரிகின்றது.

இற்றைக்குச் சுமார் 1,300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த திருநாவுக்கரசர் திருப்புறம்பயம் தலத்துத் திருத்தாண்டகத்தில் ''கல்மலிந்தோங்கும் கழுநீர்க் குன்றம்'' என்று திருத்தணிகையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

தேவேந்திரன் இங்கு முருகப் பெருமானை நீலோற்பலம் என்னும் கழுநீர் மலர்கொண்டு பூசித்தான் என்பது தலவரலாறு. ஆதலின் ''கல்மலிந்தோங்கும் கழுநீர்க் குன்றம்'' என்று திருநாவுக்கரசர் இத்தலத்தையும், இத்தலத்தின் வரலாற்றையும் குறிப்பிட்டிருப்பது, பெரிதும் போற்றி உணர்ந்து மகிழ்தற்குரியது. இதனால் சுமார் 1,500 ஆண்டுகளுக்கும் முன்னர், திருநாவுக்கரசருக்கும் முற்பட்ட மிகப் பழைய காலத்திலேயே, திருத்தணிகை புகழ்மிக்க பெருந்தலமாக விளங்கியிருந்திருத்தல் வேண்டும் என்னும் உண்மை புலனாகும்.

(5) தலத்தின் சிறப்பு :

தமிழ் நாட்டு மக்களால் பெரிதும் விரும்பிப் போற்றப்படும் தெய்வமாகத் திகழ்பவன், திருமுருகன். கலியுகத்துக் கண்கண்ட தெய்வம் என விளங்கி அடியார்களுக்கெல்லாம் திருமுருகன் அருள்செய்து வருகின்றான். முருகன் என்றதுமே தமிழ் மக்களின் உள்ளமெல்லாம் உருகும். முருகன்பால் தமிழ் மக்களுக்கு எல்லையில்லாத பக்தியும் அன்பும் உண்டு. தமிழ் நாட்டின் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் பெரும்பாலும் முருகனுக்குக் கோயில்கள் அமைந்து இருக்கும். முருகனுக்குரிய கிருத்திகை, சஷ்டி முதலிய சிறப்பு நாட்களில், லட்சக்கணக்கான மக்கள் விரதமிருந்து முருகனை வழிபட்டு மகிழ்வார்கள். முருகன் கோயில்கள் எல்லாம் சிறந்த பிரார்த்தனைத் தலங்களாக விளங்கும். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கிருத்திகை முதலிய சிறப்பு நாட்களில் முருகன் திருக்கோயில்களில் பெருந்திரளாகக் கூடி வணங்கி மகிழ்வர். தொன்னெடுங்காலமாக முருகனைத் தமிழ் மக்கள் மிகவும் அன்புடன் பணிந்து போற்றி வணங்கி வருகின்றனர். இற்றைக்கு 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியம் என்னும் பண்டைப் பெருந் தமிழ் நூலிலேயே, முருகன் வழிபாடு பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

மேலும் சங்ககாலப் புலவராக, 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த நக்கீரர் என்னும் நல்லிசைப் புலவர் பெருமான் முருகனைப்பற்றித் திருமுருகாற்றுப்படை என்னும் சிறந்த துதி நூலைப் பாடியிருக்கின்றார். அதன் கண் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை, என்னும் ஆறு திருத்தலங்களும், முருகனின் ஆறுபடை வீடுகள் என்று சிறப்பாகப் போற்றப்பெறும். இவைகளுள் குன்றுதோறாடல் என்பது, முருகன் எழுந்தருளி விளங்கும் மலைத்தலங்கள் எல்லாவற்றையுமே குறிக்குமாயினும், திருத்தணிகைத் தலத்தையே தனிச் சிறப்பாகக் குறிக்கும் என்று அறிஞர்கள் கருதுவர்.

முருகப் பெருமான், தன் கிரியா சக்தியாகிய தெய்வானையைத் திருப்பரங்குன்றத்தில் திருமணம் செய்து கொண்டாற்போல, திருத்தணிகையில் தன் இச்சா சக்தியாகிய வள்ளியம்மையைத் திருமணம் செய்து கொண்டு மகிழ்ந்து இனிது வீற்றிருந்தருள்கின்றார். திருத்தணிகையின் சிறப்பிற்கு இதுவே சிறந்த பெருங் காரணமாகும். பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், வடலூர் இராமலிங்க அடிகள், கந்தப்பைய தேசிகர், கச்சியப்ப முனிவர், கச்சியப்ப சிவாசாரியர், அருணகிரிநாதர் முதலிய அருட்பெருஞ் சான்றோர்கள் பலரும் திருத்தணிகை முருகனைப் பெரிதும் புகழ்ந்து துதித்துள்ளனர்.

பல லட்சக்கணக்கான மக்கள், திருத்தணிகை முருகனைத் தம் குலதெய்வமாகக் கொண்டு, வழிபட்டு நலம்பெற்று வருகின்றனர். ஆடிக் கிருத்திகை, தைக் கிருத்திகை, மாசிக் கிருத்திகை முதலிய சிறப்பு நாட்களில், பல லட்சக்கணக்கான பக்தர்கள் பூக்காவடி, பால்காவடி ஆகிய பிரார்த்தனைகளை இங்கு முருகனுக்குச் செலுத்துகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாத இறுதியிலும், சனவரி மாத முதலிலும், முருகனடியார்கள் பல லட்சக் கணக்கில் பெருந்திரளாகக் கூடுகின்றனர்.

''திருப்புகழ் ஓதும்
கருத்தினர் சேரும்
திருத்தணி மேவும் பெருமாளே''

என்று அருணகிரிநாதர் பாடியதற்கு ஏற்ப, நூற்றுக்கணக்கான திருப்புகழ்ச் சபையினர், திருப்புகழ்ப் பாடல்களைப் பாடிக்கொண்டும், முருகனின் திருநாமங்களை முழங்கிக் கொண்டும், பல லட்சக்கணக்கான பக்தர்கள் மலை மீதேறிச் சென்று முருகனை வழிபட்டும் மகிழும் காட்சி, பக்தியில்லாதவர்களுக்கும் பக்தியைவிளைவித்துப் பரவசம் உண்டாக்கும். அவரவர்களும் முருகன் அருளால் தங்கள் வாழ்க்கையில் பல நலங்களை அனுபவித்துக் கண்டு உணர்ந்திருக்கின்றார்கள். அங்ஙனம் முருகனின் அருளால் தம் பிணிகள் தீர்ந்தும், கவலைகள் ஒழிந்தும், துன்பங்கள் நீங்கியும், பற்பல நன்மைகளை எய்தியும், முருகனின் அருளை உண்மையாகவே உணர்ந்துகொள்ளப்பெற்றிருப்பதனால்தான், நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள், இக்கோயிலுக்கு வந்து முருகனை வழிபட்டு மகிழ்ந்து செல்லுகின்றனர். நம் தமிழ் நாட்டிலுள்ள பல்லாயிரக் கணக்கான கோயில்களில் மிகவும் புகழோங்கி, முதல் வரிசையில் முன்னணியில் சிறப்புற்று நிற்கும் திருக்கோயில்களில், திருத்தணிகையும் தலை சிறந்ததொன்றாகத் திகழ்ந்து வளர்ந்து வருகின்றது.

(6) தல நூல்கள் :

திருத்தணிகையின் சிறப்பினைப் புகழ்ந்து, கச்சியப்ப சிவாசாரியர் தமது கந்தபுராணத்திலும், கச்சியப்ப முனிவர் தமது தணிகைப் புராணத்திலும், கந்தப்பதேசிகர் தணிகாசல புராணத்திலும் சிறப்பாகப் பாடியுள்ளனர். அருணகிரிநாதர் இத்தலத்திற்கு 63 திருப்புகழ்ப் பாடல்கள் அருளிச் செய்துள்ளார். வடலூர் இராமலிங்க அடிகளார் தமது திருவருட்பாவில் ஐந்தாம் திருமுறையில் தணிகையைப் பற்றிப் பாடல்கள் பல பாடியுள்ளார். கந்தப்பதேசிகர் தம் திருத்தணிகைச் சந்நிதி முறையில், பிள்ளைத் தமிழ் கலம்பகம் உலா அநுபூதி முதலிய பல

பிரபந்தங்களைப் பாடியுள்ளார். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முத்துசுவாமி தீட்சிதர் பல அரிய இசைக் கிருதிகளைத் தணிகை முருகன் மீது இயற்றியிருக்கின்றார். தணிகையாற்றுப் படை, தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி என்பனவும், கச்சியப்ப முனிவரால் இயற்றப்பட்டுள்ளன. அருணகிரிநாதரின் கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு முதலிய நூல்களாலும் திருத்தணிகையின் சிறப்பு, போற்றித் துதிக்கப்பட்டுள்ளது.

(7) வழிபட்டோர் :

சிவபிரான் : திருத்தணிகையில் முருகப் பெருமானைத் தியானித்துச் சிவபெருமான் பிரணவப் பொருள் உபதேசிக்கப் பெற்றார். முருகனாகிய குழந்தை பிரணவப் பொருளை விளக்கிய திறனைக் கேட்டு, ''மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம், மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'' என்றபடி, தந்தையாகிய சிவபெருமான் பெருமுழக்கம் செய்து சிரித்து மகிழ்ந்தருளினார். அதனால் அவருக்கு இங்கு வீரஅட்டகாசர் என்று பெயராயிற்று. மந்தகாசம்—புன்முறுவல். அட்டகாசம்—ஒலிமிக்க பெருமுறுவல். சிவபெருமான் பிரணவ உபதேசம் பெற்று வீரஅட்டகாசம் புரிந்தருளிய கோயில், ஊருக்கு வடகிழக்கே நந்தியாற்றுக்கு வடகரையில் உள்ளது. அக்கோயில் ''வீராட்டகாசம்'' என்றும், ''வீரட்டானேசுவரர் கோயில்'' என்றும் வழங்கும். சிவபிரானுக்கு உபதேசம் செய்த முருகன் திருக்கோயில் வீராட்டகாசர் கோயிலுக்கு எதிரில் நந்தியாற்றின் தென்கரையில் உள்ளது. இது ஆறுமுகசாமி கோயில் என வழங்குகின்றது. இங்கிருந்த ஆறுமுகசுவாமியே இப்பொழுது மலைமீதுள்ள உற்சவமூர்த்தி என்று செவிவழிச் செய்தி கூறுகிறது.

திருமால்: திருத்தணிகையில் முருகனை வழிபட்டு, தாரகாசுரனால் கவரப்பட்ட தமது சக்கரம் சங்கு முதலியவற்றை முருகனிடமிருந்து திரும்பப் பெற்றார். அவர் உண்டாக்கிய விஷ்ணு தீர்த்தம் மலையின்மேல், கோயிலுக்கு மேற்கே உள்ளது.

இராமபிரான்: இங்கு முருகனை வழிபட்டு இராவணனை வெல்லும் ஆற்றலையும் அருட்படைகளையும் பெற்றதுடன், இராவணனை வென்ற பிறகு வந்து மீண்டும் முருகனைப் பூசித்துச் சிவஞானம் பெற்றார். இராவணனை வென்று விஜயம் கொண்டு வந்ததனால், இங்கு உள்ள இராமபிரானுக்கு விஜயராகவப் பெருமாள் என்று பெயரமைந்தது. விஜயவல்லித் தாயார் உடனுறை விஜயராகவப் பெருமாள் கோயில், ஆறுமுக சுவாமி கோயிலுக்குத் தெற்கில் உள்ளது.

பிரமதேவர்: திருத்தணிகையில் பிரமதேவர் முருகப் பெருமானைப் பூசித்துப் படைப்புத் தொழில் செய்யும் ஆற்றலைப் பெற்றார். மற்றும் சூரபதுமனால் கவரப்பட்ட தமது செல்வங்களையும் முருகன் அருளால் திரும்பப் பெற்றார். கலைமகளும் இத்தலத்தில் முருகனைப் பூசித்தனள். கிழக்கே மலையடிவாரத்திலிருந்து மலைமேல் ஏறிச் செல்லும் வழியில், பாதி தொலைவில் மலைப்படிகளை அடுத்து வடபக்கத்தில் பிரமதேவர் உண்டாக்கிய பிரமதீர்த்தம் இருக்கின்றது. இது 'பிரம சுனை' என வழங்கும். இதன் தென் கரையில், பிரமேசுவரர் கோயில் இருக்கின்றது.

இங்ஙனம் இத்தலத்தில் சிவபிரான் திருமால் பிரமதேவன் என்னும் மும்மூர்த்திகளும் வழிபட்டு உய்ந்த வரலாற்றுக் குறிப்பினை,

''சிலைமகள் நாயன்,
கலைமகள் நாயன்,
திருமகள் நாயன்:
தொழும் வேலா''

என அருணகிரிநாதர், தம் திருப்புகழில் (261) சிறப்புற எடுத்துப் பாடிப் போற்றியுள்ளார்.

இந்திரன் : சூரபதுமனால் தேவலோகத்திலிருந்து கவர்ந்துகொண்டு செல்லப் பெற்ற சங்க நிதி, பதும நிதி, காமதேனு, சிந்தாமணி கற்பகத் தரு முதலிய செல்வங்களை மீண்டும் பெறுவதற்காக, இந்திரன் முருகனை இங்குப் பூசித்தான். அவன் தணிகை மலைக்குத் தென்புறத்திலுள்ள ஒரு சுனையில் நீலோற்பல மலர்க் கொடியை நட்டு வளர்த்து, அதன் பூக்களைக் கொண்டு, காலை மாலை நண்பகல் என்னும் மூன்று வேளைகளிலும் முருகனைப் பூசித்தான். அதுபோது அவன் நிறுவி வணங்கிய விநாயகருக்குச் செங்கழுநீர் விநாயகர் என்று பெயர். அவனால் உண்டாக்கப் பெற்ற நீலோற்பல மலர்ச் சுனை 'இந்திர நீலச் சுனை' என்னும் பெயர் பெற்ற தீர்த்தமாக மலைக்கோயிலின் தெற்கு வாயிலுக்கு நேராக இருக்கின்றது. இது 'கல்லார தீர்த்தம்' என வழங்குகின்றது. இத் தீர்த்தத்தின் நீர்தான் சுவாமியின் திருமுழுக்கிற்கும், திருமடைப்பள்ளிக்கும், பூசை செய்வதற்கும் தனிச் சிறப்பாகப் பயன்படுத்தப் படுகிறது. அதனால் இத்தீர்த்தத்தைத் தொலைவிலிருந்து தொடுதல் வேண்டுமே யன்றி, வேறு எவ்வகையிலும் நாம் பயன்படுத்துதல் ஆகாது. இந்திரனுடன் தேவர்கள் யாவரும் வந்து வழிபட்ட செய்தியை,

''இமையவர் பணி
திருத்தணிப் பொற்பதி'' (303)

''அண்டர்கள்தாம் மெச்சிய
நீள் தணிகை யம்பதி'' (311)

என வரும் திருப்புகழ்ப் பாடற் பகுதிகளால் யாவரும் இனிதறியலாம்.

திருநந்திதேவர்: பதி பசு பாசம் என்னும் இறை உயிர் தளை ஆகிய முப்பொருள் இயல்புகளைக் கூறும் சைவ சித்தாந்த நுட்பங்களை, இங்கு முருகனை வழிபட்டுத் திருநந்திதேவர் அறிவுறுத்தப் பெற்றார். அவர் பொருட்டு முருகப் பெருமான் வரவழைத்த ''சிவ தத்துவ

அமிர்தம்'' என்னும் நதியே, இப்பொழுது நந்தி யாறு என வழங்குகின்றது. முருகனின் அருளைப் பெற நந்தி தேவர் யோகம் புரிந்த குகை ''நந்தி குகை'' என வழங்கப் பெறுகின்றது.

வாசுகி நாகம்: தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்தபோது, மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்னும நாகத்தினை நாணாகவும் கொண்டு கடைந்தனர். அங்ஙனம் கடைந்த போது வாசுகி நாகத்தின் உடலில் பல வடுக்களும், புண்களும், தழும்புகளும் ஏற்பட்டுப் பெரிதும் துயர் விளைவித்தன. ஒரு சுனையில் நாடோறும் முறையாக நீராடி, முருகனை வழிபட்டு, வாசுகி நாகம் அத் துயரங்களினின்று நீங்கி உய்ந்தது. அது நீராடிய சுனை ''நாக சுனை'' என வழங்கி வருகின்றது. ஆதிசேடனும் இவ்வாறு வழிபட்டு அருள் பெற்றான். ஆதி சேட தீர்த்தம் விஷ்ணு தீர்த்தத்திற்கு மேற்கே மலைப் பாதைக்குத் தென்புறம் இருக்கின்றது.

அகத்திய முனிவர்: இங்கு முருகனை வழிபட்டு அகத்திய முனிவர் முத்தமிழ்ப் புலமையும், சிவஞானத் தெளிவும் பெற்றார். அவர் உண்டாக்கிவைத்த அகத்திய தீர்த்தம் ஆதிசேட தீர்த்தத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது.

நாரத முனிவர்: நாரத முனிவர் ஞானத்திலும் பக்தியிலும் சிறந்து விளங்குபவராயினும், அவருக்குச் சில ஐயப்பாடுகள் இருந்து வந்தன. அவ் ஐயப்பாடுகள் நீங்கி மெய்யுணர்வு பெறுவதற்காக நாரதர் இங்கு முருகனை வழிபட்டு அருள் பெற்றார். அவர் ஏற்படுத்திய நாரத தீர்த்தம் அகத்தியர் தீர்த்தத்திற்குக் கிழக்கே யுள்ளது.

ஏழு முனிவர்கள்: சப்த ரிஷிகள் என்று கூறப்பெறும் வசிட்டர் முதலிய ஏழு முனிவர்கள் இங்கு முருகனைப் பூசித்தனர். அவர்கள் பூசித்த இடம் மலையின் தென்கீழ்த் திசையில் உள்ளது. அவர்கள் அமைத்த ஏழு சுனைகளும், கன்னியர் கோயிலும் இங்கு உள்ளன. இந்த இடம் இப்போது ''ஏழு சுனை'', ''கன்னியர் கோயில்'' என வழங்குகின்றது. அடர்ந்த சோலைகளால் சூழப்பெற்று, பசுமையும் தண்மையும் நிறைந்து, வெயில் நுழையாமல் அமைதி மிகுந்த இடமாகத் திகழ்கின்றது. தவத்திற்கும் தியானத்திற்கும் ஏற்ற இடமாக இது விளங்குகின்றது.

''தவமுனிக் கணத்தவர்
மதுமலர் கொடுபணி
திருத்தணிப் பதி''

என்று, அருணகிரிநாதர் தம் திருப்புகழில் (266) ஏழு முனிவர்கள் பூசித்ததைக் குறித்துப் புகழ்ந்து பாடியுள்ளார்.

குமாரக் கடவுள்: குமாரக் கடவுள் என்னும் முருகப் பெருமானே இங்குத் தம் தந்தையாகிய சிவபெருமானைப் பூசிக்க விரும்பினார். அதனால் தணிகைமலையின் மீது தாம் இருக்கும் இடத்திற்கு வடகிழக்குப் பக்கத்தில் ஆபத்சகாய விநாயகர் என்னும் மூர்த்தியை நிறுவி முதற்கண் வழிபட்டு, பின்னர் சிவ லிங்கத் திருமேனியை அமைத்து முறையே வழிபட்டார். அப்போது சிவபெருமான் சூரபதுமனை வெல்வதற்கு ''ஞான சக்தி'' என்னும் சிறந்த வேற்படையை முருகனுக்கு வழங்கியருளினர். அதனால் இங்குள்ள முருகனுக்கு ''ஞானசக்தி தரன்'' என்றும், சிவபெருமானுக்குக் ''குமாரேசுவரர்'' ''குமாரலிங்கம்'' என்றும் பெயர்கள் ஏற்பட்டன. குமாரலிங்கேசுவரர் சந்நிதி இரண்டாவது உட்பிராகாரத்தில் வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. குமாரேசுவரர் ஆகிய சிவபெருமானுக்கு அபிடேகம் செய்யக் குமாரக் கடவுள் வரவழைத்த கங்கா தீர்த்தமே ''குமாரதீர்த்தம்'' எனப்படும். சரவணப் பொய்கைஎன்பதுமலையடிவாரத்திலுள்ளபெரிய திருக்குளமாகும். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கச்சியப்ப முனிவர் காலத்தில் கூட, சரவணப் பொய்கை என்னும் இத்திருக் குளம் மிகச் சிறப்பாகப் போற்றப்பெற்றிருந்தது என்னும் உண்மை,

''எத்துயர்த் திரளும்
அத்தினத்து அகற்றும்
சரவணப் பொய்கைத்
தடம்புனல் துளைக''

என்று தாம் பாடியருளிய தணிகையாற்றுப் படையில், சரவணப் பொய்கை என்னும் இந்தக் ''குமாரதீர்த்தம்'' ஆகிய திருக்குளத்தைப் புகழ்ந்திருக்கக் காணலாம்.

(8) வழிபடும் முறை:

திருத்தணிகைக்குச் செல்லும் பக்தகோடிகள், மலையடிவாரத்தில் உள்ள குமாரதீர்த்தம் என்னும் சரவணப் பொய்கைத் திருக்குளத்தில் முதற்கண் நீராடி, தூய்மை செய்துகொண்டு, தோய்ந்துலர்ந்த ஆடைதரித்து, திருநீறு உருத்திராக்கம் முதலிய சிவச் சின்னங்களை அணிந்து கொண்டு, பக்தியுடன் மலை மீது ஏறுதல் வேண்டும். மலையேறும்போது திருப்புகழ்ப் பாடல்களை இயன்ற அளவு இசையுடன் உருக்கமாகப் பாடிக்கொண்டு, படியேறுதல் வேண்டும். மலை உச்சியை அடைந்ததும், கிழக்குப் பிராகாரத்தில் உள்ள கொடிக் கம்ப விநாயகரையும் ஐராவத யானையையும் தரிசித்துக்கொண்டு, பின்னர்த் தெற்குப் பிராகாரத்திலுள்ள இந்திர நீலச் சுனையைத் தரிசித்து, அதன்பின் கோயிலின் உள்ளே சென்று ஆபத்சகாய விநாயகரையும், அருகில் உள்ள வீரவாகு முதலிய நவவீரர்களையும், குமாரலிங்கேசுவரரையும் வணங்கிக்கொண்டு, பின்னர் மூலத்தானத்திலுள்ள, ஞானசக்திதரர் என்னும் தணிகை முருகனையும், வள்ளி தெய்வயானை யம்மையரையும் முறையே வழிபடுதல் வேண்டும். சந்நிதிகளிலுள்ள தெய்வத் திருவுருவங்களை நன்ருகத் தரிசித்து, மனத்தில் பதித்துக் கொண்டு மகிழ்தல் வேண்டும். சந்நிதிகளில் திருநீறு குங்கும பிரசாதங்கள் வழங்கப்படுவதுடன், இங்குத் திருமேனிப்பூச்சு என்னும் சந்தனம் முருகன் சந்நிதியில் சிறப்பாகவழங்கப்

படும். தணிகை முருகனின் திருவுருவத்தை ஊன்றி நோக்கினல் மார்பில் சிறிது பள்ளமாக இருக்கும். தாரகாசுரன் திருமாலிடமிருந்து பறித்துக் கொண்ட சக்கரத்தை, முருகன் அவனை வென்றபோது தாம் எடுத்துத் திருமாலுக்குப்பின்னர் வழங்குவதற்காக அதனைச்சிறிது காலம் தம் மார்பில் அணிந்துகொண்டார். அதன் அடையாளமாகவே, தணிகை முருகனின் திருமார்பில் ஒரு சிறு பள்ளம் ஏற்பட்டு உள்ளது. அதன்மீது அணிவிக்கப்பெறும் சந்தனமே அடியவர்களுக்கு அருட்கொடையாக வழங்கப் பெறுகின்றது. இது, திருமேனிப் பூச்சு (ஸ்ரீபாத ரேணு) எனப்படும். இச் சந்தனத்தை உட்கொள்ளும் பக்தர்கள் நோய்கள் பலவும் தீரப்பெறுவர்.

''தாரகன் விடுப்பத் தனதுரம் பதித்த
சக்கரம் தனைஅகழ்ந்து அரிக்குச்
சீர்பெற அளித்த நாள்முத லாகச்
செருத்தணி காசலற்கு இன்னும்
மார்பகம் குழிந்த திருவடை யாளம்
வயங்கியது; இவ்வுல கத்தின்
ஏர்பெற அதனைத் தெரிசனம் செய்தோர்.
இடர்ஒழிந் தின்பவீ டடைவார்''

—தணிகாசலபுராணம், கந்தப்பதேசிகர்.

(9) கல்வெட்டுக்கள் :

திருத்தணிகையில், மலைமேல் முருகன் கோயிலும், நந்தியாற்றின் வட கரையில் வீராட்டகாசர் கோயில், ஆறுமுகசுவாமி கோயில், விஜயராகவ சுவாமி கோயில் என்பவை உள்ளன. இவற்றில் இராஜகேசரிவர்மன் என்னும் முதலாம் இராஜராஜ தேவன் (கி.பி. 985—1014), பரகேசரிவர்மன் என்னும் இராஜேந்திர சோழதேவன் (கி.பி. 1012—1046—, விக்கிரம சோழன் (கி.பி. 1118-1133) மதுரை கண்ட கோப்பரிகேசரி வர்மன் (கி.பி. 907—965), விஜயஅபராஜித விக்கிரமவர்ம பல்லவன் (கி.பி. 875—895), வீரகம்பண உடையார் (சகம் 1288), வீரப்பிரதாப சதா சிவ தேவராயர் (சகம் 1471) என்னும் அரசர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. 1905ஆம் ஆண்டில் தொல்பொருள் துறையினர் இக்கல்வெட்டைப் படியெடுத்திருக்கின்றனர். திருவேங்கடம்என்னும் மேலத்திருப்பதிக்குச் செல்வோர், சென்று திரும்புவோர் ஆகிய யாத்திரிகர்களுக்கு இங்கு உணவு அளிப்பதற்காக நில தானங்கள் வழங்கப் பெற்றுள்ளன. வீராட்டகாசர் கோயிலை நம்பியப்பி என்பவர் ஒருவர் கட்டுவித்தார் என்று,

''திருந்து திருத்தணியில் செஞ்சடை ஈசர்க்குக்
கருங்கலாற் கற்றளியா நிற்க-விரும்பியே
நற்கலைகள் எல்லாம் நவின்றசீர் நம்பியப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து''

என்னும் கல்வெட்டு வெண்பா உணர்த்துகின்றது. இப்பாடலைப் 'பெருமானடிகள்' என்னும் பெயருடைய அபராஜிதவர்ம பல்லவன் (கி.பி. 875—895) பாடினன் என்று தெரிய வருகின்றது. இதனல் வீராட்டகாசர் கோயில் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று தெரியவருகிறது. திருத்தணிகை மலைமேலுள்ள கோயில், ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மேன்மலை நாட்டுத் திருத்தணியல் என்றும், அது குன்றவர்த்தனக் கோட்டத்தைச் சேர்ந்தது என்றும் இக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். கோயிலில் திருவிளக்கு எரிக்க ஒருவர் 12 ஆடுகள் வழங்கியுள்ளார். மற்றொருவர் 30 பசுக்கள் நன்கொடை அளித்துள்ளார். மற்றும் ஒருவர் 90 ஆடுகள் கொடுத்திருக்கின்றார். கோயிலுக்கு நிலதானங்கள் வழங்கியிருக்கின்ற நம்பியப்பி என்பவர் வீராட்டகாசர் கோயிலுக்கு 1,000 குழிநிலம் நன்கொடை வழங்கியிருக்கின்றார் என்பன போன்ற செய்திகள், இக்கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன.

(10) கோயிலின் அமைப்பு :

மலையடிவாரத்திலிருந்து கோயிலுக்குச் செல்லச் சுமார் 365 படிகள் ஏறுதல் வேண்டும். இப்படிகள் ஓராண்டின் 365 நாட்களைக் குறிக்கும் அடையாளமாகத் திகழ்கின்றன. படிகளின் உயரம் அளவாக இருப்பதனல், ஏறுவதற்குத் துன்பம் தோன்றுது. திருப்புகழ்ப் பாடல்களைப் பாடிக்கொண்டே, மலைமீது ஏறினல், நம் வினைகள் எளிதில் நீங்குவதுடன், மலைமீது ஏறுவதும், எளிதாக இருக்கும். பாதி மலையின் வலப் புறத்தில் ஒரு சுனை இருக்கும். அது பிரம சுனை எனப்படும். அதனைத் தரிசித்து விட்டு அங்குள்ள விநாயகர், பிரமலிங்கேசுவரர் இருவரையும் வணங்கிக் கொண்டு, மலை உச்சிக்குச் செல்லுதல் வேண்டும்.

மலை உச்சியை அடைந்ததும், தேர் வீதியாகிய கிழக்கு வெளிப் பிராகாரம் இருக்கின்றது. இப் பிராகாரத்தின் துவக்கத்தில் கற்பூரக் கொப்பரை, சுவாமி சந்நிதிக்கு நேராக இருக்கின்றது. கிருத்திகை போன்ற சிறப்பு நாட்களில், ஏராளமான பிரார்த்தனைக் கற்பூரக் கட்டிகள் இதில் எரியும். கோயிலின் சுற்றளவு சுமார் 1,000 அடி. தேர்வீதியை வலமாக வந்தால், தெற்கு வாயிலுக்கு நேராகத் தென் புறத்தில், இந்திர நீலச் சுனை தெரியும். இதன் தீர்த்தந்தான், இன்னும் முருகனுக்குத் தனிச் சிறப்பாகப் பயன்படுகின்றது. இதில் யாரும் இறங்குதல் கூடாது. நின்ற இடத்திலேயே இதனைத் தரிசித்துக் கொண்டு சென்றால், தென் மேற்கு மூலையில், வாகன மண்டபம் இருக்கின்றது. விழாக் காலங்களில், முருகப் பெருமான் இந்த மண்டபத்தில் எழுந்தருளித் தங்குவார். இங்கிருந்தே வாகனங்களில் இவர்ந்து உலாப் போந்து காட்சியளிப்பார்.

அடுத்து, மேற்குப் பிராகாரத்தில் மேல் திருத்தணிக்குப் போகும் மலைப்படிகள் உள்ளன. இப்படிகள் தொடங்கும் இடத்தில், கோயிற் சிவாசாரியப் பெருமக்களின் வீடுகள் உள்ளன. செங்கழுநீர் விநாயகர் கோயிலும் அங்கு உள்ளது. மேற்குப் பிராகாரத்தின் முடிவில், சென்னை ஏல் கம்பெனியார் கட்டிய தரும மண்டபம் உள்ளது. வடக்கு கிழக்கு மேற்குத் தேர் வீதிகளிலிருந்து பார்த்தால், நந்தியாறு தணிகை நகர் முதலிய அழகிய காட்சிகளைக்

காணலாம். வடக்குப் பிராகாரம் முடிவில், வடகிழக்கு மூலைக்கு அருகில் நவாப் வாத்திய மண்டபம் இருக்கின்றது. இங்கு நாள்தோறும் பூசை வேளைகளிலும், உற்சவ காலங்களிலும் மகம்மதியர்கள் வாத்தியம் வாசிப்பார்கள். இந்து முசுலிம் ஒற்றுமையுணர்வுக்கு இது ஒரு நல்ல சான்ருகும். தேர் வீதிப் பிராகாரத்திலிருந்து கிழக்கு வாயிலாகவோ, மேற்கு வாயிலாகவோ சில படிகள் ஏறினல், முருகன் சந்நிதி அடையலாம்.

158630

(11) முதல் உட்பிராகாரம்:

கிழக்கு வாயிலுக்கு வெளியில், வடபுறத்திலுள்ள விநாயகரை வணங்கி, உள்ளே வெளிப் பிராகாரத்தை அடையலாம். இந்தப் பிராகாரத்தில்தான், பிரார்த்தனைக்காரர்கள் கிருத்திகைத் தினங்களில் அங்கப் பிரதட்சிணம் செய்வது வழக்கம். இந்தப் பிராகாரத்தை வலமாக வந்தால், தென் மேற்கு மூலையில், உமாமகேசுவரர் சந்நிதி உள்ளது. இதற்கு அடுத்தாற்போல வடபக்கத்தில் சர்வவாத்திய மண்டபம் உள்ளது. சிறப்பு விழாக் காலங்களில் இங்கு சுவாமியின் முன்பு எல்லா வாத்தியங்களும் வாசிக்கப்படும். மேற்குப் பிராகாரத்தின் மத்தியில், மேற்கு வாயிலுக்குத் தெற்கே, உச்சிப் பிள்ளையார் சந்நிதி இருக்கின்றது. கிழக்குப் பிராகாரத்தில் உள்ள கொடிக் கம்ப விநாயகரையும் ஐராவத யானையையும் தரிசித்து உள்ளே செல்லலாம்.

ஐராவத யானை முருகனை நோக்கிக் கொண்டு நிற்காமல், கிழக்குத் திசையை நோக்கிக் கொண்டு நிற்கின்றது. அதற்குக் காரணம், இந்திரனுக்குரிய வாகனம் ஆகிய ஐராவதம் என்னும் யானை, தெய்வயானையம்மையின் திருமணத்தின் போது சீதனப் பொருளாக இந்திரனுற் கொடுக்கப்பெற்றது. ஐராவத யானை தன்னை விட்டுப் பிரியவே, இந்திரனுடைய செல்வம் குறைந்தது. அக்குறை நீங்க, இந்திரன் இத்தலத்தில் செங்கழுநீர்ப் பூவால் முருகக் கடவுளை வழிபட்டான். வழிபாட்டிற்கு இரங்கி, ஐராவதத்தைக் கொண்டு செல்ல இந்திரனுக்கு முருகன் இசைவு தந்தார். ஆயினும், சீதனமாகத் தந்த பொருளைத் திரும்பப் பெற்றுக் கொள்வது முறையன்று என்று, இந்திரன் தயங்கி மயங்கினன். ஐராவதமும் முருகனுக்கு ஊர்தியாக இருத்தலையே பெரிதும் விரும்பியது. அதுபோது இந்திரன் ''ஐராவதம் இங்குத் தங்கள் சந்நிதியிலேயே தங்கியிருக்கட்டும். ஆனல் கிழக்கேயுள்ள என் உலகை நோக்கிக் கொண்டு இருந்தாற்போதும். என்னுடைய நாடும் செல்வமும் வளங் குன்ருமல் இருக்கும்'' என்று விண்ணப்பித்தான். முருகப் பெருமான் அவ்வாறே அருள் புரிந்தான். அதனலேயே, ஐராவதம் கிழக்குத் திசை நோக்கிக் கொண்டு, முருகன் தன் மீது இவர்ந்து உலாவத் தான் எப்போதும் சித்தமாக இருக்கும் நிலையில், விளங்குகின்றது. இந்த யானையை ''ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி'' என நக்கீரர் சொல்லியவாறு நாம் வணங்கிக் கொண்டு உள்ளே செல்லுதல் வேண்டும்.

செல்லுங்கால், சந்நிதி வாயிலின் தென் புறத்தில் ''பிரசன்னகாதர் ஈசுவரர்'' எனப் படும் சிவசந்நிதி உள்ளது. தனக்கு ஏற்பட்ட இன்னல் ஒன்றை நீக்கி அருள் செய்த காரணத்தால், காதர் என்னும் பெயருள்ள நவாப் ஒருவர், இந்த இலிங்கத்தை நிறுவி, முற்கூறிய நவாப் வாத்திய மண்டபத்தையும் அமைத்து, பூசை வேளைகளில் வாத்தியங்கள் முறையே முழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தார் என்று தெரிகின்றது.

அடுத்து, சந்நிதியின் வாயிலுக்கு வடக்கே கோயிலின் அலுவலகமும், முருகன் கொலுவிருக்கை மண்டபமும் உள்ளன. இந்த மண்டபத்தில் உற்சவ காலங்களில், முருகப் பெருமான் வள்ளிதெய்வயானைஅம்மையருடன், எழுந்தருளி இருப்பது வழக்கம். சந்நிதி வாயிலில் நுழையும் இடத்தில் முகத்துவாரத்துக்கு வடபுறத்தில், பிரார்த்தனைக் காணிக்கைகளைச் செலுத்துவதற்கு உண்டியல் வைக்கப்பட்டிருக்கின்றது. இதைக் கடந்து முகத்துவாரத்தில் நுழைந்தால் உட்பிராகாரத்தை அடையலாம்.

(12) இரண்டாவது உட்பிராகாரம்:

இந்தப் பிராகாரத்தை வலம் வந்தால், தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளியும், தெற்குப் பிராகாரத்தின் மத்தியில் காமாட்சியம்மை உடனுறை ஏகாம்பர ஈசுவரர் சந்நிதியும் இருக்கின்றன. மேற்குப் பிராகாரத்தின் மத்தியில் சண்முக சுவாமியின் மூலவர் சந்நிதி இருக்கின்றது. வடமேற்கு மூலையில் ஆறுமுக சுவாமி அபிடேக மண்டபம் உள்ளது. இம் மண்டபத்தில் சிறிது உற்சவ மூர்த்தியின் சந்நிதி உள்ளது. வடக்குப் பிராகாரத்தில், வடக்குப் புறம் மத்தியில் உள்ள ஒரு தூணின் அருகேயிருந்து மேலே தென்புறமாகச் சாய்ந்து ஒரு துவாரத்தின் மூலமாகப் பார்த்தால், மூலத் தானத்தின் விமானம் காணப்படும்.

இந்தப் பிராகாரத்தில் குமாரலிங்கேசுவரர் சந்நிதி உள்ளது. இதன் கீழ்ப்புற எல்லையில் யாகசாலைக்கு எதிரில், முருகனுக்குப் பயன்படுத்தப் பெறுகின்ற சந்தனக் கலவை அரைப்பதற்கு வேண்டிய, அற்புதமான பெரிய சந்தனக் கல் ஒன்று உள்ளது. இதுவும் தெய்வயானைக்குச் சீதனமாகத் தேவேந்திரன் கொடுத்ததாம். நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக ஓய்வில்லாமல் சந்தனம் அறைக்கப்பெற்று வரினும், இந்தக் கல் தேய்வுபடாமல் எழிலுடன் விளங்கி வருகின்றது. இதில் அரைக்கும் சந்தனம்தான், சுவாமிக்குத் திருமேனிப் பூச்சாகப் பயன்படுத்தப்பெற்று, பின்பு அடியார்களுக்கு ''ஸ்ரீபாத ரேணு'' என்னும் அருட்பிரசாதமாகக் கொடுக்கப்படுகின்றது. இது எல்லா நோய்களையும் தீர்க்கும் மருந்தாக, அடியார்களால் கருதப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதை அறிந்தவர்கள் தங்களுக்கு அளிக்கப்படும் திருமேனிப் பூச்சு (ஸ்ரீபாத ரேணு) என்னும் சந்தனத்தைப் பாதுகாப்பாகப் போற்றி வைத்துக் கொண்டு, நாள்தோறும் மிளகு அளவு உட்கொண்டு வருகின்றனர்.

—தொடரும்



அருள்மிகு ஈச்சநாரி விநாயகர் திருக்கோயில் இராஜகோபுர முகப்புக் கதவிற்குத் தலைவர் திரு. நா. மகாலிங்கம், உபதலைவர் திரு. பி. கே. துரைசாமி அவர்கள் பூஜை செய்யும் காட்சி. (3.6.77)



அருள்மிகு ஈச்சநாரி விநாயகர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழாவில், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர், திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ், கோவை மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி திரு. கே. மலைச்சாமி, எம்.ஏ.பி.எல்., மற்றும் கோவை நகராட்சி தனி அதிகாரி திரு. எஸ். திருமலையப்பன், பி.ஏ.பி.எல்., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

பதிவு எண். எம். 7039



அருள்மிகு ஈச்சநாரி விநாயகர். திருக்கோயில் மகா கும்பாபிஷேகத்தன்று, யாகசாலை முகப்பில் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஸ்ரீ சிவாசாரியர்களை ஆசீர்வதிக்கும் காட்சி (3.6.77).

திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலுக்கு, இராயப்பேட்டையைச் சேர்ந்த திரு வி. ஆர். நாராயணராவ் அவர்கள், யானை ஒன்றை நன்கொடையாக வழங்கிய விழா நிகழ்ச்சியில், நமது ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்களும், துணை ஆணையர் திரு எம். சூரியராஜ், B.A.B.L., அவர்களும், நன்கொடையாளர் திரு வி. ஆர். நாராயணராவ் அவர்களும், உதவியாணையர் திரு சி. சுப்பிரமணியபிள்ளை, B.A.B.L., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல். (22.6.77).

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.